உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தேவார

# தோத்திரத்திரட்டு.

---

இதனுள்,

சைவசமயாசாரியர்களாகிய
நால்வரது சரித்திரமும்
நால்வருந் திருவாய்மலர்ந்தருளிய
தேவார திருவாசகத் திருமுறைகளினின்றும்
தாயுமானவர் திருப்பாடல்களினின்றும்
இராமலிங்கசுவாமி திருவருட்பாவிலிருந்தும்
தெரிந்தெடுக்கப்பட்டனவற்றை
ஒருங்குசேர்த்திரற்றி

சென்னை சூளை,
ஸ்ரீலட்சுமி நாராயண விலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1616





உ

# சிவமயம்.

## திருச்சிற்றம்பலம்.

# திருஞானசம்பந்த சுவாமிகள் சரித்திரம்

சோழமண்டலத்திலே சீர்காழியில் பிராமணகுலோத்துங்
கரான சிவபாதவிருதயருக்கு அவர் மனைவி பகவதியார் வயிற்
றிற் பிறந்து ஆளுடையபிள்ளையாரென்ற திருநாமத்தோடு வள
ர்ந்து மூன்றாம் வயதில் தந்தையார் தூக்கிப்போய்த் தீர்த்தக்க
ரையில் உட்காரவைத்துவிட்டு ஸ்நானஞ் செய்யும்போது பிள்
ளையாருக்குப் பண்டைய வுணர்ச்சியுண்டாகிச் சுவாமியினுடைய
திருவடியைப் பிரிந்திருக்கு மனவருத்தத்தை யுட்கொண்டு
ஆலயசிகரத்தை நோக்கி அம்மேயப்பா) வென்றழ, அதனைக்
கண்டதோணியப்பர் திருவுளமிரங்கித்தேவியாருடன் பிள்ளை
யாரை யணுகித் திருமுலைப்பாலுடன் ஞானவமுதமும் கலந்து
தேவியார் பொற்கிண்ணத்தில் தந்தருளப் பிள்ளை யாருண்டு
அழுகைதீர்ந்திருக்கையில், பிதாவந்து பார்த்துப் பால்கொடுத்
தோர் யாரென்று பயமுறுத்தினர், இவர் கொடுத்தாரென்று
கைவிரலாற் சுட்டி தோடுடையசெவிய, னென்னும் பதிகமோ
திச் சுவாமியைக் காட்ட பிதா வானந்தமடைந்தனர்.

அன்றுமுதல் திருஞானசம்பந்த மூர்த்திநாயனா ரென்னு
ந்திருநாமங்கொண்டு பிதாதோளிற் பொருத்துச்செல்ல வாலய
ஞ்செல்வதுந் தோணியப்பரைத் தரிசிப்பதுந் திருப்பதிகமோ
துவமாயிருந்தனர். பின்பு, திருக்கோலக்காவென்னுந் தலத்து

க்கெழுந்தருளிச்சுவாமி பொற்றாளமருளப்பெற்றப் பதிகமோதித் துதித்துத் தமதூருக்குவந்து சிலநாளிருந்து, திருநனிபள்ளிமுதலிய ஸ்தலங்களுக்குச்சென்று பதிகமோதித் துதித்து மீண்டும் சீர்காழிக்குவந்து சுவாமியைத் தரிசித்துக்கொண்டிருந்தனர்.

இங்ஙனமிருக்கையில் பத்தினியாருடன் வந்த திருநீலகண்ட யாழ்ப்பாணநாயனாரைப் போயழைப்பித்துவந்து சுவாமிதரிசனஞ்செய்வித்து விடுதியமைத்து விருந்துசெய்வித்துபசரித்தனர் பிள்ளையாரருளிய திருப்பதிகங்களைத் தான் யாழிலமைத்துவாசிக்கும்படி கட்டளையிட்டருளும்படி யாழ்ப்பாணர் வேண்ட இவருமிசைந்தனர். பின்பிருவரும் சிதம்பரஞ்சென்று நடராஜமூர்த்தியைத் தரிசித்துப் பதிகமோதி விடைபெற்றுப் புறம்வந்து அங்கு வசிப்பதற்கஞ்சி திருவேட்களத்திற்சென்று பரசிவத்தைத் தரிசித்து வசிக்குமிடமத்தலமாககொண்டு நடராஜரைத் தரிசித்துக்கொண் டிருக்குநாளில், தில்லைவாழ்ந்தனர்கள் நடராஜரை யருச்சிக்கும் பேறுபெற்றார்களே யென்னுங் கருத்துடனொருநாள் சென்றபோது அந்தணர்களெல்லாம் சிவகணங்களாயிருக்கக்கண்டு பாணருக்குங் காண்பித்து திருஎருக்கத்தம்புலியூர் முதலிய ஸ்தலங்களையுந் தரிசித்துத் திருநெய்வாயிலரத்துறைக்கும் போகவிரும்பித் திருவடிவருந்த மெல்லமெல்லச் சென்று மாறன்பாடி யென்னும்பதியி லன்றிரவு தங்கினார்.

சுவாமி தமது திருக்குமாரருடைய வழிவருத்தத்தைத் திருவுளங்கொண்டு முத்துச்சிவக்கையும், முத்துக்குடையும் முத்துச்சின்னங்களுந் தந்தருள நினைத்து அத்தல பிராமணர்

க்கெல்லாம் தனித்தனியே சொப்பனத்திற்றோன்றி (நம்மிடம்வரும் ஞானசம்பந்தனுக்கு இவைகளைக்கொண்டுபோய்க்கொடுங்கள்) என்றருஞ்ஞாபித்தனர். உடனேபிராமணர்கள் விழுத்தெழுந்து கனவின்படி ஆலயத்தி லிருக்கக்கண்டு வியந்து வாத்தியகோஷத்துடன் பிள்ளையாரையணுகு வணங்கிச் சிவபெருமான் தந்த இவைகளை யேற்றருளுமென்றார்கள். பிள்ளையாரும் தாம்கண்டகனவையொத்திருக்கக்கண்டு திருவருளைவியந்து, (எந்தையீசனெம்பெருமா) னென்னும் பதிகம்பாடிச் சிவிகையை வலஞ்செய்து நமஸ்கரித் திலேறி யருளினார். பின்பு ஆலயஞ்சென்று சிவிகையை விட்டிழிந்து சுவாமியைத் தரிசித்துத் துதித்துச் சிலநாளங்கிருந்து திருப்பழுவூர் முதலிய ஸ்தலங்களுக்குச்சென்று தரிசித்துச் சீகாழிக் கெழுந்தருளினார்.

பிள்ளையாருக்கு உபநயனபருவம்வர அதனை முடித்துக்கொண்டங்கிருக்குநாளில் திருநாவுக்கரசுநாயனார் வருவதுகேள்விப்பட்டு எதிர்கொள்ளவரும்பிள்ளையாரை நாயனார் வணங்க அப்பரே எழுந்தருளுமென் றிருகரங்களாலுமெடுத்துபசரித்தழைத்துப்போய்த் தோணியப்பரைத் தரிசித்தார்கள் அப்பமூர்த்தி சிலநாளங்கிருந்து சென்றருளினார் பின்பு பிள்ளையார் மற்றஸ்தலங்களுக்கு செல்லத் திருவுளங்கொண்டு பிதாவுக்கறிவிக்க, அவர் நானும் வருகிறேன் யாகத்திற்குப்பொருளும்வேண்டுமென்ன, பிதாவுடன் புறப்பட்டும் பல ஸ்தலங்களிலுஞ்சென்று தரிசித்துத் திருப்பாச்சிலாச்சிரமத்துக் கெழுந்தருளும்

போது அவ்வூரையாளும் கொல்லிமழவனென்னு மரசன்நக ரையலங்கரித்து எதிர் சென்று வணங்கினன் நாயனார் ஆலயத் துட்சென்று வலஞ்செய்து சந்நிதிக்கெழுந்தருளும்போது ஆங் கோர் கன்னிகை சவம்போலிருக்கண்டுஎன்னென் றவினவ, அரசன்றொழுது அவள்தன் புதல்வியென்று முயலகநோய் க ண்டு சீராமையா லங்குகொணர்ந்து கிடத்தியதாகவும் சொன் னான். அதனைக்கேட்டன்புகூர்ந்து (துணிவளர்திங்கள்) என் னும் பதிமோதித் துதிசெய்யவியாதிநீங்கியெழுந்து பிதாவின ருகிற்போய் நின்றாள். அரசன் கண்டு ஆனந்தங்கொண்டு மக ளுடன் வந்து நாயனார் திருவடிகளை வணங்க அதனைக்கண்டு கிருபைசெய்து சுவாமியைத் தரிசித்துக் சிலநாளங்கிருந்து புறப்பட்டு திருக்கொடிமாடச்செங்குன்றூரில் வந்து வீற்றிரு ந்தனர் குளிர்காலமாகையா லங்கிருப்போர்களுக் கப்போதுவரு நளிர்ச்சுரம் தமது திருக்கூட்டத்தாருக்கும் கண்டதறிந்து (அவ்வினைக்கிவ்வினை) யெனுந் திருநீலகண்டப் பதிகமோதித் துதிக்க அப்பிணி திருக்கூட்டத்தாரையும் ஊரையும்விட்டு நீங்கியது

அங்கிருந்து புறப்பட்டுமற்றஸ்தலங்களுக்குச்சென்று தரி சித்துத் திருப்பட்டீச்சுரத்துக் கெழுந்தருளும்போதுநாயனாருக் குத்தெரியாவண்ணம் சிவகணங்கள் முத்துப்பந்தரைக் கொ ண்டு வந்து வெயில்வெப்பந்தணிப்பதற்குப் பரமசிவன் கட் டளையிட்டனுப்பியதென்று சொல்லுமொலியும் பந்தரு மகாய த்திற் றோன்றநோக்கி இதுவு நம்மிறைவர் கட்டளையாகில் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றிசைந்து சிவிகையை விட்டிற

ங்கப் பணிந்தபோது பந்தர்க்கால்களைப் பரிசனத்தார் கைக்கொண்டார்கள். பிறகு திருப்பட்டீச்சரமுதலிய ஸ்தலங்களைத் தரிசித்துத் திருவாவடுதுறைக்கெழுந்தருளிச் சிவனைத்தரிசித்துப் பதிகமோதி வீற்றிருந்தனர் வேள்விக்குப் பொருள் வேண்டுமெனப் பிதாசொல்ல, நாயனார் ஆலயஞ்சென்று பதிகமோதியவளவில் பரமசிவன் கட்டளையா லாயிரம் பொன்னுள்ள வொருமுடிச்சை யொருபூதம் கொண்டுவந்து பலிபீடத்தின்மேல்வைத்து நாயனாருக்கெதிரில் நின்று இப்பொன்முடி எடுக்கவெடுக்கக் குறையாது, இதனைப் பரமசிவன் கட்டளையின்படி உமக்குக்கொண்டுவந்தேனென்றுரைக்க, நாயனார் பணிந்தெடுத்துப் பிதாவிடம் கொடுத்துப் பிறருக்கும் யாகம் செய்யவுதவும்படி சொல்லியனுப்பிவிட்டு அங்கிருந்து புறப்பட்டுப் பாணரது தாயின் ஜனனபூமியாகிய திருத்தருமபுரத்திற்கெழுந்தருளத் தம்மைவணங்கிய சுற் த்தாரைப்பாணர்நோக்கி நாயனாருளிச்செய்யும் பதிகங்களை யாழிலமைத்து வாசிக்கும் பேறுபெற்றிருப்பதாகச்சொல்ல அதற்கவர்கள் நீர் யாழிலமைத்து வாசிப்பதினாலேயே அப்பதிகந்தேசமெங்கும் விளக்கமுற்றிருக்கின்றனவென்று சொன்னார்கள் பாணரஞ்சி நாயனாரிடம் விண்ணப்பம்பண்ணி யாழிலமையாவண்ண மொரு பதிகமருளவேண்டுமென அவ்வாறே யாழ்முரியாகிய (மாதர் மடப்பிடி) என்னும் பதிகமருள, அது யாழிலிசையாமையால் பயந்துயாழினை யெடுத்ததினாலன்றோ வாசிப்போமென்னுமெண்ணங்கொள்ள நேர்ந்ததென் றதனையுடைக்க வோங்கிய போது நாயனார்தடுத்துப் பதிகம் சிவகிருபையால் வருவதா

தலி னியன்றமட்டும் வாசிக்கவேண்டுமென்றசொல்லிக் கொடு
த்தருளவணங்கிப்பெற்றுத்துதித்தனர். பின்புபிள்ளையார் திரு
ச்சாத்தமங்கைக்கெழுந்தருளித் திருநீலநக்கநாயனாரா லுபசரிக்க
ப்பட்டுத் திருக்கடனாகைக்கா ரோணமுதலிய ஸ்தலங்களைத்
தரிசித்துச்சிறுத்தொண்டநாயனார்வணங்க திருச்செங்காட்ட
ங்குடிக்குச்சென்று சுவாமியைத்தரிசித்து அந்நாயனாரைச் சிற
ப்பித்துப் பதிகமோதி அவராலுபசரிக்கப்பட்டுத் திருமருகலு
க்கெழுந்தருளித்தரிசித்து வீற்றிருந்தனர். அங்கொருநாள் தரி
சனத்திற் கெழுந்தருளும்போது ஓர்மடத்து ளொரு கன்னி
கை யழுவதைக்கேட்டு அங்குசென்றவளை வினவ தன்றகப்
பனுக்கேழு பெண்களென்றும், அவனது சகோதரி மகனுக்கு
முறையே ஒவ்வொருபெண்ணைத் தருவதா யேமாற்றி ஆறு
பெண்களையும் பிறருக்கு விவாகஞ்செய்து கொடுத்துவிட்டா
யும் கடைசியாகத்தன்னையும் பிறனுக்குக்கொடுக்கவெத்தனி
த்ததை யவனறிந்து விசனப்படுவதைத்தான் பார்த்து மனஞ்
சகியாதவனை யழைத்துக்கொண்டு வரும் பாதையிலிரவு அம்
மடத்திற் றங்கியதாயுஞ் சர்ப்பந்தீண்டி யிறந்தானென்றுஞ்
சொல்லி தேவரீ ரிரட்சிக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செ
ய்யப்பிள்ளையார் கிருபைகூர்ந்து(சடையாயெனுமா) வென்னுந்
திருப்பதிகமோதி யவனைப்பிழை பித்து இருவருக்கும் மண
முஞ் செய்வித்தனுப்பினர்.

பிறகு திருப்புகலூரைத் தொழச்செல்லும்போது முருக
நாயனா ரெதிர்கொள்ளச்சென்று வர்த்தமானீச்சரத்தை வண
ங்கிமுருகநாயனாரது திருத்தொண்டைச் சிறப்பித்துப் பதி

கம்பாடி திருப்புகலூரிலிருந்தனர் அத்தருணத்தில் அப்பமூர்த்தி வருவதை நோக்கி யெதிர்கொண்டுபோ யொருவரையொருவர் வணங்கி அப்பர் திருவாரூரிலிருந்து வருவதாகச் சொல்லக்கேட்டு இப்போதாங்கு நடக்குஞ் சிரப்பு யாதென்றுவினவ அவரும் பதிகத்தாற் சிறப்பித்துச் சொல்லக்கேட்டு அங்கிருந்து புறப்பட்டு திருவாரூர் முதலியஸ்தலங்களுக்குப்போய்த் தரிசித்து மீண்டுந்திருப்புகலூருக்கெழுந்தருள அப்பரும் முருகநாயனாரு மெதிர்கொள்ளச்சென்றங்கிருந்தனர் பிறகு அப்பருடன்புறப்பட்டு திருவம்பர் திருக்கடவூர் முதலிய ஸ்தலங்களை தரிசித்து திருவீழிமிழலைக்குச்சென்றுபதிகமோதிவீற்றிருக்குநாளில் மழையின்மையால்பஞ்ச மதிகரித் துயிர்களெல்லாம்வருந்துகையில் இவ்விருவர்சொப்பனத்திலும் பரமசிவனெழுந்தருளிக் கருணை செய்தபடி கிழக்கு மேற்குப் பீடங்களிலிருந்த பொற்காசுகளை முறையே சம்பந்தரும், அப்பருமெடுத்து அடியார்களுக் கமுதுபடைத்துக்கொண்டிருந்து பஞ்சநீங்கியபின் புறப்பட்டு திருமறைக்காட்டிற்சேர்ந்து வேதம்பூசித்து மூடிப்போன கதவை அப்பமூர்த்தியாற்றிரப்பித்துப் பின்பது திறக்கவு மூடவுமாயிருக்கும்படி சம்பந்தமூர்த்தி பதிகமோதித் துதித்தங்கிருந்தனர்.

அந்நாளில் மதுரையில் சமணசமயமேலிட்டுகூன் பாண்டியராஜனு மதற்குட்பட சைவப்பற்று விடாதிருந்தஅரசன் பத்தினி மங்கையர்க்கரசியாரும் மந்திரிகுலச்சிறைநாயனாரும் சொல்லியனுப்பியதைக் கேள்வியுற்று சம்பந்தர் மதுரைக்குச் சென்று

சுவாமியைத் தரிசித்து அங்கொரு மடத்திலிருக்கையி லன்றி ரவு சமணர்களம்மடத்திற் றீயிடக்கண்டு இப்வெப்பம் பாண்டி யனைச் சேரக்கடவதென்று பதிகமோதியருளாலு முடனே பாண்டியனுக்குச் சுரவியாதியுண்டாகி வருந்துகையில் சமணர் களுடைய மணிசந்திர ஔஷதங்களாற் றீராமைகண்டு பத்தி னியுமந்திரியும் வேண்டப் பிள்ளையாரெழுந்தருளினர். சமணர் கள் தாங்கள் அரசன்இடப்பாகத்தைச் சுகப்படுத்துவதாயும் பிள்ளையார்வலப்பாகத்தைச் சுகப்படுத்தும்படிக்குச் சொல்ல; பிள்ளையார் (மந்திரமாவது நீறு) என்னுந் திருநீற்வப்பதிகமோ தி வலப்பாகத்தில் விபூதியைப்பூச, அப்பாகம் சொஸ்தமாகி இடப்பாகம் சமணர்களாற் சொஸ்தமாகாம லிருமடங்காய் வரு த்த அதனைச் சகிக்கொணுது பின்னுமரசன் வேண்ட இடப் பாகத்திலும் விபூதியைப் பூசினர் உடனே வியாதிநீங்கி யரச னது கூனு நிமிர்ந்தது. பின்பு சமணர்கள் தங்களுண்மைப் பொருளையொரு ஏட்டிலெழுதித்தீயிலிட்டார்கள் பிள்ளையா ரும் (போகமார்த்த பூண்முலையா) ளென்னுந் திருநள்ளாற்றுப் பதிக மெழுதியிருக்கு மேட்டினை தீயிலிட்டனர். பிள்ளை யாரிட்ட ஏடு வேகாமலிருந்தது. மூன்முந்தடவையுந் தோற் ருற் கழுவிலேறுகிறோமென்று சமணர்கள் சொல்லித் தாங்க ளுண்மையாக்கொண்டிருக்கு மேட்டினையு நாயனு (வாழ்கவ ந்தணர்) என்னும்பாசுரம் பத்துந் திருக்கடைக்காப்புமெழுதிய வவ்வேட்டினையும் வைகையிலிட சமணர்களோடு வெள்ளத்தி ன்வழியே சென்றது நாயனுரோடே எதிரிட்டுச்சென்று திரு ஏடகமென்னுந் தலத்திற்கருகேநிற்க மந்திரி குதிரை மேற்செ

ன்று ஏட்டினை யெடுத்துவரக்கண்ட சமணர்கள் கழுவிலேறி னார்கள். அந்நாட்டி லெல்லோரும் சைவரானார்கள்.

அதன்பின்பு பாண்டியநாட்டிலும், ஈழநாட்டிலும், சோழ நாட்டிலுமுள்ள ஸ்தலங்களையெல்லாந்தரிசித்துக்கொண்டு திருக்கொள்ளம்பூதூருக்குச் செல்லும்போது எதிரே ஆறு பெருகுதலைக் கண்டு அங்கிருந்த வோடத்தின் கட்டையவிழ்த் தடியார்களை யதிலேற்றி (கொட்டமே கமழும்) என்னும் பதிகம்பாடி அக்கரைசேர்ந்து சுவாமியைத் தரிசித்து திருத்தனிச்சேரியென்னுந் தலத்துக்கருகில் வரும்போது புத்தநந்தியென்னும் பௌத்தன தடுத்தனன் அடியாருளொருவராகிய சம்பந்தசரணாலய ரென்பவர் புத்தர்சமண்தருக்கையர் என்று முன்னம் நாயனாருளிய பதிகத்தை யோதியவளவி லவன்றலையி விடிவிழுந்திறந்தான் இதுகண்டு பௌத்தரெல்லாமோடி மீண்டும் வந்து வாதுக்கிசைந்து தோல்வியடைந்து விபூதிதரித்துச் சைவரானார்கள் பிறகு தொண்டைநாட்டில் திருவொத்தூரில் ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கி திருவொற்றியூருக்கெழுந்தருளினார்.

திருமயிலையில் சிவநேசசெட்டியார் புத்திரி பூம்பாவையென்றவள் தோழிசளோடு மலர்கொய்யப்போய் சர்ப்பந்தீண்டியிறந்தனள். செட்டியார் தன்செல்வத்தோடு புத்திரியை திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருக்குக் கொடுப்பதாய் முன்னமே நியமித்திருந்தமையால் இறந்த மகளைத்தகனம்செய்து சாம்பரை அஸ்தியுடன் குடத்தில்வைத்துப் பதனம்செய்திருந்தனர் அவர் திருவொற்றியூருக்கு வணங்கியழைக்க நாயனார்

திருமயிலைக்கெழுந்தருளிக் குடத்தைக் கொண்டுவரச்சொல்லி மட்டிட்ட புன்னியங்கானன் மடமயிலைச்) யென்னும் பதிகமோதி எலும்மைப்பெண்ணாக்கி மற்றஸ்தலங்களையுந் தரிசித்துச்சீர்காழிக்கெழுந்தருளினார்

தந்தைமுதலியோர் பிரார்த்திக்க விவாகத்திற்கிணங்கி நல்லூர் பெருமணத்திற்குச்சென்று நம்பியாண்டாரது குமாரத்தியை விதிப்படி சிறப்புடன் திருமணங்கொண்டு ஓமாக்கினியை வலம்வரவெழுந்து தாம் வலஞ்செய்யத்தக்க வக்கினி பரமசிவனேயென்று மனைவி கைப்பற்றி ஆலயஞ்சென்று நல்லூர்ப்பெருமணம் என்னும் பதிகமோதியவளவில் ஈசன் கிருபைகூர்ந்துஉன் காதலியோடு நம்மிடத்துக்குவா வென்றருளியவுடன் அவ்வாலயமுழுதுஞ் சோதியாய் வாயிலை வகுத்துக்காட்டநமசிவாயத் திருப்பதிகமோதி அங்கெழுந்தருளிய வெல்லோரையுமதற்குட்போகச்சொல்லிப் பின்பு தாமுந் தம்முடைய மனைவியார்கையைப் பற்றியபடியே அந்த சோதிக்குட்போய் கலந்துசிவாசாயுச்சியமடைந்தனர் அப்பாற் சோதி மறைந்து முன்போல வாலயமாகவிருந்தது.

திருசிற்றம்பலம்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

## திருஞானசம்பந்த சுவாமிகள்

அருளிச்செய்த

# தேவாரப்பதிகங்கள்

திருப்பிரமபுரம்-பண்-நட்டபாட்டை

திருச்சிற்றம்பலம்.

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடி
காடுடையசுடலைப் பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வ
னேடுடையமல ரான்முனநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே. 1

முற்றலாமையிள நாகமோடேன முளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகல னப்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடையார்பெரியார்கழல் கையாற்றொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 2

நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர் நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தவின வெள்வளைசோரவென் னுள்ளங்கவர்கள்வ
னூர்பரந்தவுல கின்முதலாகிய வோரூரிதுவென்னப்
பேர்பரந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 3

விண்மகிழ்ந்தம்மதி ளெய்ததுமன்றி விளங்குதலையோட்டி
லுண்மகிழ்ந்துபலி தேரியவந்தென துள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தவர வம்மலர்க்கொன்றை மலிந்தவரைமாற்பிற்
பெண்மகிழ்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 4

ஒருமைபெண்மையுடையன்சடையன்விடை யூரும்மிவனென்
வருமையாகவுரை செய்யவமர்ந்தெனை துள்ளங்கவர்கள்வன் (ன
கருமைபெற்றகடல் கொள்ளமிதந்ததோர்காலம்மிதுவென்னப்
பெருமைபெற்றபிர மாபுரமேவிய பெம்மானிவனென்றே 5

மறைகலந்தவொலி பாடலொடாடல ராகிமழுவேந்தி
யிறைகலந்தவின வெள்வளைசோரவென்னுள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடி யார்பொழில்நீடுயர் சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே 6

சடைமுயங்குபுன லன்னனலன்னெரி வீசிச்சதிர்வெய்தி
யுடைமுயங்குமர வோடுழிதந்தெனை துள்ளங்கவர்கள்வன்
கடைமுயங்குகழு சூழ்குளிர்கானல் பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 7

வியரிலங்குவரை ரிந்தியதோள்களை வீரம்விளைவித்த
வுயரிலங்கையரை யன்வலிசெற்றெனை துள்ளங்கவர்கள்வன்
றுயரிலங்குமுல கிற்பலவூழிக டோன்றும்பொழுதெல்லாம்
பெயரிலங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 8

தாணுதல் செய்திறை காணியமாலொடு தண்டாமரையானு
நீணுதல்செய்தொழி யந்நிமிர்ந்தானென துள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செயம்மக ளிர்ம்முதலாகிய வையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 9

புத்தரோடுபொறி யில்சமணும்புறங் கூறநெறிநில்லா
வொத்தசொல்லவுல கம்பலிதேர்ந்தெனை துள்ளங்கவர்கள்வன்

மத்தயானைமறு கவ்வுரிபோர்த்ததோர் மாயம்மிதுவென்னப்
பித்தர்போலப்பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே. 10
அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர்மேய
பெருநெறியபிரமாபுரமேவிய பெம்மானிவன்றன்னை
யொருநெறியமனம் வைத்துணர்ஞானசம்பந்தனுரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர் தொல்வினை தீர்தலெளிதாமே. 11

திருச்சிற்றம்பலம்.

## கோயில் பண் குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கற்றாங்கெரியோம்பிக் கலியைவாராமே
செற்றார்வாழ்தில்லைச் சிற்றம்பலமேய
முற்றாவெண்டிங்கண் முதல்வன்பாதமே
பற்றாநின்றாரைப் பற்றாபாவமே. 1

சிறப்பைப்படுத்தெங்கும் பசுவேட்டெரியோம்புஞ்
பிறப்பவர்வாழ்தில்லைக் சிற்றம்பலமேய
மறப்பில்பெருமானைப் பின்றாழ்சடையானை
றைப்பில்லார்கண்டீர் மையல்தீர்வாரே. 2

மையாரொண்கண்ணார் மாடநெடுவீதிக்
கையாற்பந்தோச்சுங் கழிசூழ்தில்லையுட்
பொய்யாமறையாடல் புரிந்தானுலகேத்தச்
செய்யானுறைகோயில் சிற்றம்பலந்தானே. 3

பறைவெண்கொடிதாட நெற்றிநேர்தீண்டப்
பிறைவமக்திறைதாக்கும் பேரம்பலந்தில்லைச்
சிறைவண்டறையோவாச் சிற்றம்பலமேய
விறைவன் கழலேத்து மின்பமின்பமே. 4

செல்வநெடுமாடஞ்சென்றுசேணோங்கிச்
செல்வமதிதோயச்செல்வமுயர்கின்ற
செல்வர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
செல்வன்கழலேத்துஞ்செல்வஞ்செல்வமே 5

வருமாந்தளிர்மேனி மாதோர்பாகமாந்
திருமாந்தில்லையிற்சிற்றம்பலமேய
கருமானுரியாடைக்கறைசேர்கண்டத்தெம்
பெருமான்கழலல்லார்பேணாதுள்ளமே 6

அலையார்புனல்சூடிபாகத்தொருபாக
மலையான்மகளோடுமகிழ்ந்தானுலகேத்தச்
சிலையாலெயி லய்தான்சிற்றம்பலந்தன்னைத்
தலையால்வணங்குவார்தலையானார்களே 7

கூர்வாளரக்கன்றன்வலியைக்குறைவித்துச்
சீராலேமல்குசிற்றம்பலமேய
நீரார்சடையானைநித்தலேத்துவார்
தீராநோயெல்லாந்தீர்தறிண்ணமே 8

கோணாகணையானுங்குளிர்தாமரையானுங்
காணார்கழலேத்தக்கனலாயோங்கினான்
சேணார்வாழ்தில்லைச்சிற்றம்பலமேத்த
மாணாநோயெல்லாம்வாளாமாயுமே 9

பட்டைத்துவராடைப்படிமங்கொண்டாடு
முட்டைக்கட்டுரைமொழிவகேளாதே
சிட்டர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
நட்டப்பெருமானைநாளுந்தொழுவோமே 10

ஞாலத்துயர்காழிஞானசம்பந்தன்
சீலத்தார்கொள்கைச்சிற்றம்பலமேய
சூலப்படையானைச்சொன்னதமிழ்மாலை
கோலத்தாற்பாடவல்லார்நல்லாரே 11

திருச்சிற்றம்பலம்.

## கோயில் பண் காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஆடினாய்நறுநெய்யொடு பாறயிரந்தணர் பிரியாதசிற்றம்பல
நாடினாயிடமாநறுங்கொன்றைநயந்தவனே டிங்கள்
பாடினாய்மறையோடுபல்கீதமும்பல்சடைபனிகால்கதிர்வெண்
சூடினாயருளாய்சுருங்கவெந்தொல்வினையே 1

கொட்டமேகமழுங் குழலாளொடுகூடினாயெருதேறினாய்நுதல்
பட்டமேபுனைவாயிசைபாடுவபாரிடமா [ல
நட்டமேநவில்வாய்மறையோர் தில்லைநல்லவர்பிரியாதசிற்றம்ப
மிட்டமாயுறைவாயிவை மேவியதென்னைகொலோ 2

நீலத்தார்கரியமிடற்றார்நல்லநெற்றி மேலுறைகண்ணினார்பற்
சூலத்தார்சுடலைப் பொடிநீறணிவார்சடையார் [று
சீலத்தார்தொழுதேத்துசிற்றம்பலஞ்சேர்தலாற்கழற்சேவடி
கைதொழ, கோலத்தாயருளாயுனக்காரணங்கூறுதுமே. 3

கொம்பலைத்தழகெய்தியநுண்ணிடைக்கோலவாண் மதிபோல்
முகத்திரண், டம்பலைத்தகண்ணாண்முலைமேவியவார்சடை
யான், கம்பலைத்தெழுகாமுறுகாளையர்காதலாற்கழற்சேவடி
கைதொழ, வம்பலத்துறைவானடியார்க்கடையாவினையே. 4

தொல்லையாரமுதுண்ண நஞ்சுண்டதோர் தூமணிமிடறு பகு
வாயதோர், பல்லையார்தலையிற்பலியேற்றுழல்பண்டரங்கா
தில்லையார்தொழுதேத்து சிற்றம்பலஞ்சேர்த்தலாற்கழற்சேவ
டிகைதொழ, வில்லையாம்வினைதானெரியம்மதிலெய்தவனே. 5

ஆகந்தோயணி கொன்றையாயனலங்கையாயமர்க்கமராவுமை
பாகந்தோய்பகவாபலியேற்றுழல்பண்டரங்கா
மாகந்தோய்பொழின்மல்குசிற்றம்பல மன்னினாய்மழுவாளினாய
நாகந்தோயரையாயடியாரைநண்ணாவினையே 6

சாதியார்பளிங்கினொடுவெள்ளியசங்கவார்குழையாய்திகழ்ப்
வேதிடாவிதிர்தாவிழவாரணிதில்லைதன்னுள் (படும்
ளாதியார்க்கிடமாயசிற்றம்பலமங்கையாற்றொழவல்லடியார்களை
வாதியாதகலுந்நலியாமலிதீவினையே 7

வேயினார்பணைத்தோளியோடாடலை வேண்டினாய்விகிர்தாவயி
தாயினாயிடுகாட்டெரியாலமர்ந்தவனே (ர்கட்கமு
தீயினார்கணையாற்புரமூன்றெய்த செம்மையாய்திகழ்கின்றசிற்
மேயினாய் கழலேதொழுதெய்துதுமேலுலகே (றம்பல

தாரினார்விரிகொன்றையாய்மதிதாங்கு நீள்சடையாய்தலைவாக
தேரினார்மறுகிற்றிருவாரணி தில்லைதன்னுட் (ல்ல
சீரினால்வழிபாடொழியாததோர்செம்மையாயழகாயசிற்றம்பல
மேரினாலமர்ந்தாயுன்சீரடியேத்துமே 9

**வெற்றரையுழல்வார்துவராடையர்வேடத்தாரவர்களுரை**
**மற்றவருலகின்னவலம்மவைமாற்றகில்லார் (கொள்ளனமீன**
**கற்றவர்தொழுதேத்துசிற்றம்பலம் காதலாற்கழற்சேவடிகை**
**உற்றவருலகின்னுறுதிகொளவல்லவரே. (தொழ**

காறுபூம்பொழினண்ணிய காழியுண்மறைவல்லஞானசம்பந்த்
னூறுமின்றமிழாலுயர்ந்தாருறைதில்லைதன்னு
ளேறுதொல்புகழேந்துசிற்றம்பலத் தீசனையிசையாற்சொன்ன
கூறுமாறுவல்லாருயர்ந்தாரொடுங்கூடுவரே (பத்திவை

திருச்சிற்றம்பலம்.

## திரு அண்ணாமலை பண் தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

பூவார்மலர்கொண்டடியார்தொழுவார்புகழ்வார்வானோர்கள்
மூவார்புரங்களெரித்தவன்று மூவர்க்கருள்செய்தார்
தூமாமழைநின்றதிரவெருவித்தொறுவின்னிரையோடு
மாமாம்பிணைவந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே 1

மஞ்சைப்போழ்ந்தமதியஞ்சூடும்வானோர்பெருமானார்
நஞ்சைக்கண்டத்தடக்குமதுவுநன்மைப்பொருள்போலும்
வெஞ்சொற்பேசும்வேடர்மடவாரிதணமதுவேறி
யஞ்சொற்கிளிகளாயோவென்னுமண்ணாமலையாரே. 2

ஞானத்திரளாய்நின்றபெருமானல்லவடியார்மே
லூனத்திரளைநீக்குமதுவுமுண்மைப்பொருள்போலு
மேனத்திரளோடினமான்கரடியிழியவிரவின்க
ணானைத்திரள்வந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. 3

இழைத்தவிடையாளுமையாள்பங்கரிமையோர்பெருமானார்
தழைத்தசடையார்விடையொன்றேறித்தரியார்புரமெய்தார்
பிழைத்தபிடியைக்காணாதோடிப்பெருங்கைமதவேழ
மழைத்துந்திரிந்தங்குறங்குஞ்சாரலண்ணாமலையாரே 4

உருவிற்றிகழுமுமையாள்பங்கரிமையோர்பெருமானார்
செருவிலொருகால்வளையவூன்றிச்செந்தீயெழுவித்தார்
பருவிக்குறவர்புனத்திற்குவித்தபருமாமணிமுத்த
மருவித்திரளோடியுஞ்சாரலண்ணாமலையாரே. 5

எனைத்தோரூழியடியாரேத்தவிமையோர்பெருமானார்
நினைத்துத்தொழுவார்பாவந்தீர்க்குநிமலருறைகோயில்
கனைத்தமேதிகாணாதாயன்கைமேற்குழலூத
வனைத்துஞ்சென்றுதிரளுஞ்சாரலண்ணாமலையாரே. 6

வந்தித்திருக்குமடியார்தங்கள்வருமேல்வினையோடு
பந்தித்திருந்தபாவந்தீர்க்கும்பரமனுறைகோயில்
முந்தியெழுந்தமுழவினோசைமுதுகல்வரைகண்மே
லந்திப்பிறைவந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. 7

மறந்தான்கருதிவலியைநினைந்துமாறாயெடுத்தான்றோ
ணிறந்தான்முரியநெரியவூன்றிநிறையவருள்செய்தார்
திறந்தான்காட்டியருளாயென்று தேவரவர்வேண்ட
வரந்தான்காட்டியருளிச்செய்தாரண்ணாமலையாரே. 8

தேடிக்காணார்திருமால்பிரமன்றேவர்பெருமானை
மூடியோங்கிமுதுவேயுகுத்தமுத்தம்பலகொண்டு
கூடிக்குறவர்மடவார்குவித்துக்கொள்ளவம்மினென்
றாடிப்பாடியளக்குஞ்சாரலண்ணாமலையாரே. 9

தட்டையிடுக்கித்தலையைப்பறித்துச்சமணேநின்றுண்ணும்
பிட்டர்சொல்லுக்கொள்ளவேண்டாபேணித்தொழுமின்கள்
வட்டமுலையாளுமையாள்பங்கர்மன்னியுறைகோயி
லட்டமாளித்திரள்வந்தணையுமண்ணாமலையாரே. 10

அல்லாடரவமியங்குஞ்சாரலண்ணாமலையாரை
நல்லார்பரவப்படுவான்காழிஞானசம்பந்தன்
சொல்லான்மலிந்தபாடலானபத்துமிவைகற்று
வல்லாரெல்லாம்வானோர்வணங்கமன்னிவாழ்வாரே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருநெய்த்தானம். பண் நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

மையாடியகண்டன்மலைமகள்பாகமதுடையான்
கையாடியகேடிற்கரியுரிமூடியவொருவன்
செய்யாடியகுவளைம்மலர்நயனத்தவளோடுந்
நெய்யாடியபெருமானிடநெய்த்தானமெனீரே. 1

பறையும்பழிபாவம்படுதுயரம்பலதீரும்
பிறையும்புனலரவும்படுசடையெம்பெருமானூ
ரறையும்புனல்வருகாவிரியலைசேர்வடகரைமேல்
நிறையும்புனைமடவார்பயில்நெய்த்தானமெனீரே. 2

பேயாயினபாடப்பெருநடமாடியபெருமான்
வேயாயினதோளிக்கொருபாகம்மகிழ்வுடையான்
தாயாகியவுலகங்களைநிலைபேறுசெய்தலைவன்
நேயாடியபெருமானிடநெய்த்தானமெனீரே. 3

சுடுநீறணியண்ணல்சுடர்சூலம்மனலேந்தி
நடுநள்ளிருண்டமாடியநம்பன்னுறையிடமாங்
கடுவாளிளவரவாடுமிழ்க்கடனஞ்சமதுண்டா
னெடுவாளைகள்குதிகொள்ளுயர்நெய்த்தானமெனீரே 4

நுகராரமோடேலம்மணிசெய்பொன்னுரையுந்திப்
பகராவருபுனல்காவிரிபரவிப்பணிந்தேத்துந்
நிகரான்மலிடுதண்கரைநிகழ்வாயநெய்த்தான
நகரானடியேத்தநமைநடலையடையாவே 5

விடையார்கொடியுடையவ்வண்ணல் வீழ்ந்தார்வெளையெலும்பும்
உடையார்நறுமாலைச்சடையுடையாரவர்மேய
புடையேபுனல்பாயும்வயல்பொழில்சூழ்நெய்த்தானம்
அடையாதவரென்றும்மமருலகமடையாரே 6

நிழலார்வயல்கமழ்சோலைகணிறைகின்றநெய்த்தானத்
தழலானவனனலங்கையிலேந்தியழகாய்
கழலானடிநாளுங் கழலாதேவிடலின்றித்
தொழலாரவர்நாளுந்துயரின்றித்தொழுவாரே. 7

அறையார்கடலிலங்கைக்கிறையணிசேர்கயிலாய
மிறையாரமுனெடுத்தானிருபதுதோளுரவூன்றி
நிறையார்புனனெய்த்தான்நன்னிகழ்சேவடிபரவக்
கறையார்கதிர்வாளீந்தவர்கழலேத்துதல்கதியே. 8

கோலம்முடிநெடுமாலொடுகொய்தாமரையானுஞ்
சீலம்மறிவரிதாயொளிதிகழ்வாய்நெய்த்தானங்
காலம்பெறமலர்நீரவைதூவித்தொழுதேத்தும்
ஞாலம்புகழடியாருடலுறுநோய்நலியாவே. 9

மத்தம்மலிசித்தத்திறைமதியில்லவர்சமணர்
புத்தரவர்சொன்னமொழிபொருளாநினையேன்மி
னித்தம்பயினிமலன்னுறைநெய்த்தானமதேத்துஞ்
சித்தம்முடையடியாருடல்யேறுநோயடையாவே. 10

தலமல்கியபுனற்காழியுட்டமிழ்ஞானசம்பந்தன்
நிலமல்கியபுகழான்மிகுநெய்த்தானனைநிகரில்
பலமல்கியபாடல்லிவைபத்தும்மிகவல்லார்
சிலமல்கியசெல்வன்னடிசேர்வார்சிவகதியே. 11

திருச்சிற்றம்பலம்

---

## திருப்பழனம் பண் தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

வேதமோதிவெண்ணூல்பூண்டுவெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப்பொலியவருவார் புலியினுரிதோலார்
நாதாவெனவுநக்காவெனவுநம்பாவெனநின்று
பாதந்தொழுவார்பாவந்தீர்ப்பார்பழனநகராரே 1

கண்மேற்கண்ணுஞ்சடைமேற்பிறையுமுடையார்காலனைப்
புண்ணாறுதிரமெதிராறோடப்பொன்றப்புறந்தாளா
லெண்ணாதுதைத்தவெந்தைபெருமானிமவான்மகளோடும்
பண்ணார்களிவண்டறைபூஞ்சோலைப்பழனநகராரே. 2

பிறையும்புனலுஞ்சடைமேலுடையார் பறைபோல்விழிகட்பே
யுறையுமயானமிடமாவுடையாருலகர்தலைமக
னறையுமலர்கொண்டடியார்பரவியாடல்பாடல்செய்
பறையுஞ்சங்கும்பலியுமோவாப்பழனநகராரே. 3

உரமன்னுயர்கோட்டுலறுகூகையலறுமயானத்தி
லிரவிற்பூதம்பாடவாடியெழிலாரலர்மேலைப்
பிரமன்றலையின்றவமேற்றபெம்மானெமையாளு
பரமன்பகவன்பரமேச்சுவரன்பழனநகராரே. 4

குலவெஞ்சிலையால்மதின்மூன்றெரித்தகொல்லேறுடையண்ணல்
கலவமயிலுங்குயிலும்பயிலுங்கடல்போற்காவேரி
நலமஞ்சுடையநறுமாங்கனிகள்குதிகொண்டெடதிருந்திப்
பலவின்கனிகள்திரைமுன்சேர்க்கும்பழனநகராரே. 5

வீளைக்குரலும்விளிசங்கொலியும்விழவென்னொலியோவா
மூளைத்தலைகொண்டடியாரேத்தப்பொடியாடிதிளெய்தா
ரீளைப்படுகிலிலையார்தெங்கிற்குலையாவாழையின்
பாளைக்கமுகின்பழம்வீழ்சோலைப்பழனநகராரே. 6

பொய்யாமொழியார்முறையாலேத்திப்புகழ்வார்திருமேனி
செய்யார்கரியமிடற்றார்வெண்ணூல்சேர்ந்தவகலத்தார்
கையாடலினார்புனலான்மல்குசடைமேற்பிறையோடும்
பையாடரவமுடனேவைத்தார்பழனநகராரே. 7

மஞ்சோங்குயரமுடையான்மலையைமாறாயெடுத்தான்றோ
ளஞ்சோடஞ்சுமாறுநான்குமடரவூன்றினார்
நஞ்சார்சுடலைப்பொடிநீறணிந்தநம்பான்வம்பாரும்
பைந்தாமரைகள்கழனிசூழ்ந்தபழனநகராரே. 8

கடியார்கொன்றைச்சுரும்பின்மாலை கமழ்புன்சடையார்விண்
முடியாப்படிமூவடியாலுலகமுழுதுந்தாவிய
நெடியானீடாமறைமேலயனுநேடிக்காணாத
படியார்பொடியாடகலமுடையார்பழனநகராரே. 9

கண்டான்கழுவாமுன்னேயோடிக்கலவைக்கஞ்சியை
யுண்டாங்கவர்களுரைக்குஞ்சிறுசொல்லோரார்பாராட்ட
வண்டாமறையின்மலர்மேனறவமதுவாய்மிகவுண்டு
பண்டான்கெழுமவண்டியாழ்செய்யும்பழனநகராரே. 10

வேய்முத்தோங்கிவிறைமுன்பாக்கும்வேணுபுரந்தன்னு
ணுவப்பத்தனைப திறலால்மிக்கஞானசம்பந்தன்
பேசற்கினியபாடல்பயிலும்பெருமான்பழனத்தை
வாயிற்பொலிந்தமாலைபத்தும்வல்லார்நல்லாரே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருக்கொள்ளம்பூதூர் ஈரடிமேல்வைப்பு.

பண் காந்தார பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

கொட்டமேகமழுங்கொள்ளம்பூதூர்
நட்டமாடியநம்பனையுள்கச்
செல்லவுந்துகசிந்தைபார்தொழ
நல்குமாறருணம்பனே. 1

கொட்டக்கழனிக்கொள்ளம்பூதூர்
நாட்டகத்துறைநம்பனையுள்கச்
செல்லவுந்துகசிந்தைபார்தொழ
நல்குமாறருணம்பனே 2

குலையினார்தெங்குசூழ்கொள்ளம்பூதூர்
விலையிலாட்கொண்டவிகிர்தனையுள்கச்
செல்லவுந்துகசிந்தைபார்தொழ
நல்குமாறருணம்பனே. 3

குவளைகண்மலருங்கொள்ளம்பூதூர்த்
தவளநீறணிதலைவனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. 7

கொன்றைபொன்சொரியுங்கொள்ளம்பூதூர்
நின்றபுன்சடைநிமலனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. 5

ஓடம்வந்தணையுங்கொள்ளம்பூதூ
ராடல்பேணியவடிகளையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. 6

ஆறவந்தணையுங்கொள்ளம்பூதூ
ரேறதாங்கியவிறைவனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. 7

குரங்கினம்பயிலுங்கொள்ளம்பூதூ
ராக்கனைச்சென்றவாதியையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. 8

பருவராருகளுங்கொள்ளம்பூதூ
ரிருவர்காணபரியான்கழலுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. 9

நீரகக்கழனிக்கொள்ளம்பூதூர்த்
தேரமண்செற்றசெல்வனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. 10

கொன்றைசேற்சடையான்கொள்ளம்பூதூர்
நன்றகாழியுண்ஞானபம்பந்த
னின்றுசொன்மாலைகொண்டேத்தவல்லார்போ
யென்றும்வானவரோடிருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

இது ஓடக்காரனில்லாமல் அவ்வோடம் ஆற்றிற்சென்று
கரைசேரும்படி அருளிச்செய்தபதிகம்

திருவாரூர் பண் காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பவனமாய்ச்சோடையாய்நாவெழாப்பஞ்சுதோய்ச்சட்டவுண்டு
சிவனதாட்சிந்தியாப்பேதைமார்போலநீவெள்கினாயே
கவணமாய்ப்பாய்ததோரெறுகந்தேறியகாளகண்ட
னவனதாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சநெஞ்சே. 1

தந்தையார்போயினார்தாயாரும்போயினார்தாமும்போதார்
கொந்தவேல்கொண்டொரு கூற்றத்தார்பார்க்கின்றார்கொண்டு
போவார், எந்தநாள்வாழ்வதற்கேமனம்வைத்தியாலேழைநெஞ்
சே, யந்தணாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சநேஞ்சே.

நிணங்குடர்தோனரம்பின்புசோராக்கைதானிலாயதன்றூற்
குணங்களார்க்கல்லதுகுற்றநீங்காதெனக்குலுங்கினாயே
வணங்குவார்வானவர்தானவர்வைகலுமனங்கொடாத்து
மணங்கனாரூர்தொழுத்துய்யலாமையல்கொண்டஞ்சநெஞ்செ.

நீதியால்வாழ்கிலைநாள்செலாநின்றனரித்தநோய்கள்
வாதியாவாதலானாளுநாளின்பமேமருவினாயே
சாதியார்கின்னரர்தருமனும்வருணர்களேத்துமுக்க
ணாதியாரூரர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சநெஞ்சே. 4

பிறவியால்வருவனகேடுளவாதலாற்பெரியவின்பத்
துறவியார்க்கல்லதுதுன்பநீங்காதெனத்தூங்கினாயே
மறவனீமார்க்கமேனண்ணினாய்தீர்த்தநீர்மல்குசென்னி
யரவனாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சநெஞ்சே. 5

செடிகனோயாக்கையைம்பாம்பின்வாய்த்தேரைவாய்சிறுபறவை
கடிகொள்பூந்தேன்சுவைத்தின்புறலாமென்றுகருதினாயே
முடிகளால்வானவர்முன்பணிந்தன்பராயேத்துமுக்க
ணடிகளாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சநெஞ்சே. 6

ஏறுமாவியானையேசிவிகையந்தளகமீச்சேர்ப்பிவட்டில்
மாறிவாழுடம்பினார்படுவதோர்நடலைக்குமயங்கினாயே
மாறிலாவனமுலைமங்கையோர்பங்கினர்மதியம்வைத்த
வாறனாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சநெஞ்சே. 7

என்பினார்கழிநிரைத்திறைச்சிமண்சுவரெறிந்திதுநம்மில்லம்
புன்புலானாறுதோல்போர்த்துபொல்லாமையான்முகடுகொண்
முன்பெலாமொன்பதுவாசலார்குரம்பையின்மூழ்கிடாதே (டு
யன்பனாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சநெஞ்சே. 8

தந்தைதாய்தன்னுடன்தோன்றினார்புத்திரர்தாரமென்னும்
பந்தநீங்காதவர்க்குய்ந்துபோக்கில்லெனப்பற்றினாயே
வெந்தநீறாடியாராதியார்சோதியார்வேதகீத
ரெந்தையாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சநெஞ்சே.

நெடியமால்பிரமனுநீண்டுமண்ணிடந்தின்னநேடிக்காணாப்
படியனார்பவளம்போலுருவனார்பனிவளர்மலையாள்பாக
வடிவனார்மதிபொதிசடையனார்மணியணிகண்டத்தெண்டோ
ளடிகளாரூர்தொழுதுப்பலாமையல்கொண்டஞ்சநெஞ்சே. 10

பல்லிதழ்மாதவியல்லிவண்டியாழ்செயுங்காழியூ
னல்லவேநல்லவேசொல்லியஞானசம்பந்தனு
ரெல்லியம்போர்தெரியாடுமெம்மீசனையேத்துபாடல்
சொல்லவேவல்லவர்தீதிலாரோதநீர்வையகத்தே.

திருச்சிற்றம்பலம்.

---

## திருவீழிமிழலை திருவிருக்குறள் பண்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வாசிதீரவே, காசுநல்குவீர்
மாசின்மிழலையீ, ரேசலில்லையே. 1

இறைவராயினீர், மறைகொண்மிழலையீர்
கறைகொள்காசினை, முறைமைநல்குமே. 2

செய்யமேனியீர், மெய்கொண்மிழலையீர்
பைகொளரவினீ, ருய்யநல்குமே. 3

நீறுபூசினீ, ரேறதேறினீர்
கூறுமிழலையீர், பேறுமருளுமே. 4

காமன்வேவவோர், தூமக்கண்ணினீர்
நாமமிழலையீ, ரேமநல்குமே. 5

பிணிகொள்சடையினீர், மணிகொண்மிடற்றினீர்
அணிகொண்மிழலையீர், பணிகொடருளுமே. 6

மங்கைபங்கினீர், துங்கமிழலையீர்
கங்கைமுடியினீர், சங்கைதவிர்மினே. 7

அரக்கனெரிதர, விரக்கமெய்தினீர்
பரக்குமிழலையீர், கரக்கைதவிர்மினே. 8

அயனுமாலுமாய், முயலுமுடியினீ
ரியலும்மிழிலையீர், பயனுமருளுமே. 9

பறிகொள்தலையினா, ரறிவதறிகிலார்
வெறிகொண்மிழலையீர், பிரிவதறியரே. 10

காழிமாநகர், வாழிசம்பந்தன்
வீழிம்மிழலைமேற், றாழுமொழிகளே. 11

திருச்சிற்றம்பலம்.

இது படிக்காசுசுவாமி யருளியபோது வட்டந்தீர ஓதியது

திருச்சிக்கல் பண் இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

வானுலாவுமதிவந்துலவும்மதின்மாளிகை
தேனுலாவுமலர்ச்சோலைமல்குந்திகழ்சிக்கலுள்
வேனல்வேளைவிழித்திட்டவெண்ணெய்ப்பெருமானடி
ஞானமாகநினைவார்வினையாயினநையுமே. 1

மடங்கொள்வாளைகுதிகொள்ளு மணமலர்ப்பொய்கைசூழ்
திடங்கொண்மாமறையோரவர்மல்கியசிக்கலுள்
விடங்கொள்கண்டத்து வெண்ணெய்ப்பெருமானடிமேவியே
யடைந்துவாழுமடியாரவரல்லலறுப்பாரே. 2

நீலநெய்தனில்விம்மலருஞ்சுனைநீடிய
சேலுமாலுங்கழனிவ்வளமல்கியசிக்கலுள்
வேலொண்கண்ணிணையாளையோர் பாகன்வெண்ணெய்ப்பிரான்
பாலவண்ணன்கழலேத்த நம்பாவம்பறையுமே. 3

கந்தமுந்தக்கைதைபூத்துக்கமழ்ந்துசேருப்பொழிற்
செந்துவண்டின்னிசைபாடன்மல்குந்திகழ்சிக்கலுள்

வெந்தவெண்ணீற்றண்ணல்வெண்ணெய்ப் பிரான்விறையார்க
ழல், சிந்தைசெய்வார்வினை யாயினதேய்வ துதிண்ணமே. 4

மங்குறங்குமறையோர்கண்மாதத்தபலேமிகு
தெங்குதுங்கப்பொழில்செல்வமல்குந்திகழ்ச்சிக்கலுள்வே
வெங்கண்வெள்ளேறுஅடை வெண்ணெய்ப்பிரானடிமேவ
தங்குமேற்சாதத்திருநாளுந்தகையுமே. 5

வண்டிரைத்துமது விம்மியமாலர்ப் பொய்கைசூழ்
தொண்டிரைக்கொள்புனல் வந்தொழுகும் வயற்சிக்கலுள்
விண்டிரைத்தமலராற் றிகழ்வெண்ணெய்ப் பிரானடி
கண்டிரைத்து மனமேமதிபாய் கதியாகவே. 6

முன்னுமாடம் மதின்மூன்றுடனே யெரியாப்விழத்
துன்னுவார்வெங்கணை பொன்றவெசலுத்திய சோதியான்
செந்நெலாரும்வயற் சிக்கல்வெண்ணெய்ப் பெருமானடி
யுன்னிநீட மனமேநினையாய் வினையோயவே 7

தெற்றலாகிய தென்னிலங்கைக் கிறைவன்மலை
பற்றினான்முடி பத்தொடுதோள்க ணெரியமேவ
செற்றதேவனந் சிக்கல்வெண்ணெய்ப் பெருமானடி
யுற்றுநீநினைவால் வினையாயின வோயவே. 8

மாலினோடொரு மாமறைவல்ல முனிவனுங்
கோவினார்குறுகக் சிவன்சேவடி கோலியுஞ்
சீலந்தாமறியார் திகழ்சிக்கல் வெண்ணெய்ப்பிரான்
பாலும்பன்மலர் தூவப்பறையுநம் பாவமே. 9

பட்டைநற்றுவ ராடையினரொடும் பாங்கிலாக்
கட்டமண்கழுக்கள் சொல்லினைக் கருதாதுநீர்

சிட்டன்சிக்கல் வெண்ணெய்ப்பெருமான் செழுமாமறைப்
பட்டன்சேவடியே பணிமின்பிணி போகவே 10

கந்தமார்பொழிற் காழியுண்ஞான சம்பந்தனற்
செந்தண்பூம்பொழிற் சிக்கல்வெண்ணெய்ப் பெருமானடிச்
சந்தமாச்சொன்ன செந்தமிழ் வல்லவர்வானிடை
வெந்தநீறணியும் பெருமானடி மேவரே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கடனாகைக்காரோணம்-பண்-செவ்வழி

திருச்சிற்றம்பலம்.

கூனற்றிங்கட்குறுங்கண்ணிகான்ற நெடுவெண்ணிலா
வேனற்பூத்தம்ம ராங்கோதையோடும் விராவுஞ்சடை
வானநாடனமரர்பெருமாற்கிடமாவது
கானல்வேலி கழிசூழ்கடனாகைக் காரோணமே 1

விலங்கலொன்று சிலையாமதின் மூன்றுடன்வீட்டின
னிலங்குகண்டத் தெழிலாமைபூண்டாற் கிடமாவது
மலங்கியோங்கிவரு வெண்டிரைமேல் சுயமால்கடற்
கலங்களோதங் கழிசூழ்கடனாகைக் காரோணமே 2

வெறிகொளாருங் கடற்கைதைநெய்தல் விரிபூம்பொழின்
முறிகொணுழன் மூடப்புன்னை முல்லை முகைவெண்மலர்
நறைகொள்கொன்றை நயந்தோங்குநாதற் கிடமாவது
கறைகளோதங் கழிசூழ்கடனாகைக் காரோணமே 3

வண்டுபாடல் வளர்கொன்றைமாலை மதியோடுடன்
கொண்டகோலங் குளிர்கங்கைதங்குங் குருட்குஞ்சியு
ளுண்டுபோலு மென்வைத்துகந்தவொருவருக்கிடங்
கண்டல்வேலி கழிசூழ்கடனாகைக் காரோணமே 4

வார்கொள்கோலம் முலையங்கைநல்லார் மகிழ்ந்தேத்தவே
நீர்கொள்கோலச் சடைநெடுவெண்டிங்க ளிகழ்வெய்தவே
போர்கொள்சூலப் படைபுல்குகையார்க் கிடமாவது
கார்கொளதங் கழிசூழ்கடனாகைக் காரோணமே 5

விடையதேறிவ் விடரவைத்த விகிர்தரவர்
படைகொள்பூதம் பலபாடவாடும் பரமாயவ
ருடைகொள்வேங்கை யுரிதோலுடையார்க் கிடமாவது
கடைகொள்செல்வங் கழிசூழ்கடனாகைக் காரோணமே 6

பொய்துவாழ்வார் மனம்பாழ்படுக்கும் மலர்ப்பூசனை
செய்துவாழ்வார் சிவன்சேவடிக்கே செலுஞ்சிந்தையர்
மெய்தவாழ்வா ரெழினக்கரெம்மாற் கிடமாவது
கைதல்வேலிகழிசூழ் கடனாகைக்காரோணமே 7

பத்திரட்டி திரடோளுடையான் முடிபத்திற
வத்திரட்டி விரலாடர்த்தார்க் கிடமாவது
மைத்திரட்டிவ் வருவெண்டிரை மல்கியவார்கடல்
கைத்திரட்டுங் கழிசூழ்கடனாகைக் காரோணமே 8

நல்லபோதிலுறை வானுமாலுந் நடுக்கத்தினா
லல்லராவென நின்றபெம்மாற் கிடமாவது
மல்லலோங்கிவ் வருவெண்டிரைமல்கிய யால்கடல்
கல்லலோதங்கழி சூழ்கடனாகைக் காரோணமே 9

உயர்த்தபோதின் னுருவத்துடைவிட் டுழல்வார்களும்
பியர்ந்தமண்டை யிடுபிண்டமாவுன் டுழல்வார்களுந்
பந்துகாணா வகைநின்றநாதர்க் கிடமாவது
கங்கவோதங் கழிசூழ் கடனாகைக்காரோணமே 10

மல்குதண்பூம்புனல் வாய்ந்தொழுகும் வயற்காழியா
னல்லகேள்வித் தமிழ்ஞானசம்பந்த னல்லார்கண்முன்
வல்லவாறே புனைந்தேத்துங் காரோணத்து வண்டமிழ்
சொல்லுவார்க்கு மிவைகேட்பவர்க்குந் துயரில்லையே. 11

திருச்சிற்றம்பலம்.

திருச்சிராப்பள்ளி-பண்-குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்.

நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளே
றொன்றுடையானை யுமையொருபாக முடையானைச்
தென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங் குளிருமே 1

கைம்மகவேந்திக் கடுவனொடூடிக் கழைபாய்வான்
செம்முகமந்தி கருவரையேறுஞ் சிராப்பள்ளி
வெம்முகவேழத் தீருரிபோர்த்த விகிர்தாநீ
பைம்முகநாகம் மதியுடன்வைத்தல் பழியன்றே 2

மந்தம்முழவம் மழலைத்ததும்ப வரைநீழற்
செந்தண்புனமுஞ் சுனையுஞ்சூழ்ந்த சிராப்பள்ளிச்
சந்தம்மலர்கள் சடைமேலுடையார் விடையூரு
மெந்தம்மடிக ளடியார்க்கல்ல வில்லையே 3

துறைமல்குசாரற் சுனைமல்குநீலத் திடைவைகிச்
சிறைமல்குவண்டுந் தும்பியம்பாடுஞ் சிராப்பள்ளிக்
கறைமல்குகண்டன் கனலெரியாடுங் கடவுளெம்
பிறைமல்குசென்னி யுடையவனெங்கள் பெருமானே 4

கொலைவரையாத கொள்கையர்தங்கண் மதின்மூன்றுஞ்
சிலைவரையாகச் செற்றனரேனுஞ் சிராப்பள்ளித்
தலைவரைநாளுந் தலைவரல்லாமை யுரைப்பீர்கா
ணிலைவரைநீல முண்டதும்வெள்ளை நிறமாமே. 5

வெய்தன்சாரல் விரிசிறவேங்கைத் தண்போது
செய்யபொன்சேருஞ்சிராப்பள்ளிமேவியசெல்வனார்
தையலோர்பாக மகிழுலர்நஞ்சுண்பர் தலையோட்டி
லையமுங்கொள்வ ராரிவர்செய்கை யறிவாரே 6

வேயுயர்சாரற் கருவிரலூகம் விளையாடுஞ்
சேயுயர்கோயிற் சிராப்பள்ளிமேவியசெல்வனார்
பேயுயர்கொள்ளி கைவிளக்காகப் பெருமானார்
தீயுகந்தாட றிருக்குறிப்பாயிற் றாகாதே 7

மலைமல்குதோளான் வலிகெடவூன்றி மலரோன்றன்
றலைகளுகப் பலிதிரிந்துண்பர் பழியோரார்
சொலவலவேதஞ் சொலவலகீதஞ் சொல்லுங்காற்
சிலவலபோலுஞ் சிராப்பள்ளிச்சேடர் செய்கையே 8

அரப்பள்ளியானு மலருறைவானு மறியாமைக்
கரப்பள்ளிநாடிக் கண்டிலரேனுங் கல்சூழ்ந்த
சிரப்பள்ளிமேய வார்சடைச்செல்வர் மனைதோறு
மிரப்புள்ளீரும்மை யேதிலர்கண்டா விகழாரே 9

நாணாதுடைநீத் தோர்களுங்கஞ்சி நாட்காலே
யூணாப்பகலுண் டோதுவோர்களு முரைக்குஞ்சொற்
பேணாதுருசீர் பெறுதுமென்பீரெம்பெருமானார்
சேணார்கோயில் சிராப்பள்ளிசென்று சேர்மினே 10

தேனேயம்பாடுஞ் சிரப்பள்ளியானைத் திரைசூழ்ந்த
கானல்சங்கேறுங் கழுபலவூறிற் கவுனியன்
ஞானசம்பந்த னலமிகுபாட லிவைவல்லார்
வானசம்பந்தத் தவரொடுமன்னனிவாழ்வாரே 11

திருச்சிற்றம்பலம்.

திருவாலவாய் திருநீற்றுப்பதிகம்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மந்திரமாவதுநீறு வானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறு துதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறு சமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன் றிருவாலவாயன் றிருநீறே 1

வேதத்திலுள்ளதுநீறு வெந்துயர்தீர்ப்பதுநீறு
போதந்தருவதுநீறு புன்மைதவிர்ப்பதுநீறு
வோதத்தகுவதுநீறு வுண்மையிலுள்ளதுநீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்த திருவாலவாயான் றிருநீறே 2

முத்திதருவதுநீறு முனிவரணிவதுநீறு
சத்தியமாவதுநீறு தக்கோர்புகழ்வதுநீறு
பத்திதருவதுநீறு பரவவினியதுநீறு
சித்திதருவதுநீறு திருவாலவாயான் றிருநீறே 3

காணவினியதுநீறு கவினைத்தருவதுநீறு
பேணியணிபவர்க்கெல்லாம் பெருமைகொடுப்பதுநீறு
மானந்தகைவதுநீறு மதியைத்தருவதுநீறு
சேணந்தருவதுநீறு திருவாலவாயான் றிருநீறே 4

பூசவினியதுநீறு புண்ணியமாவதுநீறு
பேசவினியதுநீறு பெருந்தவத்தோர்களுக்கெல்லா
மாசைகெடுப்பதுநீறு வந்தமதாவதுநீறு
தேசம்புகழுவதுநீறு திருவாலவாயான் றிருநீறே 5

அருத்தமதாமதுநீறு வவலமறுப்பதுநீறு
வருத்தந்தணிப்பதுநீறு வானமளிப்பதுநீறு
பொருத்தமதாவதுநீறு புண்ணியர்பூசும்வெண்ணீறு
திருத்தமாளிகைசூழ்ந்த திருவாலவாயான் றிருநீறே 6

எயிலதுவட்டதுநீறு விருமைக்குமுள்ளதுநீறு
பயிலப்படுவதுநீறு பாக்கியமாவதுநீறு
துயிலைத்தடுப்பதுநீறு சுத்தமதாவதுநீறு
வயிலைப்பொலிதருசூலத் தாலவாயான் றிருநீறே 7

இராவணன்மேலதுநீறு வெண்ணத்தகுவதுநீறு
பாராவணமாவதுநீறு பாவமறுப்பதுநீறு
தாராவணமாவதுநீறு தத்துவமாவதுநீறு
வாராவணங்குந்திருமேனி யாலவாயான் றிருநீறே 8

மாலொடயனறியாத வண்ணமுமுள்ளதுநீறு
மேலுறைதேவர்கடங்கண் மெய்யதுவெண்பொடிநீறு
வேலவுடம்பிடர்தீர்க்கு மின்பந்தருவதுநீறு
வாலமதுண்டமிடற்றெம் மாலவாயான் றிருநீறே. 9

குண்டிகைக்கையர்களோடு சாக்கியர்கூட்டமுங்கூடக்
கண்டிகைப்பிப்பதுநீறு கருதவினியதுநீறு
வேண்டிசைப்பட்டபொருளா ரேத்துந்தகையதுநீறு
வண்டத்தவர் பணிந்தேத்து மாலவாயான் றிருநீறே 10

ஆற்றலடல்விடையேறு மாலவாயான்றிருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவு பூசுரன் ஞானசம்பந்தன்
றேற்றித்தென்னனுடலுற்ற தீர்ப்பிணியாயின தீரச்
சாற்றியபாடல்கள்பத்தும் வல்லவர்நல்லவர்தாமே 11

திருச்சிற்றம்பலம்.

திருவாலவாய்-திருவிராகம்-பண்-கௌசிகம்

திருச்சிற்றம்பலம்.

வீடலாலவாயிலாய் விழுமியார்கணின்கழற்
பாடலாலவாயிலாய் பரவநின்றபண்பனே
காடலாலவாயிலாய் கபாலிநீள்கடிமதிற்
கூடலாலவாயிலாய குலாயதென்னகொள்கையே 1

பட்டிசைந்தவள்குலாள் பாவையாளோர்பாகமா
வொட்டிசைந்ததன்றியும் முச்சியாலொருத்தியாய்க்
கொட்டிசைந்தவாடலாய் கூடலாலவாயிலா
யெட்டிசைந்தமூர்த்தியா யிருந்தவாறிதென்னையே 2

குற்றநீகுணங்கணீ கூடலாலவாயிலாய்
சுற்றநீபிரானுநீ தொடர்திலங்குசோதிநீ
கற்றநூர்கருத்துநீ யருத்தமின்பமென்றிவை
முற்றுநீபுகழ்ந்துமுன் னுரைப்பதென்முகம்மனே 3

முதிருநீர்சடைமுடி முதல்வனீமுழங்கழ
லதிரவீசியாடுவா யழகனீபுயங்கனீ
மதுபனீமணாளனீ மதுரையாளவாயிலாய்
சதுரனீசதுமுகன் கபாலமேந்துசம்புவே 4

கோலமாயநீண்மதிற் கூடலாலவாயிலாய்
பாலனாயதொண்டுசெய்து பண்டுமின்றுமுன்னையே

நீலமாயகண்டனே நின்னையன்றிநித்தலு
சீலமாபசிந்தையிற் றேர்வதில்லைதேவரே 5

பொன்றயங்கிலங்கொளிந் நலங்குளிர்ந்தபுன் சடை
பின்றயங்கவாடுவாய் பிஞ்ஞகாபிறப்பிலீ
கொன்றையம்முடியினாய் கூடலாலவாயிலாய்
நின்றயங்கியாடலே நினைப்பதென்னியம்மே 6

ஆதியந்தமாயினா யாலவாயிலண்ணலே
சோதியந்தமாயினாய் சோதியுள்ளோர்சோதியாய்
கீதம்வந்தவாய்மையாற் கிளர்தருங்கினார்க்கலா
லோகிவந்தவாய்மையை லுணர்ந்துரைக்கலாகுமோ 7

கறையிலங்குகண்டனே கருத்திலாக்கருங்கடற்
றுறையிலங்கைமன்னனைத் தோளடரவூன்றினாய்
மறையிலங்குபாடலாய் மதுரையாலவாயிலாய்
நிறையிலங்குநெஞ்சினா னினைப்பதேசியமமே 8

தாவணவ்விடையினாய் தலைமையாகநாடோறுங்
கோவணவுடையினாய் கூடலால்வாயிலாய்
தீவணமலர்மிசைத் திசைமுகன்னுமாலுநீன
றூவணமளக்கிலார் துளக்கமெய்துவார்களே 9

தேற்றமேல்வினைத்தொழிற் றோருஞ்சமணரும்
போற்றிசைத்துநின்கழற புகழ்ந்துபுண்ணியங்கொளார்
கூற்றுதைத்ததாளினாய் கூடலாலவாயிலாய்
நாற்றிசைக்குமூர்த்தியாகி நின்றதென்ன 10

போயநீர்வளங்கொளும் பொருபுனர்புகலியான்
பாயகேள்விஞானசம் பந்தனல்பலண்பினா

லாயசொல்லிலை மாலைகொண் டாலவாயிலண்ணலைத்
தீயதீரவெண்ணுவார்கள் சிந்தையாயதேவரே 11

திருச்சிற்றம்பலம்.

திருநல்லூர்ப்பெருமணம்-பண்-அந்தாளிக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்.

கல்லூர்ப்பெருமணம் வேண்டாகழுமலம்
பல்லூர்ப்பெருமணம் பாட்டுமெய்யாத்தில்
சொல்லூர்ப்பெருமணஞ் சூடலரேதொண்டர்
நல்லூர்ப்பெருமண மேயநம்பானே 1

தருமணலோதஞ்சேர் தன்கடனிடத்திலம்
பருமணலாக்கொண்டு பாவைநல்லோர்கள்
வருமணங்கூட்டி மணஞ்செயுநல்லூர்ப்
பெருமணத்தான் பெண்ணோர் பாகங்கொண்டானே. 2

அன்புறுசிந்தைய ராகியடியவர்
நன்புறுநல்லூர்ப் பெருமணமேவிநின்
றின்புறவெந்தை யிணையடியேத்துவார்
துன்புறுவாரல்லர் தொண்டுசெய்வாரே 3

வல்லியந்தோலுடை யார்ப்பதுபோர்ப்பது
கொல்லியல்வேழத் துரிவிரிகோவண
நல்லியலார்தொழு நல்லூர்ப்பெருமணம்
புல்கியவாழ்க்கையெம் புண்ணியனுர்க்கே 4

ஏறுகந்தேறிடு காட்டெரியாடிவெண்
ணீறுகந்தீர்நிறையார் விரித்தேன்கொன்றை
நாறுகந்தேர்திரு நல்லூர்ப்பெருமணம்
வேறுகந்தீருமை கூறுகந்தீரே. 5

சிட்டப்பட்டார்க்கெளியான் செங்கண்வேட்டுவப்
பட்டங்கட்டுஞ் சென்னியான் பதியாவது
நட்டக்கொட்டாரு நல்லூர்ப்பெருமணத்
திட்டப்பட்டாலொத் தீராலெப்பிரானீரே 6

மேகத்தகண்டனெண் டோளன்வெண்ணீற்றுமை
பாகத்தன்பாய்புலித் தோலொடுபந்தித்த்
நாகத்தனல்லூரப் பெருமணத்தானல்ல
போகத்தல யோகத்தை யேபுரிந்தானே 7

தக்கிருந்தீரன்று தாளாலரக்கனை
புக்கிருந்தொல்க வுயர்வரைக்கீழிட்டு
நக்கிருந்தீரின்று நல்லூர்ப்பெருமணம்
புக்கிருந்தீரெமைப் போக்கருளீரே. 8

ஏலுந்தண்டாமரை யானுமியல்வுடை
மாலுந்தம்மாண்பறி கின்றிலர்மாமறை
நாலுந்தம்பாட்டென்பர் நல்லூர்ப்பெருமணம்
போலுந்தவகோயில் பரிசடையார்க்கே 9

ஆதரமணொடுசாக்கியர்தாஞ்சொல்லும்
பேதைமைகேட்டுப் பிணக்குறுவீர்வம்மி
னோதினைநல்லூர் பெருமணமேவிய
மேதனதாடொழ வீடெளிதாமே 10

நறும்பொழிற்காழியுண் ஞானசம்பந்தன்
பெறும்பதநல்லூர்ப் பெருமணத்தானை
யுறும்பொருளாற்சொன்ன வொண்டமிழ்வல்லார்க்
கறும்பழிபாவ மவலமிலரே.

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தசுவாமிகள் திருவடிகளே சரணம்



கடவுள் துணை.

# திருநாவுங்கரசு சுவாமிகள் சரித்திரம்.

திருமுனைப்பாடி நாட்டிலே, திருவாமூரில்வேளாளகுலத்தினராகிய புகழனாருக்கு, அவர் மனைவி மாதினியார் வயிற்றிற்றிலகவதியார் பிறந்தபின், மணீக்கியாரென்ற திருநாமத்தோடு நாயனார் பிறந்து கலைபயின்றுவளருநாளில் திலகவதியாருக்குப் பன்னிரண்டு வயதுசெல்ல, சோழராஜனிடத்தில்சேனாதிபதியாகிய கலிப்பகை நாயனாருக்கு விவாகம் செய்யும்பொருட்டுச் சில முதியோர் வந்து திலகவதியாரைக் கொடுக்கும்படி பேச, புகழனார் சம்மதித்தனர், கலிப்பகையாரும் விவாகத்திற் கெத்தனமாயிருக்கையிற், அரசனேவ, கலிப்பகையாற் சேனையுடன்வடதேசப்பகை மன்னருடன் போருக்குச்சென்று நெடுநாள்போர் செய்துக்கொண்டிருந்தனர். அவரவ்விதமிருக்க, புகழனார் சுவர்க்கஞ்சேர்ந்தனர். புருடனைப்பிரிந்துவாழமனமொவ்வாது மாதினியாருமிறந்தனர் மக்களிருவருமளவிலாத் துயரமடைந்துபின்பு பெற்றோர்க்குச் செய்யவேண்டிய கடனை மருணீக்கியார்செய்தனர்

போர்விளைத்துக்கொண்டிருந்த கலிப்பகையாரும் வீரசுவர்க்கமெய்தினர். இதனை திலகவதியார்கேள்வியுற்று, அவருக்கென்னைக் கொடுப்பதாயென்தந்தை வாக்களித்திருந்ததாய், எனதுயிரையவருடன் சேர்ப்பேனென்று துணிய, மருணீக்கியார்தான் முந்திஉயிர்விடுவதாய்ப்புலம்ப, அதனைக்கண்ட திலகவதியார்தம்பியிடத்துள்ளவன்பா லுயிர்தாங்கித் தவமுள்ளவராயிருந்தனர்.

அவரவ்விதமிருக்க, மருணீக்கியார் முத்திநெறியறியச்சருதி சமயசாஸ்திரங்களையாராயத்தொடங்கிசமன்சமயத்தைச்சார்ந்த சாஸ்திரங்களை யாராய்ந்து அவர்களில்மேம்பாடெய்தி தருமசேனரென்னும்பெயரும்பெற்றிருந்தனர். திலதவதியார் திருவதிகைவீரட்டானத்தைச் சேர்ந்து சிவசின்னந் தரித்து ஆலயத்தொண்டு செய்திருக்கையில் வீரட்டானேஸ்வரரை வணங்கி ஐயனே என்னுடன் பிறந்தானைப்பரசமயப் படுகுழியினின்றுமெடுத்தாட்கொளவேண்டுமென்று பலமுறையும் விண்ணப்பஞ்செய்ய ஒருநாள் சொப்பனத்திற்றோன்றி, உனது தம்பி முன்னம் வாகீசனென்னுமுனிவன், ஒருகாரணத்தாலிங்குற்பவமாயினன், அவனுக்குச்சூலைநோயுண்டாகியாட்கொள்கின்றோ மென்றருளினர். அவ்வண்ணமேதருமசேனர்வயிற்றிற் சூலைநோயுண்டாக்கி வருத்த அதனைத்தாளாமல் வருந்தித்தான் சமன்சமயத்திற் கற்ற மந்திரங்களாற் றடுத்தும் பிதர சமணர்களவர்களாலானமட்டும் பார்த்தும்வியாதியதிகரிக்கக்கண்டு நடுங்கிதமக்கைக்குச் சொல்லியனுப்பினர். யானங்கேவரேனென்று தமக்கையார் சொல்லியனுப்பிய பதிலைக்கேட்டு, அன்றிரவு பிறருக்குதெரியாமல் தமக்கையாரிடம் சென்றுவணங்கி சூலைநோய்தீரும்படி யநுக்கிரகஞ் செய்யும்படிபுலம்பினர். அதைக் கண்ணுற்று மனஞ்சகியாராய், இதுவீரட்டானேஸ்வரர் திருவருளால் நேர்ந்ததா லவரைத்தொழுது பணிசெய்யென்று சொல்லி விபூதி கொடுத்துத் தரித்துக்கொள்ளச்சொல்லி திருப்பள்ளியெழுச்சி காலத்திற் றம்பியையாலயத்துக் கழைத்துக் போயினர். மருணீக்கியா ராலயத்தை வலஞ்செய்து வணங்கிப

சுவாமியினது திருவருளாற் றிருப்பதிகமோதும்படி யுணர்ச்சி
யுண்டாக கூற்றாயின வாறுவிலக்கலீ ரென்னுந்திருப்பதிக
மோதினார். உடனேவியாதி தீர ஈசனது திருவருளை நினைந்தா
னந்தபரவசமுற் றிருக்கும்போது, நீ திருப்பதிகமோதினமை
யால் நாவுக்கரசனென் றுனக்குப் பெயருண்டாகுகவென்று சுவாமி
யசரீரவாக்கருள்செய்ய, அதைக்கேட்டுமகிழ்ந்தன்றுமுதற் சிவ
சின்னந் தரித்துத் திதிருபமாகிய வாசகமு முழைவாரப்பணியு
முடையாராயினார்

இதனைப் பாடலிபுரத்திலிருக்கிற சமணர்களறிந்து அர
னிடஞ்சென்று தருமசேனரது தமக்கை சடையான் சமயத்தி
லிருப்பதாற் றமுமக்குபோய்ச் சேரக்கருதி சூலைநோயுற்றதா
யுமது நஞ்சமய மந்திரமுதலியவற்றாற் றீரவில்லையென்றும்பா
சாங்குசெய்து தமக்கையிடம்போய்ச் சேர்ந்தனரென்றார்கள் அ
ரசன்கோபங்கொண்டு, தருமசேனரை யழைத்துவரும்படி மந்தி
ரிகளுக் குத்திரவளித்தான், அவர்களவ்வாறே போயழைக்க,நா
யனார் நாமார்க்குங்குடியல்லோ மென்னுந் திருத்தாண்டகம் பா
டி மந்திரிகளவரை வணங்கிப் பிரார்த்திக்க அவர்களுடன்சென்
றார் அரசன் வெகுண்டு சமணரது தீர்மானப்படி, சுண்ணாம்புக்
காளவாயிலிட்டான். நாயனார் "மாசில்வீணையு மாலைமதியமுக
மென்னும் பதிகமோதி, சுவாமியைத் தியானித்துக்கொண்டிரு
ந்ததால் வெப்பமில்லாதிருந்தது ஏழாநாள் சமணர், காளவா
யைத்திறந்துபார்க்க, நாயனார்சுகமாயிருக்கக்கண்டு பிரமித்து மீ
ண்டு பாலுடன் விடம் கலந்துகொடுக்க வதையுமுண்டனர்
பின் கொல்லும்படி யானைத் தூண்ட, சுண்ணவெண் சந்தனச்
சாந்து' மென்னும் பதிகமோத யானை நாயனாரைவணங்கிப்பா

கரையும் சூழ்ந்திருந்த சமணர்களையும் கொன்றுசென்றது, அப் பாற் கொலைஞரைகொண்டு கற்றூணிற் பிணித்து நடுக்கடலில் வீழ்ந்தினார்கள். நாயனார் சுவாமியைத் தியானித்து சொற்றி ணைவேதிய னென்னும் பதிகமோத, கட்டுகளவிழ்ந்தத்தூணே தெப்பமாக வதின்மேலிருந்து பதிகமுற்றுமோதி கேடிலநதிக்க ரைசேர்ந்து, திருப்பாதிரிப்புலியூர் முதலிய ஸ்தலங்களைதரிசித் து திருவதிகை வீரட்டானைச்சேர்ந்து திருத்தொண்டுபுரிந்து வந்தனர். நாயனாரதுண்மையைப் பல்லவராஜனறிந்து சமண ரதுமடமாலயமுதலியவற்றை இடிப்பித்துச்சைவனாகி, குணதர வீச்சரமென்னுமொரு சிவலாயமு மேற்படுத்தினன்.

பின்பு,நாயனார் திருத்தூங்கானை மாடத்துக்கெழுந்தருளி ச் சுவாமியைத் தரிசித்து, ஐயனே! சமன்சமைபத்திலிருந்தவிவ் வுடலைத் தாங்க எருவருக்கின்றேனாதலின், தேவரீருடைய முத்திரையை யடியேற்குத் தரித்தருளவேண்டுமென்றுபதிக மோதப் பரமசிவன் திருவருளாலொரு பூதம்வந்து சூலத்துட ன்விடையிலக்கினையைத்தமது தோள்களிற்றரிக்க மகிழ்ந்து சீர் காழிக்கெழுந்தருள, திருஞானசம்மந்த மூர்த்திநாயனாரெதிர்க் கொளக் கண்டுவணங்கி அடியேன்றெழுந்து சுவாமியைதரிசித் து திருச்சத்தி முற்றத்தில் சுவாமியைபணிந்து கூற்றுவன்வ ருமுன்னமடியேன் முடியிற் றிருவடி சூட்டல்வேண்டுமென்று பதிகமோத திருநல்லூருக்குவாவென்று சுவாமியருள, அவ்வி தமே சென்று ஆலயத்திற் சாஷ்டாங்கமாகப் பணியும்போது சுவாமிதிருவடிசூட்ட தாண்டகமோதித்தொழுது,மற்றஸ்தலங் களையுந் தரிசித்துத்திங்களூரைச்சார்ந்து, அப்பூதியடிகளெனுமொரு

க்குத் தம்மிடத்துள்ள வன்மை மகிழ்ந்தவர்மாளிகையிலமுது கொள்ள சம்மதித்தனர். அவரது மனைவியார், மூத்ததிருநாவுக்கரசென்னும் புத்திரனை இலைகொணரவனுப்ப அவன்போய் இலைகொணர்ந்து தாயிடந்தந் துயிர்நீங்கினன். பெற்றோர்கண்டு விஷந்தீண்டிற்றென்று குறிப்பாலறிந்து இறந்தமகனை மறைத்து நாயனருக்கமுதுபடைக்க முயற்சிக்கும்போது புத்திரசோகத்தை நாயனா ரறிந்து பதிகமோதிப் பிழைக்கச்செய்து அப்பூதியடிகளுடனமுதுகொண்டு, திருவாரூர் முதலிய ஸ்தலங்களைத்தரிசித்துத் திருப்புகலூருக் கெழுந்தருளுகையில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் எதிர்கொள்ள அவரைவணங்கி சுவாமியைத்தரிசித்து முருகநாயனார் திருமடத்திற் றங்கியிருந்தனர். திருஞானசம்பந்தமூர்த்தியார் திருவாரூருக்கு சென்று மீண்டுந்திருப்புகலூருக்குவந்தனர்

அப்பாலிருவரும் திருவீழிமிழலைக்குச்சென்று பரமசிவன் றந்த படிக்காசாற் பஞ்சகத்தைநீக்கி, திருமறைக்காட்டையணுகிவேதம்பூசித்து மூடிப்போன கதவைத்திறப்பித்து, சம்பந்தமூர்த்தியாரை விட்டுப்பிரிந்து, வடதளியென்னுமாலயத்திற்குச்சென்று, சிவலிங்கப்பெருமானைச் சமணர்கள மறைந்திருந்தலைக்கண்டு அரசனைக்கொண்டு நிவர்த்தித்து, திருப்பைஞ்ஞீலியைநோக்கிச் செல்லு மார்க்கத்திலே, நாயனார் பசியால் வருந்தி வருவதை யறிந்து சிவபெருமானொருசோலையையும் குளமதையுமுண்டாக்கிப் பிராமணவுருவத்தோடு பொதிச்சோறு வைத்துக்கொண்டிருந்து நாயனாருக்குக்கொடுக்க வதனையுண்டு, குளத்தில் ஜலமருந்தி களைநீங்கிச் சென்றார் சுவாமியுமவருடன் சென்று திருப்பைஞ்ஞீலியைச் சமீபித்தவுடன் மறைந்தருளினார் நாயனார்.

ரதுகண்டு திருவருளை வியந்து ஆலயஞ்சென்றுதரிசித்துச் சோழநாட்டைக்கடந்து, நடுநாட்டிலுள்ள ஸ்தலங்களைத் தரிசித்துத் திருக்காளத்திக்கெழுந்தருளினார்.

அங்குசுவாமியைத் தரிசிக்கும்போது தோன்றிய குறிப்பால் ஸ்ரீகயிலாயபதியைத் தரிசிக்கவிரும்பிக் காசியையடைந்து விஸ்வநாதரைத் தரிசித்துப் பரிஜனங்களை நிறுத்தி ஆகாரமின்றித் தனியே காடுமலை கடந்து பாலைவனத்திற் போகும்போது அந்நில வெப்பத்தாற் கால் பரட்டளவுந் தேய, கைகளை யூன்றிச்செல்ல மணிக்கட்டளவுந் தேய மார்பினுலுந்திச்சென்று மார்புந் தேயவே, புரண்டு புரண்டு சென்று சக்தியில்லாது தோய்ந்து பிரஞ்ஞைதப்பி யிருந்தனர் பரமசிவன் திருவுளமிரங்கி பிராமணமுனிவருருகவந்து இவ்விதம் வருந்தி வருவானேனென்று வினவ கயிலாய தரிசனத்திற் கென்றுரைக்கக்கேட்டு மனிதர் தரிசிக்கக் கூடுமோவென, எவ்விதமும் கயிலாயதரிசனஞ் செய்தாலன்றி மீளேனென்றனர் பரமசிவனுவ்வுறுதியை யறிந்துமறைந்து,'நாவுக்கரசே யெழுந்திரு'மென்றசரீரிவாக்கருள, உடனே நாயனார் திரேகம் பழுதின்றி விளங்கக்கண் டுணர்ச்சிபெற்று, ஆண்டவனே அடியேனுக்கு ஸ்ரீகயிலாய தரிசனம் கடாட்சித்தருளல் வேண்டுமென்று துதிசெய்தனர் சுவாமி நூதனமாயுண்டாக்கிய குளத்தைக்காட்டி, அதில்மூழ்கித் திருவையாற்றில் வந்து கயிலாயதரிசனம் காணக்கடவையென்று மீண்டு மசரீரிவாக்கருள அவ்வாறே மூழ்கி, திருவையாற்று தீர்த்தக் கரையிலெழுந்து சந்நிதிக்குசென்றுபார்வதிசமேதராய் கணங்கள, முனிவர்கள், தேவர்கள் புடைசூழக் கயிலாய தரிசனங்கண்டு பதிகங்களோதினார்.

பின்பு, கயிலாயத் தோற்றமாறி ஆலயமாயிருக்கக்கண்டு வருத்தம் கொண்டு ஒருவாறு தெளிந்து, திருப்பூந்துருத்திக்குச் சென்று மடமொன் றேர்படுத்தி யதில் வீற்றிருக்கும் போது திருஞான சம்பந்தமூர்த்தியார் வர, அதனையறிந் தெதிற்சென்று. அவரெழுந்தருளுஞ் சிவிகையைத்தமது தோள்கொடுத்துத் தாங்கி வந்தார் திருப்பூந்துருத்திக்கு மிகச் சமீபித்தவுடன், அப்பரெங்குற்று ரென்று சம்பந்தமூர்த்தியார் வினவ அடியேன் தேவரீரைத் தாங்கிவரும் பெருவாழ்வைப் பெற்றிங்குற்றே னென்று, அப்பரருளினர் உடனே சம்பந்தர் சிவிகையைவிட்டிழிந்து பணிய, அதற்குமுன்னரே அப்பர் பணிந்ததை, யடியார்கள் கண்டு இருவரையும் பணிந்து மகிழ்ந்தார்கள் பிறகிருவரு மாலயஞ் சென்று சுவாமியைத் தரிசித்து மடத்தி லெழுந்தருளியிருக்கையில் சம்பந்தமூர்த்தியார் தாம் மதுரைக்கு சென்றதும் சமணரைவென்றதும் பாண்டியன் கூன்நிமிர்ந்ததும் சொல்லியருளினர். அப்பர் தொண்டைநாட்டிற்குத் தாம் சென்றது மங்குள்ள ஸ்தலங்களைத் தரிசித்ததும் சொல்லினர்.

பிறகு, அப்பர் மதுரைக்குச்சென்று சொக்கரைத்தரிசித்துப் பாண்டிநாட்டிலுள்ள ஸ்தலங்களையெல்லாந் தரிசித்துத் திருப்புகலூறிற்சேர்ந்து, உழவாரப் பணிசெய்துகொண்டிருக்குநாளில் செதுக்குமிடமெல்லாம்பொன்னு,நவரத்தினங்களுமுண்டாகும்படிப் பிரமசிவன் செய்தருள, அவைகளை யோடுகளாக மதித்துப் பொய்கையிலெறிந்துவிட்டார் பின்னுமிவரை மயக்கும்படி அரம்பா ஸ்திரீகளையனுப்ப அவர்கள் வந்து வாலனஞ்செய்ய(உம்மாலிங்கு குறையுடையேனு)னென்னுந் தாண்டக மோதினர், தம்மாலியலாதென்று திரும்பினார்கள் கடைசியாக (எண்ணுகேனென்சொல்லி யெண்ணுகேனோ)வென்னுந் திருத்தாண்டகமோதி சிவபெருமானுடைய திருவடிகளையடைந்தார்.

உ

சிவமயம்.

## திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த

### திரு அதிகைவீரட்டானம்-பண்-கொல்லி

திருச்சிற்றம்பலம்.

கூற்றாயினவாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நானறியே, னேற்றாயடிக்கே யிரவும் பகலும் பிரியாது வணங் குவனெப்பொழுதுந், தோற்றாதென்வயிற் றினகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட, ஆற்றேனடியே னதிகைக் கெடில வீரட்டானத்துறையம்மானே. 1

நெஞ்சமுமக்கே யிடமாகவைத்தே னினையாதொருபோ திருந்தறியேன், வஞ்சமிதுவொப் பதுகண்டறியேன் வயிற்றோடு துடக்கி முடக்கியிட, நஞ்சாகி வந்தென்னை நலிவதனை நணுகாமற்றுரந்துகரந்துமிடீ, ரஞ்சேலுமென்னீ ரதிகைக்கெடில வீரட்டானத்துறையம்மானே. 2

பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர் படுவெண்டலையிற் பலிகொண்டுழல்வீர், துணிந்தேயுமக்காட்செய்து வாழலுற் றாற் சுடுகின்றது சூலைதவிர்த்தருளீர், பிணிந்தார்பொடிக்கொ ண்டுமெய் பூசவல்லீர் பெற்றமேற்றுகந்தீர் சுற்றும்வெண் டலைகொண், டணிந்தீரடிகே ளதிகைக்கெடில வீரட்டானத் துறை யம்மானே.

முன்னம்மடியே னறியாமையினான் முனிந்தென்னை நலிந்துமுடக்கியிடப், பின்னையடியேனுமக்காளும்பட்டேன் சுடுகின்றது சூலைதவிர்த்தருளீர், தன்னையடைந்தார் வினை தீர்ப்பதன்றோ தலையாயவர் தங்கடனாவதுதா, னன்னநடை யாரதிகைக்கெடில வீரட்டானத்துறையம்மானே. 4

காத்தாள்பவர்காவ லிகழ்ந்தமையார் கை[illegible]றவர்கண் கொள்ளொன்றுசொலி, நீத்தாய்கயம்புகநூக்கியிட நிலைக் கொள்ளும்வழித்துரையொன்றறியே[illegible] வார்த்தையிதுவெர ப்பதுகேட்டறியேன் வயிற்றோடு[illegible]முடக்கியிட, வார்த்தார்புனலா ரதிகைக்கெடில[illegible]த்துரையம் மானே 5

சலம்பூவொடுதூ மறந்தரியேன் [illegible]சபாட்டின்ம றந்தறியே, னலந்தீங்கிலுமுன் [illegible] னுன்னும மென்னு வின்மறந்தறியே, னுலந்[illegible] பதிகொண்டு ழல்வாயுட லுள்ளுறுசூலத்தீர்த்[illegible]யலன்[illegible]னடியே னதிகைக்கெடில வீரட்டானத்து[illegible] 6

உயாந்தேன் மனவாழ்க் கை[illegible]மொரு வர்தலைகா வலியாமையினல் [illegible]வாழ லூற்றால் வலிக்கின்றது சூலைதவி[illegible] யென் வயிற் றினகம்படியே பறித்துப்[illegible]த்திடநா, னயந்தேனடியே னதிகைக்[illegible]னத்துரை யம்மானே. 7

வலித்தேன்மனவாழ்[illegible]யன் வஞ்சம்மன மொன்றுமிலாமையினூர், [illegible]ருவர் துணையாரு மிலைச்சங்கவெண்குழைக்கா[illegible]பெருமான். கலித் தேயென்வயிற் றினகம்படி[illegible]மலக்கிட்டுக்கவர்ந்து தின்ன, அலுத்தேனடியே னதி[illegible]கடில வீர்ட்டானத் துறையம்மானே. 8

பொன்போல மிளிர்வதோர்மே[illegible]யினீர் புரிபுன்சடை யீர் மெலியும்பிறையீர், துன்பேகவ[illegible] பிணியென்றிவற்றை நணுகாமற்றுறந்துகரர்துவிட ரென[illegible]விகளும் மையினித்


தெனியாரடி
க்கெடிலவீரட்
ங்காநடமாட
ர்த்திட்டரு
புனல்சூழ்
செம்பவள
கொம்பமருங் கொ
வம்பவிழு மலர்க்கொ
அம்பவள வையாறக்
நணியானே சேயானே
றுணியானே தோல
மணியானே வானவர்க
அணியானே யையாற
ஊழித்தீ யாய்நின்று
வாழித்தீ யாய்நின்றுய்

ய
4
ஜே
ன
5
6
ளை
ன
7
ளுய்
முத்தாளுய்
சாதி
தேனே 8
ாங் கொற்றிதுந்தப்
தேத்த
ளெனவிரைஞ்சும்
ய்ந்தேனே 9
மா க் கருத்தழியத்
வலூர்த்தி

பெருவரைசூழ் [illegible] வயகத்தார் பேர்நந்தி யென்றேத்தும்
அருவரை [illegible] காளாய் நானுய்ந்தேனே 10

[illegible] திருச்சிற்றம்பலம்.

[illegible] வையாறு-பண் காந்தாரம்

[illegible]

மாதர்ப் பிறை [illegible] டும் பாடிப்
போதொடு ந [illegible] வருவேன்
யாதுஞ்சுவடு [illegible]
காதன்மடப்பிடி [illegible] ன்
கண்டேனவர் தி [illegible] ன கண்டேன் 1

போழிளங்கண்ணி [illegible] லாளொடும்பாடி
வாழியம்போற்றி [illegible] டாவருவே
னாழிவலவனின்றேத் [illegible] றபோது
கோழிபெடையொ [illegible] வருவன கண்டேன்
கண்டேனவர் திரு [illegible] ன கண்டேன் 2

எரிப்பிறைக்கண்ணிய [illegible] ழையாளொடும்பாடி
முரித்தவிலயங்களிப் [illegible] தாடாவருவேன்
அரித்தொழுகுவெள் [illegible] றடைகின்றபோது
வரிக்குயில் பேடை [illegible] கிவருவன கண்டேன்
கண்டேனவர் திருப் [illegible] ங் க [illegible] றியாதன கண்டேன் 3

பிறையிளங்கண்ணியி னானைப் [illegible] வளையாளொடும்பாடித்
துறையிளம்பன்மலர்தூவித் [illegible] ளைக்குளிரத்தொழுவேன்
அறையிளம்பூங்குயிலாலு [illegible] றடைகின்றபோது

சிறையிளம்பேடையொடாடிச் சேவல்வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதங் கண்டறியாதன கண்டேன். 4

ஏடுமதிக்கண்ணியானை யேந்திழையாளொடும்பாடிக்
காடொடுநாடுமலையுங் கைதொழுதாடா வருவே
னாடமலர்ந்துறைகின்ற வையாறடைகின்றபோது
பேடைமயிலொடுங்கூடிப் பிணைந்துவருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதங் கண்டறியாதன கண்டேன் 5

தண்மதிக்கண்ணியினானைத் தையனல்லாளொடும்பாடி
யுண்மெலிசிந்தையனாகி யுணரா வுருகா வருவே
னண்ணலமர்ந்துறைகின்ற வையாறடைகின்றபோது
வண்ணப்பகன்றிலொடாடி வைகிவருவன கண்டேன்.
கண்டேனவர் திருப்பாதங் கண்டறியாதன கண்டேன். 6

கடிமதிக்கண்ணியினானைக் காரிகையாளொடும்பாடி
வடிவொடுவண்ணமிரண்டும் வாய்வேண்டுவசொல்லிவாழ்வே
னடியிணையார்க்குங்கழலா னையாறடைகின்றபோது
இடிகுரலன்னதோரேனம் பிணைந்துவருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதங் கண்டறியாதன கண்டேன் 7

விரும்புமதிக்கண்ணியானை மெல்லியலாளொடும்பாடிப்
பெரும்புலர்காலையெழுந்து பெறுமலர்கொய்யவருவே
னருங்கலம்பொன் மணியுந்து மையாறடைகின்றபோது
கருங்கலைபேடையொடாடிக் கலந்துவருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதங் கண்டறியாதன கண்டேன் 8

முறபிறைக்கண்ணியினானை மொய்குழலாளொடும்பாடி
பற்றிக்கயிற்றுக்கில்லேன் பாடியு மாடாவருவேன்
அற்றருள்பெற்றுநின்றாரோ டையாறடைகின்றபோது

நற்றுணைப்பேடையொடாடி நாரைவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங் கண்டறியாதனகண்டேன். 9

திங்கள்மதிக்கண்ணியானைத் தேமொழியாளொடும்பாடி
யெங்கருணல்குங்கொலெந்தை யெனக்கினியென்றுவருவே
அங்கிளமங்கையர்பாடு மையாறடைகின்றபோது [ன்
பைங்கிளிபேடையொடாடிப் பறந்துவருவனகண்டேன
கண்டேனவர்திருப்பாதங் கண்டறியாதனகண்டேன் 10

வளர்மதிக்கண்ணியினானை வார்குழலாளொடும்பாடிக்
களவுபடாததோர்காலங் காணயான்கடைக்கணிக்கின்றே
னளவுபடாததோரன்போ டையாறடைகின்றபோது
இளமணநாகுதழுவி யேறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங் கண்டறியாதனகண்டேன் 11

திருச்சிற்றம்பலம்.

திருப்பழனம்-பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலைவரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பனென் புதுநலமுண் டிகழ்வானோ 1

கண்டகங்காள் முண்டகங்காள் கைதைகாள் நெய்தல்காள்
பண்டரங்க வேடத்தன் பாட்டோவாப் பழனத்தான்
வண்டுலாந் தடமூழ்கி மற்றவனென் றளிர்வண்ணங்
கொண்டநாள் தானறிவான் குறிக்கொள்ளா தொழிவானோ

மனைக்காஞ்சி யிளங்குருகே மறந்ததாயோ மதமுகத்த
பனைக்கைம்மா வுரிபோர்த்தான் பலர்பாடும் பழனத்தான்

நினைக்கின்ற நினைப்பெல்லா முரையாயோ நிகழ்வண்டே
சுனைக்குவளை மலர்க்கண்ணாள் சொற்றூதாய்ச் சோர்வாளே.

புதியையா யினியையாம் பூந்தென்றால் புறங்காடு
பதியாவ திதுவென்று பலர்பாடும் பழனத்தான்
மதியாதார் வேள்விதனை மதித்திட்ட மதிகங்கை
விதியாள னென்னுயிர்மேல் விளையாடல் விடுத்தானே 4

மண்பொருந்தி வாழ்பவர்க்கு மாதீர்த்த வேதியர்க்கும்
விண்பொருந்து தேவர்க்கும் வீடுபேறாய் நின்றானைப்
பண்பொருந்த விசைபாடும் பழனஞ்சே ரப்பனையென்
கண்பொருந்தும் போழ்தத்துங் கைவிடநான் கடவேனே 5

பொங்கோத மால்கடலிற் புறம்புறம்போ யிரைதேருஞ்
செங்கால்வெண் மடநாராய் செயற்படுவ தறிவேனு
னங்கோல வளைகவர்ந்தா னணிபொழில்சூழ் பழனத்தான்
தங்கோல நறுங்கொன்றைத் தாரருளா தொழிவானே. 6

துணையார முயங்கிப்போய்த் துறைசேரு மடநாராய்
பணையாரவாரத்தான் பாட்டோவாப் பழனத்தான்
கணையாரவிருவிசும்பிற் கடியரணம் பொடிசெய்த
விணையார மார்பனென் னெழினலமுண் டிகழ்வானே 7

கூவைவாய் மணிவரன்றிக் கொழித்தோடுங் காவிரிப்பூம்
பாவையாய் முத்திலங்கப் பாய்ந்தாடும் பழனத்தான்
கோவைவாயமலைமகள்கோன்கொல்லேற்றின்கொடியாடைப்
பூவைகாள் மழலைகாள் போகாத பொழுதுளதே 8

புள்ளிமான் பொறிபரவப் புள்ளுயர்த்தான் மணிநாகப்
பள்ளியான் றொழுதேத்த விருக்கின்ற பழனத்தா

னுள்குவார் வினைதீர்க்கு மென்றுரைப்ப ருலகெல்லாங்
கள்ளியே ஞானிவற்கென் கனவிலையுங் கடவேனே 9

வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானேயாகிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்குப் பழனத்தா
னஞ்சிப்போய்க் கலிமெலிய வழலோம்பும் அப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாங் கோடியையே 10

திருச்சிற்றம்பலம்.

விடந்தீர்த்த திருப்பதிகம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

ஒன்றுகொலாமவர் சிந்தையுயர்வரை
யொன்றுகொலாமுய ரும்மதி சூடுவ
ரொன்றுகொலாமிடு வெண்டலை கையது
வொன்றுகொலாமவ ரூர்வதுதானே 1

இரண்டுகொலாமிமை யோர்தொழுபாத
மிரண்டுகொலாமிலங் குங்குழைபெண்ணாண்
இரண்டுகொலாமுரு வஞ்சிறுமான்மழு
விரண்டுகொலாமவ ரெய்தினதாமே 2

மூன்றுகொலாமவர் கண்ணுதலாவன
மூன்றுகொலாமவர் சூலத்தின்மொய்யிலை
மூன்றுகொலாங்கணை கையதுவிண்ணாண்
மூன்றுகொலாம்புர மெய்தனர்தாமே. 3

நாலுகொலாமவர் தம்முகமாவன
நாலுகொலாஞ்சன னம்முதற்றோற்றமு
நாலுகொலாமவ ரூர்தியின்பாதங்கள்
நாலுகொலாமறை பாடினதாமே. 4

அஞ்சுகொலாமவ ராடரவின் படம்
அஞ்சுகொலாமவர் வெல்புலனைவன
வஞ்சுகொலாமவர் காயப்பட்டான்கணை
யஞ்சுகொலாமல ராடினதாமே 5

ஆறுகொலாமவ ரங்கம்படைத்தன
வாறுகொலாமவர் தம்மகனார்முக
மாறுகொலாமவர் தார்மிசைவண்டின்கா
லாறுகொலாஞ்சுவை யாக்கினதாமே 6

ஏழுகொலாமவ ரூழிபடைத்தன
ஏழுகொலாமவர் கண்டவிருங்கடல்
ஏழுகொலாமவ ராளுமுலகங்கள்
ஏழுகொலாமிசை யாக்கினதாமே 7

எட்டுக்கொலாமவ ரீறில்பெருங்குண
மெட்டுக்கொலாமவர் சூடுமினமல
ரெட்டுக்கொலாமவர் தோளிணையாவன
எட்டுக்கொலாந்திசை யாக்கினதாமே 8

ஒன்பதுபோலவர் வாசல்வகுத்தன
ஒன்பதுபோலவர் மார்பினினூலிழை
யொன்பதுபோலவர் கோலக்குழற்சடை
யொன்பதுபோலவர் பாரிடந்தானே. 9

பத்துக்கொலாமவர் பாம்பின்கண் பாம்பின் பல்
பத்துக்கொலாமெயி றுந்நெரிந்துக்கன
பத்துகொலாமவர் காயப்பட்டான்றலை
பத்துக்கொலாமடி யார்செய்கைதானே 10

திருச்சிற்றம்பலம்.

## நமச்சிவாயப்பதிகம்-பண்-காந்தாரபஞ்சமம்.

### திருச்சிற்றம்பலம்.

சொற்றுணைவேதியன் சோதிவானவன்
பொற்றுணைதிருந்தடி பொருந்தக்கைதொழக்
கற்றுணைப்பூட்டியோர் கடலிற்பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே. 1

பூவினுக்கருங்கலம் பொங்குதாமரை
யாவினுக்கருங்கலம் அரனஞ்சாடுதல்
கோவினுக்கருங்கலங் கோட்டமில்லது
நாவினுக்கருங்கல நமச்சிவாயவே. 2

விண்ணுறவடுக்கிய விறகின்வெவ்வழ
லுண்ணியபுகிலவை யொன்றுமில்லையாம்
பண்ணியவுலகினிற் பயின்றபாவத்தை
நண்ணிநின்றறுப்பது நமச்சிவாயவே. 3

இடுக்கண்பட்டிருக்கினு மிரந்தியாரையும்
விடுக்கிற்பிரானென்று வினவுவோமல்லோம்
அடுக்கற்கீழ்க்கிடக்கினு மருளினாமுற்ற
நடுக்கத்தைக்கெடுப்பது நமச்சிவாயவே. 4

வெந்தநீறருங்கலம் விரதிகட்கெலா
மந்தணர்க்கருங்கல மருமறையாறங்கந்
திங்களுக்கருங்கலந் திகழுநீண்முடி
நங்களுக்கருங்கல நமச்சிவாயவே. 5

சலமிலன்சங்கரன் சார்ந்தவர்க்கலால்
நலமிலனாடொறு நல்குவானலன்

குலமிலரர்கிலுங் குலத்திற்கேற்பதோர்
நலமிகக்கொடுப்பது நமச்சிவாயவே. 6

வீடினுருலகினில் விழுமியத்தொண்டர்கள்
கூடினாரங்நெறி கூடச்சென்றலு
மோடினேனோடிச்சென்று ருருவங்காண்டாலு
நாடினேனுடிற்று நமச்சிவாயவே. 7

இல்லகவிளக்கது விருள்கெடுப்பது
சொல்லகவிளக்கது சோதியுள்ளது
பல்லகவிளக்கது பலருங்காண்பது
நல்லகவிளக்கது நமச்சிவாயவே. 8

முன்னெறியாகிய முதலவன்முக்கண்ண
தன்னெறியேசர ணுதல்திண்ணமே
யந்நெறியேசென் றங்கடைந்தவர்க்கெலா
நன்றியாவது நமச்சிவாயவே. 9

மாப்பிணைதழுவிய மாதோர்பாகத்தன்
பூப்பிணைதிருந்தடி பொருந்தக்கைதொழ
நாப்பிணைதழுவிய நமச்சிவாயபத்
தேத்தவல்லார்தமக் கிடுக்கணில்லையே 10

திருச்சிற்றம்பலம்.

திருமறைக்காடு-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மண்ணினேர்மொழி யாளுமைபங்கரோ
மண்ணினார்வலஞ் செய்மறைக்காடரோ
கண்ணினாலுமைக்காணக்கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள்செய்ம்மினே 1

ஈண்டுசெஞ்சடை யாகத்துளீசரோ
மூண்டகார்முகி லின்முறிக்கண்டரோ
ஆண்டுகொண்ட நீரேயருள்செய்திடும்
நீண்டமாக்கத வின்வலிநீக்குமே 2

அட்டமூர்த்திய தாகியவப்பரோ
துட்டர்வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
பட்டங்கட்டிய சென்னிப்பரமரோ
சட்டவிக்கத வந்திறப்பிம்மினே 3

அரியநான்மறை யோகியநாவரோ
பெரியவான்பரஞ் சுட்ட சுவண்டரோ
விரிகொள்கோவண வாடைவிருத்தரோ
பெரியவான்கத வம்பிரிவிக்கவே 4

மலையில்நீடிருக் கும்மறைக்காடரோ
கலைகள்வந்திறைஞ் சுங்கழலேத்தரோ
விலையில்மாமணி வண்ணவுருவரோ
தொலைவிலாக்கத வந்துணைநீக்குமே 5

பூக்குந்தாழைபு றணியருக்கெலாம்
ஆங்குந்தண்பொழில் சூழ்மறைக்காடரோ
ஆர்க்குங்காண்பரி யீரடிகேளுநமை
நோக்கிக்காணக் கதவைத்திறவுமே 6

வெந்தவெண்பொடி பூசும்விகிர்தரோ
அந்தமில்லி யணிமறைக்காடரோ
எந்தைநீயடி யார்வந்திறைஞ்சிட
இந்தமாக்கத வம்பிணிநீக்குமே 7

ஆறுசூடு மணிமறைக்காடரோ
கூறுமாதுமைக் கீந்தகுழகரோ
ஏறதேறிய வெம்பெருமானிந்த
மாறிலாக்கத வம்வலிநீக்குமே 8

சுண்ணவெண்பொடி பூசுஞ்சுவண்டரோ
பண்ணியேறுகந் தேறும்பரமரோ
அண்ணலாதி யணிமறைக்காடரோ
திண்ணமாக்கத வந்திறப்பிம்மினே 9

அரக்கனைவிற லாலடர்த்திட்டநீர்
இரக்கமொன்றிலீ ரெம்பெருமானிரே
சுரக்கும்புன்னைகள் சூழ்மறைக்காடரோ
சரக்கவிக்கத வந்திறம்பிம்மினே 10

திருச்சிற்றம்பலம்.

## திருவாரூர்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

குலம்பலம்பாவருகுண்டர்முன்னே நமக்குண்டுகொல்லோ
அலம்பலம்பாவருதண்புனலாருரவிற்சடையான்
சிலம்பலம்பாவருசேவடியான்றிருமூலத்தானம்
பலம்பலம்பாவருதொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியனே

மற்றிடமின்றிமனை துறந்தல்லுணவல்லமணர், சொற்றிடமேன்றுதுரிசுபட்டேனுக்குமுண்டுகொல்லோ, விற்றிடம்வாங்கிவிசயனோடன் றொருவேடுவனாய்ப், பற்றிடங்கொண்டான்றன் றொண்டர்க்குதொண்டராம் புண்ணியரே.

மாசினையேறியமேனியில்வன் கண்ணர்மொண்ணரைவிட்
டீசனையேநினைந்தேசறுவேனுக்கு முண்டுகொல்லோ
தேசனை யாரூர்த்திருமூலத்தானனைச்சிந்தைசெய்து
பூசனைப்பூசுரர்தொண்டர்க்குத்தொண் ராம் புண்ணியமே
குற்றமுடையவமணர் திறமதுகையகன்றிட்
டொற்றகருமஞ்செய்துய்யப்போந்தேனுக்கு முண்கொலோ
மற்பொதிதோளானிராவணன்றன் வலிவாட்டுவித்த
பொற்கழலானடித்தொண்டற்கு தொண்டராம்புண்ணியமே

திருச்சிற்றம்பலம்.

திருத்தூங்கானைமாடம்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பொன்னார்திருவடிக்கொன்றுண்டுவிண்ணப்பம்போற்றி
செய்யும் என்னாவிகாப்பதற் கிச்சையுண்டே லிருங்கூற்றகல
மின்னாருமூவிலைச் சூலமென்மேற்பொறி மேவுகொண்டல்,
துன்னார்கடந்தையுட் டூங்கானைமாடச் சுடர்க்கொழுந்தே 1

ஆவாதிருத்தொண்ட னென்னினைந்தானென் றரும்பிணி
நோய், காவாதொழியிற் கலக்குமுன்மேற்பழி காதல்செய்வார்
தேவா திருவடி நீறென்னைப்பூசு செந்தாமரையின், பூவார்
கடந்தையுட் டூங்கானைமாடத்தெம் புண்ணியனே. 2

கடவுந்திகிரி கடவாதொழியக்கயிலையுற்றான் படவுந்
திருவிரலொன்றுவைத்தாய் பனிமால்வரைபோல், இடபம்
பொறித்தென்னை யென்றுகொள்ளாயிரஞ் சோலைதிங்க,
தடவுங்கடந்தையுட்டூங்கானைமாடத்தெந் தத்துவனே 10

திருச்சிற்றம்பலம்.

## திரு அங்கமலை.

பண்-சாதரி

தலையே நீ வணங்காய் தலை மாலை தலைக்கணிந்து
தலையாலேபலி தேருந்தலைவனைத் தலையே நீ வணங்காம் 1
கண்காள் காண்மின்களோ, கடல் நஞ்சுண்டகண்டன்றன்
னை யெண்டோள்வீசிநின் றாடும்பிரான்றன்னைக், கண்காள்
காண்மின் செவிகாள் கேண்மின்களோ சிவனெம்மிறை செ
ம்பவள எரிபோல்மேனிப் பிரான்றிறமெப்போதுஞ் செவிகா
ள் கேண்மூக்கே நீ முரலாய்,முது காடுறை முக்கணனை
வாக்கேநோக்கிய மங்கைமணாளனை, மூக்கே நீ முரலாய் 4
வாயே வாழ்த்துகண்டாய், மதயானை யுரிபோர்த்துப்
பேய்வாழ்காட்டகத் தாடும்பிரான்றன்னை, வாயேவாழ்த்துக
ணை நெஞ்சே நீ நினையாய், நிமிர் புன்சடை நின்மலனை
மஞ்சாடுமலை மங்கைமணாளனை, நெஞ்சே நீ நினையாய் 6
கைகள் கூப்பித்தொழிர், கடிமாமலர் தூவிநின்று
பைவாய்ப்பாம்பரை யார்த்தபரமனைக்,கைகாள்கூப்பித்தொ
ழிர் ஆக்கையாற் பயனென், அரன்கோயில்வலம்வந்து
பூக்கையாலட்டிப் போற்றியென்னாதவிவ்,வாக்கையாற் பய
னென் கால்களாற்பயனென், கறைக்கண்டனுறைகோயில்
கோலககோபுரக் கோகரணஞ்சூழாக்,கால்களாற்பயனென் 9
உற்றா ராருளரோ, வுயிர்கொண்டுபோம்பொழுது
குற்றாலத்துறை கூத்தனல்லாமக், குற்றா ராருளரோ 10

இறுமாந் திருப்பன்கொலோ, வீசன்பல்கணத்தெண்ணப்பட்டுச் சிறுமானேந்திதன் சேவடிக்கீழ்ச்சென்றங், கிறுமாந்திருப்பன் தேடிக் கண்டுகொண்டேன், திருமாலொடுநான்முகனுந் தேடித் தேடொணாத் தேவனையே அனுளே தேடிக்கண்டு கொண்

திருச்சிற்றம்பலம்.

## கோயில்- திருவிருத்தம்.

கருநட்ட கண்டனையண்ட தலைவனைக்கற்பகத்தைச்
செருநட்டமும்மதிலெய்யவல்லானைச்செந்தீமுழங்கத்
திருநட்டமாடியைத்தில்லைக்கிறையைசிற்றம்பலத்துப்
பெருநட்டமாடியைவானவர்கோனென்றுவாழ்த்துவனே.

ஒன்றியிருந்துநினைமின்களுந்தமக்கூனமில்லைக்
கன்றியகாலனைக்காலாற்கடிந்தானடியவர்க்காச்
சென்றுதொழுமினகடில்லையுட்சிற்றம்பலத்துடன்
என்றுவந்தாயெனுமெம்பெருமான்றன்றிருக்குறிப்பே. 2

கன்மனவீர்கழியுங் கருத்தேசொல்லிக்காண்பதென்னே
நன்மனவாநவிரில்லையுட்சிற்றம்பலத்துநட்டம
பொன்மலையிற்வெள்ளிக்குன்றதுபோல
மெய்யனமேயொன்றிப்புக்கனன்போந்தசுவடில்லையே. 3

சாடாவெடுத்ததுக்கன்றன்வேள்வியிற்சந்திரனை
வீடவெடுத்ததுகாலனைநாரணனுன் முகனுந்
தேடவெடுத்ததுதில்லையுட்சிற்றம்பலத்துநட்டம்
ஆடவெடுத்திட்டபாதமன்றோ நம்மையாட்கொண்டதே 4

## திருப்பாதிருப்புலியூர்-திருவிருத்தம்.

ஈன்றாளுமாயெனதெந்தையுமாடன்றோன்றினராய்
மூன்றாயுலகம்படைத்துகந்தான்மனத்துளிருக்க
என்றாணிமையவர்க்கன்பன்றிருப்பாதிருப்புலியூர்
தோன்றாத்துணையாயிருந்தனன்றன்னடியோங்களுக்கே 1

யுற்றாய்நினைந்திடப்போதுநெஞ்சேயிந்தப்பாரைமுற்றாஞ்
சுற்றாயலைகடன்மூடினுங்கண்டேன்புதல்நமக்கு
உற்றானுமையவட்கன்பன்றிருப்பாதிருப்புலியூர்
முற்றாமுளைமதிக்கண்ணியினான்றன்மொய்கழலே 2

புழுவாய்ப்பிறக்கினும்புண்ணியாவுன்னடியென்மனத்தே
வழுவாதிருக்கவரந்தரவேண்டுமிவ்வையகத்தை
தொழுவார்க்கிறங்கியிருந்தருள் செய்யாதிருப்புலியூர்ச் [னே
செழுநீர்ப்புனற்கங்கை செஞ்சடைமேல்வைத்த தீவண்ண

திருந்தாவமணர்தந்தீநெறிப்பட்டுத்திகைத்துமுத்தி
தருந்தாளிணைக்கேசரணம்புகுந்தேன்வரையெடுத்த
பொருந்தாவரக்கனுடனெரிந்தாய் திருப்பாதிருப்புலியூர்
இருந்தாயடியேனினிப்பிறவாமல் வந்தேன்றுகொள்ளே 4

## திருவொற்றியூர்-நேரிசை.

ஓம்பினேன்கூட்டைவாளாவுள்ளத்தோர்கொடுமைவைத்துக்
காம்பிலாமூழைபோலக்கருதிற்றேமுகக்கமாட்டேன்
பாம்பின்வாய்த்தேரைபோலப்பலபலநினைக்கின்றேனை
யோம்பிநீயுய்யக்கொள்ளாயொற்றியூருடையகோவே 1

மனமெனுந்தோணிபற்றிமதியெனுங்கோலையூன்றிச்
சினமெனுஞ்சரக்கையேற்றிச் செரிகடலோடும்போது

மதனென்னும்பாறைதாக்கிமறியும்போதரியவொண்ணா
துணையுமுணர்வைநல்காயொற்றியூருடையகோவே 2

திருச்சிற்றம்பலம்.

## திருக்குறுக்கை திருநேரிசை

ஆதியிற்பிரமனார் தாமர்ச்சித்தாரடியிணைக்கீழ்
ஓதியவேதாபாவருணரு மாருணரலுற்றார்
சோதியுட்சுடராய்த்தோன்றிச்சொல்வினையிறந்தாய்பல்பூக்
கோதிவண்டறைபுஞ்சோலைக் குறக்கைவீரட்டனாரே. 1

நீற்றினைநிறையப்பூசி நித்தலுநியமஞ்செய்து
ஆற்றுநீர்புரிக்காட்டும் மந்தணனாரைக்கொல்வான்
சாற்றுநாளற்றதென்று தருமராசற்காய்வந்த
கூற்றினைக்குமைப்பர்போலுங் குறுக்கைவீரட்டனாரே. 2

தழைத்ததோராத்தியின்கீழ்த் தாபரமணலாற்கூப்பி
யழைத்தங்கேயாவின்பாலைக் கறந்துகொண்டாட்டக்கண்டு
பிழைத்ததன்றாதைதாளைப் பெருங்கொடுமழுவால்வீசக்
குழைத்ததோரமுதமீந்தார் குறுக்கைவீரட்டனாரே. 3

சிலந்தியுமானைக்காவிற்றிரு நிழற்பந்தர்செய்து
உலந்தவணிறந்தபோதே கோச்செங்கணானுமாகக்
கலந்தநீர்க்காவிரிசூழ் சோணாட்டுச்சோழர்தங்கள்
குலந்தனிற்பிறப்பித்திட்டார் குறுக்கைவீரட்டனாரே. 4

எடுத்தனனெழிற்கயிலை யிலங்கையர்மன்னன்றன்னை
யடுத்தொருவிரலாலூன்ற வலறிப்போயவனும்வீழ்ந்து
விடுத்தனன்கைநரம்பால் வேதகீதங்கள்பாடக்
கொடுத்தனர்கொற்றவாளுங் குறுக்கைவீரட்டனாரே, 5

## திருவையாறு திருநேரிசை.

கங்கையைச்சடையுள்வைத்தார்கதிர்பொறியரவும்வைத்தார்
திங்களைத்திகழவைத்தார் திசைதொழவும்வைத்தார்
மங்கையைப்பாகம்வைத்தார் மான்மறிமழுவும்வைத்தார்
அங்கையுளனலும்வைத்தா ரையனையாறனாரே. 1

பொடிதனைப்பூசவைத்தார் பொங்குவெண்ணூலும்வைத்தார்
கடியதோர்நாகம்வைத்தார காலனைக்காலில்வைத்தார்
வடிவுடைமங்கைதன்னை மார்பிலோர்பாகம்வைத்தார்
அடியிணைதொழவும்வைத்தா ரையனையாறனாரே. 2

இரப்பவர்க்கீயவைத்தா ரீயவர்க்கருளும்வைத்தார்
கரப்பவர்தங்கட்கெல்லாங் கடுநரகங்கள்வைத்தார்
பரப்புநீர்கங்கைதன்னைப் படர்சடைப்பாகம்வைத்தார்
அரக்கனுக்கருளும்வைத்தா ரையனையாறனாரே. 3

திருச்சிற்றம்பலம்.

## கோயில் பெரியதிருத்தாண்டகம்,

திருச்சிற்றம்பலம்.

அரியானையந்தணர்தஞ் சிந்தையானை யருமறையினகத்
தானை யணுவையார்க்குந் தெரியாததத்துவனைத் தேனைப்
பாலைத்திகழொளியைத் தேவர்கடங்கோனைமற்றைக் கரியானை
நான்முகனைக்கனலைக்காற்றைக் கனைகடலைக் குலவரையைக்
கலந்துநின்ற பெரியானைப் பெரும்பற்றப்புலியூரானைப் பேசா
தநாளெல்லாம் பிறவாநாளே, 1

கற்றானைக்கங்கைவார் சடையான்றன்னைக் காவிரிசூழ்வ
லஞ்சுழியுங்கருதினானை அற்றானையலர்ந்தார்க்குமருள்செய்வா

னையாரும்புகுவானை யறிந்தோமன்றே மற்றாருந்தன்னொப்
பாரில்லாதானை வானவர்களெப்பொழுதும்வணங்கியேத்தும்
பெற்றானைப்பெரும்பற்றப் புலியூரானைப் பேசாதநாளெல்லாம்
பிறவாநாளே. 2

வரும்பயனையெழுநரம்பி னோசையானைவரைசிலையாவா
னவர்கண்முயன்றவாளி அரும்பயஞ்செபவுணர் புரமெரியச்
கோத்தவம்மானையலைகடனஞ்சயின்றான்றன்னைச் சுரும்பவி
ழுங்குழன்மடவார் கடைக்கணோக்கிற் றுளங்காதசிந்தையரா
த்துறந்தோருள்ளப்பெரும்பயனைப்பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாதநாளெல்லரம் பிறதாநாளே. 3

காரானையீருரிவைப்போர்வையானைக் காமருபூங்கச்சியே
கம்பன்றன்னை யாரேனுமடியவர்கட் கணியான்றன்னையமரர்
களுக்கறிவரியவளவிலானைப் பாரோரும்விண்ணோரும் பணிய
நட்டம்பயில்கின்றபரஞ்சுடரைப்பரனையெண்ணிப்பேரானைப்
பெரும்பற்றப்புலியூரானைப் பேசாதநாளெல்லாம்பிறவாநாளே

முற்றாதபான்மதியுஞ்சூடினானை மூவுலகுந்தானாயமுதல்
வன்றன்னைச் செற்றார்கள்புரமூன்றுஞ் சென்றான்றன்னைத்
திகழொளியை மரகதத்தைத்தேனைப்பாலைக் குற்றாலத்தமர்ந்
துறையுங்குழகன்றன்னை கூத்தாடவல்லானைக் கோனைஞான
ம்பெற்றார்கள் பெரும்பற்றப்புலியூரானைப் பேசாத நாளெல்
லாம் பிறவாநாளே. 5

## திருக்கருகாவூர் திருத்தாண்டகம்.

குருகாய்வயரமாங்கூறுநாளங் கொள்ளுங்கிழமையாங்
கோளேதானும் பருகாவமிர்தமாய்பாலினெய்யாம்பழத்தினிர

தமாம் பாட்டில்பண்ணும் ஒருகாலுமையாளோர்பாகனுமாமு
ண்ணின்ற நாவிற்குரையாடியாம் கருவாயுலகுக்கு முன்னே
தோன்றுங் கண்ணுங்கருகாவூரெந்தைதானே. 1

வித்தாமுளையாகும் வேரேதானும்வேண்டுமுருவமாம்வி
ரும்பிநின்றபத்தாமடியார்க்கோர் பாங்கானுமாப்பானிறமாய்
பரஞ்சோதிதானேயாகும் தொத்தாமமரர்கணஞ்சூழ்ந்து போ
ற்றத்தோன்றா தென்னுள்ளத்தினுள்ளேநின்றகத்தாமடியே
ற்குக்காணாகாட்டுங் கண்ணுங்கருகாவூ ரெந்தைதானே. 2

ஒருத்தனுமொன்னாரபுரங்கள்மூன்று மொள்ளழலைமா
ட்டியுடனேவைத்த இருத்தானுமெண்ணான் முடிகள்பத்து
முடிகள்பத்துமிசைந்தானு மின்னிசைகள்கேட் டானாகும் அ
றுத்தானு மஞ்சுமடக்கியங்கை யாகாயமந்திரமுமானானாகும்
கறுத்தானுங் காலனைக்காலால்வீழக்கண்ணுங்கருகாவீரெந்தை
தானே. 3

## திருப்பூவனம் திருத்தாண்டகம்.

வடிவேறுதிரிசூலந் தோன்றுந்தோன்றும் வளர்சடைமே
லிளமதியந்தோன்றுந்தோன்றுங் கடியேறுகமழ்கொன்றைக்
கண்ணிதோன்றுந் தோன்றுங் காதில்வெண்குழைதோடுகல
ந்துதோன்று மிடியேறுகளிற்றுரிவைப் போர்வைதோன்று
மெருதிகழுந்திருமுடியு மிலங்கித்தோன்றும் பொடியேறு தி
ருமேனிபொலிந்துதோன்றும் பொழிறிகழும்பூவணத் தெம்
புனிதனார்க்கே. 1

ஆணாகிப்பெண்ணாய்வடிவுதோன்றுமடியவர்கட்காரமுத
மாகித்தோன்று மூணாகவூர்திரிவானாகித்தோன்று மொற்றை

வெண்பிறைதோன் றும்பற்றூர்தம்மேற் சேணாகவரைவில்லா
லெரித்தஞான்றுஞ்செற்றவர்தம் பெலும்பிணர்செறியச்செய்
தபூணுணுமரைநாணும் பொலிந்துதோன்றும் பொழிறிகழும்
பூவணத்தெம் புனிதனார்க்கே. 2

படைமலிந்தமழுவாளுமானுந்தோன்றும் பன்னிரண்டு
கண்ணுடைய பிள்ளைதோன்றும் நடைமலிந்த விடையோடு
கொடியுந்தோன்றும் நான்மறையினொலிதோன்றும் நயனந்
தோன்று முடைமலிந்தகோவணமுங் கீளுந்தோன்று மூரல்
வெண்சிரமாலை யுலாவித்தோன்றும் புடைமலிந்த பூதத்தின்
பொலிவுதோன்றும் புடைமலிந்தபொழிறிகழும் பூவணத்
தெம் புனிதனார்க்கே. 3

## திருநாகைக்காரோணம் திருத்தாண்டகம்.

பாரார்பரவும்பழனத்தானைப்பருப்பதத்தானைப்பஞ்ஞீலி
யானைச் சீரார்செழும்பவளக்குன்றொப்பானைத் திகழுந் திருமு
டிமேற்றிங்கள்சூடிப் பேராயிரமுடையபெம்மான்றன்னைப பி
ரர்தன்னைக்காட்சிக்கரியான்றன்னைக் காரார்கடம்புடைசூழ்ந்
தனாகைக் காரோணத்தெஞ்ஞான்றுங் காணலாமே. 1

வுண்ணோர்பெருமானைவீரட்டானை வெண்ணீறுமெய்ப்
பணிந்தமேனியானைப்பெண்ணானையாணானைப்பேடியானைப்பெ
ரும்பற்றத்தண்புலியூர்பேணினானை அண்ணாமலையானையானைத்
தாடுமணியாரூர்வீற்றிருந்த வம்மான்றன்னைக்கண்ணார்கடல்பு
டைசூழ்ந்தனாகைக் காரோணத்தெஞ்ஞான்றுங்காணலாமே

பொன்மணியைப்பூங்கொன்றைமாலையானைப்புண்ணிய
னைவெண்ணீறுபூசினானைச்சின்மணியமூவிலையஞ்சூலத்தானை

தென்சிராப்பள்ளி சிவலோகத்தானை மன்மணியை வாள்சடை
லையூராம்பேணி வல்லெருதொன்றேறு மறைவல்லான்றன்னை
க்கண்மணிக்கள் வெண்டிரைசூழ்ந்தநாகைக் காரோணத்தெ
ஞ்ஞான்றுங் காணலாமே. 3

திருச்சிற்றம்பலம்.

## திருஆடுவதுறை திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

திருவேயென்செல்வமே தேனேவானோர்செழுஞ்சுடரே
செழுஞ்சுடர்நற்சோதிமிக்க உருவேயென்னுறவேயென் னூ
னேயூனின் னுள்ளமேயுள்ளத்தினுள்ளேநின்ற கருவேயென்
கற்பகமே கண்ணே கண்ணிற்கருமணியேமணியாடுபாவாய் கா
வாய் அருவாயவல்வினைநோயடையாவண்ண மாவடுதண்டு
றையுறையுமமரரேறே. 1

சிலைத்தார்திரிபுரங்கடமடங்கவேவச் சிலைவளைவித்துமைய
வளையஞ்சநோக்கிக் கலித்தாங்கிரும்பிடிமேற்கைவைத்தோடுங்
களிறுரித்தகங்காளா வெங்கள்கோவே நிலைத்தாரவர்தமக்கே
பொறையாய்நாளு நில்லாவுயிரோம்பநீதனேநான் அலுத்தே
னடியேனையஞ்சலென்னா யாவடுதண்டுறையுறைமமரரேறே.

துறந்தார்தந்நெறிக்கட் சென்றேனல்லேன் றுணைமா
லைசூட்டநான் றூயேனல்லேன்பிறந்தேனின்றிருவருளேபே
சினல்லாற் பேசாதநாளெல்லாம்பிறவாநாளே செறிந்தார்மதி
லிலங்கைக் கோமான்றன்னைச் செறுவரைக்கீழடர்த் தருளிச்
செய்கையெல்லாம் அறிந்தேனடியேனையஞ்சலென்னா யாவ
டுதண்டுறையுறையு மமரரேறே. 3

திருச்சிற்றம்பலம்.

## திருவானைக்கா திருத்தாண்டகம்.

### திருச்சிற்றம்பலம்.

எத்தாயரெத்தந்தையெச்சுற்றத்தா ரெம்மாடுசும்மாடா
டாமேவர்நல்லார் செத்தால்வந்துதவுவாரொருவரில்லைச் சிறு
விறகாற்றீமூட்டிச்செல்லாநிற்பர் சித்தாயவேடத்தாய்நீடுபொ
ன்னித் திருவானைக்காவுடைய செல்வாவென்றன் அத்தாவு
ன்பொற்பாதமடையப்பெற்றா லல்லகண்டங்கொண்டடியே
னென்செய்கேனே. 1

ஊனுயிராகியதனுள்நின்ற வுணர்வாகிப்பிறவனைத்துந்தா
யாய்நின்றாய் நானேதுமறியாமே யென்னுள்வந்துநல்லனவுந்
தீயனவுங்காட்டாநின்றாய் தேனாருங்கொன்றையனே நின்றி
யூராய் திருவானைக்காவிலுறை சிவனே ஞானம் ஆனாயுன்பொ
ற்பாத மடையப்பெற்றா லல்லகண்டங்கொண்டடியேனென்
செய்கேனே. 2

உரையாரும்புகழானே யொற்றியூராகச்சியேகம்பனேகா
ரோணத்தாய் விரையாருமலர்தூவி வணங்குவார்பான்மிக்கா
னேயக்கரவமாரம்பூண்டாய் திரையாரும்புனற்பொன்னித் தீ
ர்த்தமல்குந் திருவானைக்காவிலுறை தேனேவானோர் அறை
யாவுன்பொற்பாத மடையப்பெற்றா லல்லகண்டங் கொண்ட
டியே னென்செய்கேனே. 3

கொடியேயும்வெள்ளேற்றாய்கூளிபாடக்குறட்பூதங்கூத்
தாடநீயுமாடி வடிவேயுமங்கைதனைவைத்தமைந்தா மதிலா
னைக்காவுளாய்மாகாளத்தாய் படியேயுங்கடலிலங்கைக் கோ
மான்றன்னைப் பருமுடியுந்திரடோளுமடர்த்துகந்த அடியே

வந்தடைந்தடிமை யாகப்பெற்று லல்லகண்டங்கொண்டடி
னென்செய்கேனே. 4

திருச்சிற்றம்பலம்.

## திருக்கீழ்வேளூர் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆளானவடியவர்கட்கன்பன்றன்னை யானஞ்சுமாடியை
நானபயம்புக்க தாளானைத்தன்னொப்பாரில்லாதானைச்சந்தன
முங்குங்குமமுஞ்சாந்துந்தோய்ந்த தோளானைத்தோளாதமுத்
தொப்பானைத் தூவெளுத்தகோவணத்தையரையிலார்த்த கீ
ளானைக்கீழ்வேளூ ராளுங்கோவைக்கேடிலியை நாடுமவர்கே
டிலாரே. 1

தடுத்தானைக்காலனைக்காலாற்பொன்றத் தன்னடைந்த
மாணக்கன்றருள்செய்தானை உடுத்தானைப்புலியதோளடக்கும்
பாம்புமுள்குவாருள்ளத்தி னுள்ளான்றன்னை மடுத்தானையரு
நஞ்சமிடற்றுட்டங்கவானவர்கள் கூடியவத்தக்கன் வேள்வி
கெடுத்தானைக்கீழ்வேளூ ராளுங்கோவைக் கேடிலியைநாடும
வர் கேடிலாரே. 2

முறிப்பானபேசிமலையெடுத்தான்றானு முதுகில்முன்கை
கரம்பையெடுத்துபரடப் பறிப்பானைச்சிற்றறிவாணீட்டினு
னைப் பாவியேனெஞ்சகத்தேபாதப்போது பொறித்தானைப்பு
ரமூன்று மெரிசெய்தானைப் பொய்யர்களைப் பொய்செய்து
போதுபோக்கிக் கிறிப்பானைக்கீழ்வேளூ ராளுங்கோவைக்கே
டிலியை நாடுமவர் கேடிலாரே. 3

திருச்சிற்றம்பலம்.

## திருப்புள்ளிருக்கும்வேளூர் திருத்தாண்டகம்.

புண்ணியனைப் பைங்கொடியாள பாகன்றன்னைப் படர்
சடைமேற்புனல்கரந்த படிறன்றன்னை, நண்ணிமனையென்
னாக்கித்தன்னானை நான்மறையினற்பொருளை நளிவெண்டி
ங்கட் கண்ணியனைக்கடியநடை விடையன்றேறுங்காரணனை
காரணனைக்கமலத்தோங்கும் புண்ணியனைப் புள்ளிருக்கும்
வேளூரானைப் போற்றாதேயாற்றநாள் போக்கினேன் 1

இறுத்தானை யிலங்கையர்கோன் சிரங்கள்பத்து மெழுந
ரம்பினினிசைகேட் டின்புற்றானை யறுத்தானையடியார்தம்
மருநோய்யாவு மலைகடலிலால முண்டுகண்டங் கருத்தானைக்
கண்ணழலாற் காமனாகங் காய்ந்தானைக்கனன்மழுவுங் கலைய
மங்கைப் பொறுத்தானைப் புள்ளிருக்கும் வேளூரானைப் போ
ற்றாதேநாள் போக்கினேன். 2

திருச்சிற்றம்பலம்.

## திருவையாறு திருத்தாண்டகம்.

ஓசையொலியெலா மானாய்நீயேயுலகுக்கொருவனாய்நின்
றாய்நீயே வாசமலரெலாமானாய்நீயேமலையான்மருமகனாய்நின்
றாய்நீயே பேசப்பெரிதுமினியாய்நீயே பிரானாயடியென்மேல்
வைத்தாய்நீயே தேகவிளக்கெலாமானாய்நீயே திருவையாறக
லாத செப்பொற்சோதீ. 1

நோக்கரியதிருமேனியுடையாய்நீயே நோவாமேநோக்க
ருளவல்லாய்நீயே காப்பரியவைம்புலனுங் காத்தாய்நீயே காம

னையுங்கண்ணழலாற் காய்ந்தாய்நீயே ஆர்ப்பரியமாகரகமார்த்தாய்நீயே யடியானென்றடியென்மேல்வைத்தாய்நீயே தீர்ப்பரியவல்வினைநோய் தீர்ப்பாய்நீயே திருவையாறகலாத செம்பொற்சோதி. 2

எல்லாவுலகமுமானாய்நீயே யேகம்பமேவியிருந்தாய்நீயே நல்லாரைநன்மையறிவாய்நீயே ஞானச்சுடர்விளக்காய் நின்றாய்நீயே பொல்லாவினைகளறுப்பாய்நீயே புகழ்சேவடியென்மேல்வைத்தாய்நீயே செல்வாய்செல்வந்தருவாய்நீயே திருவையாறகலாத செம்பொற்சோதி. 3

எண்டிசைக்குமெண்சுடராய் நின்றாய்நீயே யேகம்பமேயவிறைவநீயே வண்டிசைக்கு நறுங்கொன்றைத்தாராய்நீயே வாராவுலகருளவல்லாய்நீயே தொண்டிசைத்துன்னடி பரவநின்றாய்நீயே தூமலச்சேவடியன்மேல் வைத்தாய்நீயே திண்சிலைக்கோர் சரங்கூட்டவல்லாய்நீயே திருவையாறகலாத செபொற்சோதி. 4

ஆறுமதியாவிடத்தாய்நீயேயாகாயந்தேருரவல்லாய்நீயே பெரும்பெரிய விலங்கைவேந்தன்பெரியமுடிபத்திறுத்தாய்நீயேவூரும்புரமூன்று மட்டாய்நீயே யொண்டாமரையானுமாலுங்கூடித் தேருமடியெனமேல் வைத்தாய்நீயே திருவையாறகலாத செம்பொற்சோதி. 5

திருச்சிற்றம்பலம்.

## திருநெய்த்தானம் திருத்தாண்டகம்.

ஆர்த்தவெனக்கன்பநீயேயென்று மாதிக்கயிலாயநீயேயென்றுங் கூர்த்தநடமாடியே யென்றுங்கோடிகா மேயகுழகாவென்றும் பார்த்தற்கருள்செய்தாய் நீயேயென்றும்பழைய

னூர்மேவியபண்பாவென்றுந் தீர்த்தனசிவலோக நீயேயென்
றுநின்றநெய்தானாவென் னெஞ்சுளாயே. 1

அல்லாய்ப்பகலானாய்நீயேயென்று மாதிக்கயிலாயநீயே
யென்று கல்லாலமர்ந்தாய்யென்றுங் காளத்திக்கற்பகமுநீயே
யென்றுஞ் சொல்லாய்ப்பொருளானாய் நீயேயென்றுஞ்சோற்
றுத்துறையாய்நீயேயென்றுஞ் செல்வாய்த்திருவானாய் நீயே
யென்றுநின்ற நெய்தானாவென்னெஞ்சுளாயே. 2

முந்தியிருந்தாய்நீயேயென்று முன்கையிலைமேவினாய்நீ
யேயென்று நந்திக்கருள்செய்தாநீயென்று கடமாடிநள்ளாற
நீயேயென்றும் பைஞ்ஞீலிமேவினாய்நீயேயென்றுஞ் சித்திப்
பரியாய்நீயேயெனாறுநின்றநெய்த்தானாவென்னெஞ்சுளாயே

தந்தைதாயில்லாதாய்நீயேயென்றுந் தலையார்கயிலாயநீ
யேயென்று மெந்தாயெம்பிரானானாய்நீயேயென்று மேவீகம்
பத்தேன் னீயேயென்று முந்தியமுக்கணாய் நீயேயென்று மூ
வலூர்மேவினாய்நீயேயென்றும் சிந்தையாய் தேனாராய் நீயே
யென்றுநின்ற நெய்தானாவென் னெஞ்சுளாயே. 4

திருச்சிற்றம்பலம்.

## திருபூந்திருத்தி திருத்தாண்டகம்.

நில்லாதநீர்சடைமேல்நிற்பித்தானை நினையாவென்னெ
ஞ்சை நினைவித்தானைக்கல்லாதவெல்லாங்கற்பித்தானைக்காணா
தனவெல்லாங்காட்டினானைச் சொல்லாதனவெல்லாஞ்சொல்

வியென்னைத் தொடர்ந்திங்கடியேனை யாளாக்கொண்டுபொ
ல்லாவென்னோய்தீர்த்த புனிதன்றன்னைப் புண்ணியனைப் பூந்
துருத்திகண்டேனே. 1

குற்றாலங்கோகரண மேவினானைக் கொடுங்கைக்கடுங்கூ
ற்றைப் பாய்ந்தான்றன்னை உற்றாலநஞ்சுண்டொடிக்கினானை
யுணராவவன்னெஞ்சை யுணர்வித்தானைப் பற்றாலின்கீழங்கி
ருந்தான்றன்னைப் பண்ணார்ந்தவீணை பயின்றான்றன்னைப்புற்
றுடராவர்த்த புனிதன்றன்னைப் புண்ணியனைப் பூந்துருத்திக
ண்டேனே. 2

எனக்கென்றுமினியானை யெம்மான்றன்னை யெழிலாரு
மேகம்பமேயான்றன்னைப் பனக்கென்றும்வருவானை வஞ்சர்
நெஞ்சில்நில்லானை நின்றியூர்மேயான்றன்னைத் தனக்கென்
றுமடியேனை யாளாகக்கொண்ட சங்கரனைச்சங்கவார் குழை
யான்றன்னைப் புனக்குன்றைத்தாரணிந்த புனிதன்றன்னைப்
பொய்யிலியைப் பூந்துருத்தி கண்டேனே. 3

பிறத்தானைமலைகோத்தங் கெடுக்தான்றன்னைமணிமுடி
போடிருபதுதோளொரியக்காலா லிறுத்தானையெழுகரம்பினி
சைகேட்டானையெண்டிசைக்குங்கண்ணானான் சிரமெலொன்
றையறுத்தானையமரர்களும் கழுதீர்ந்தானை யாவர்க்குந்தாங்
கொணாநஞ்சமுண்டு பொறுத்தானை புண்ணியனைப் புனிதன்
றன்னைப் பொய்யிலியைப் பீந்துருத்தி கண்டேனே. 4

திருச்சிற்றம்பலம்.

## திருமழபாடி திருத்தாண்டகம்.

### திருச்சிற்றம்பலம்.

நீறேறு திருமேனியுடையான்கண்டாய் நெற்று
மேலொற்றைக்கணிறைந்தான்கண்டாய். கூறுகவுமை
பாகங்கொண்டான்கண்டாய்கொடியவிடமுண்டிருண்
டகண்டன்கண்டா, யேறேறியெங்குந் திரிவான் கண்
டா யேழுலகுமேழ்மலையுமானான்கண்டாய், மாறானார்
தம்மரண மாட்டான்கண்டாய் மழபாடிமன்னுமணாள
ன்றானே, 1

தாமரையான்றனதலையைச்சாய்த்தான்கண்டாய்
தகவுடையார் நெஞ்சிருக்கைகொண்டான்கண்டாய்,
பூமலரானேத்தும்புநிதன்கண்டாய் புணர்ச்சிப்பொரு
ளாகினின்றான்கண்டாய் ஏமருவுவெஞ்சிலையென்றே
ந்திகண்டா யிருளார்ந்தகண்டத்திறைவன் கண்டாய்,
மாமருவுங் கலைகையிலேந்திகண்டாய் மழபாடிமன்னு
மணாளன்றானே. 2

ஒருசுடராயுலகேழுமானான்கண்டாய் யோங்கா
ரத்துட்பொருளாய்நின்றான்கண்டாய், விரிசுடராய்வி
ளங்கொளியாய்நின்றான்கண்டாய் விழவொலியும்வே
ல்வொலியுமானான்கண்டாய், இருசுடர்மீ தோடவிலங்
கைக்கோனை யீடழியவிருபதுதோளிறுத்தான் கண்
டாய், மருசுடரின் மாணிக்கக்குன்றுகண்டாய்மழபா
டிமன்னுமணாளன்றானே. 3

## திருவீழிமிழலை - திருத்தாண்டகம்,

### திருச்சிற்றம்பலம்.

போரானையீருரிவைப்போர்வையானைப் புலியத ளேயுடையாடை போற்றினானைப், பாரானைமதியானைப் பகலானானைப் பல்லுயிராய்நெடுவெளியாய்ப்பரந்துநி ன்ற,நீரானைக்காற்றானைத் தீயானானை நினையாதார்புரமெ ரியநின்றதெய்வத்,தேரானைத்திருவீழிமிழலையானைச் சேராதார்தீநெறிக்கேசேர்கின்றாரே. 1

சவந்தாங்குமயானத்துச் சாம்பலென்பு தலையோ டுமயிர்க்கயிறுதரித்தான்றன்னைப், பவந்தாங்குபாசுப தவேடத்தானைப் பண்டமரர்கொண்டுகந்தவேள்வியெ ல்லாம்[illegible]ர்ந்தானைக் கச்சியேகம்பன்றன்னைக் கழல டைந்தான்மேற்கறுத்த காலன்வீழச், சிவந்தானைத்தி ருவீழிமிழலையானைச், சேராதார் தீநெறிக்கே சேர்கி ன்றாரே. 2

அறுத்தானை யயன்றலைக ளஞ்சிலொன்றை யஞ் சாதே வரையெடுத்த வரக்கன்றோள்க, ளிறுத்தானை யெழுநரம்பி னிசைகேட்டானை யிந்துவினைத்தேய்த்தா னை யிரவிதன்பற், பறித்தானைப் பகீரதற்கா வானோர் வேண்டப் பரந்திழியும்புனற்கங்கை பனிபோலாகச், செறுத்தானைத் திருவீழிமிழலையானைச் சேராதார்தீ நெறிக்கே சேர்கின்றாரே. 3

கண்ணவன்காண் கண்ணொளிசேர் காட்சியான் காண் கந்தருவம்பாட்டிசையிற்காட்டுகின்ற, பண்ணவ ன்காண் பண்ணவற்றின் றிறலானான்காண் பழமாகிச்சு

வையாகிப்பயக்கின்றான்காண் முன்னவன்காண்டீயவ
ன்காணீரானான்காண் வந்தலைக்கு மாருதன்காண்ம
ழைமேகஞ்சேர்விண்ணவன்காண் விண்ணவர்க்குமே
லானான்காண் விண்ணிழிதண்வீழிமிழலையானே. 4

சந்திரனைத்திருவடியார் றளர்வித்தான்காண் தக்
கனையுமுனிந்தெச்சன்றலைகொண்டான்கா, ணிந்திரனை
த்தோண்முறிவித் தருள்செய்தான்காணீசன்காணேச
ன்காணினைவோர்க்கெல்லா, மந்திரமுமறைப்பொரு
ளுமாயினான்காண் மாலொடயன்மேலொடுகீழறியா
வண்ணம் வெந்தழலின்விசேடா யோங்கினான்காண்
விண்ணிழிதண்வீழிமிழலையானே. 5

---

## திருவாரூர்-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

திருமணியைத் தித்திக்குந் தேனைப்பாலைத் தீங்
கரும்பினின்சுவையைத் தெளிந்ததேறல் குருமணியைக்
குழன்மொந்தைதாளம்வீணை சொக்கரையின் கச்சரை
யின் பாணியானைப் பருமணியைப்பவளத்தைப் பசும்
பொன்முகத்தைப் பருப்பதத்தி லருங்கலத்தைப்பாவ
த்தீர்க்கும், அருமணியையாரூரிலம்மாற்றன்னை யறியா
தடிநாயேனயர்த்தவாறே. 1

பொன்னேபொற்றிருமேனியுடையான்றன்னைப்
பொங்குவெண்ணூலானைப்புனிதன்றன்னை, மின்னானை
மின்னிடையாள்பாகன்றன்னை வேழத்தினுரிவிரும்பி
ப்போர்த்தான்றன்னைத் தன்னானைத்தன்னொப்பா ரில்,

லாதானைத் தத்துவனையுத்தமனைத் தழல்போன்மேனி, அன்னனையாரூரி லம்மான் றன்னை யறியாதடிநாயேனயர்த்தவாறே. 2

ஏற்றானை யேழுலகு மானான்றன்னை யேழ்கடலு மேழ்மலையுமானான்றன்னை, கூற்றானைகூற்றமுதைத்துபுகந்தான்றன்னைக்கொடுமழுவாள்கொண்டதோர்கையானைக், காற்றானைத்தீயானைநீருமாகிக் கடிகமழும்புன்சடைமேற்கங்கைவெள்ள, ஆற்றானையாரூரிலம்மான்றன்னை யறியாதடிநாயேனயர்த்தவாறே. 3

முத்தினை மணிதன்னை மாணிக்கத்தைமூவாதகற்பகத்தின் கொழுந்துதன்னைக், கொத்தினைவயிரத்தைக் கொள்வேலூர்ந்துகோளார்வொன்றூட்டுங் குழகன்றன்னைப், பத்தனைபத்தர்மனத்துளானைப் பருகிபோற்றிருமேனி யுடையான்றன்னை யத்தனையாரூரி லம்மான்றன்னை யறியாதடிநாயேனயர்த்தவாறே. 4

சங்கரன்காண் சக்கரமாற் கருள்செய்தான்காண் தருணேந்துசேகரன்காண்டலைவன்றான்கா, ணங்கமத்தயன்சிரங்களைந்திடொன்றை அறுத்தவன்கா ணணிபொழில் சூழையாற்றான்காண் ,எங்கள்பெருமான்கா ணென்னிடர்கள்போகவருள் செய்யுமிறைவன்கா ணுமையேரேத்துஞ், செங்கமலவயல்புடைசூழ திருவாரூரிற்றிருமூலத்தானத்தெஞ் செல்வன்றானே. 5

செருவளருஞ்செங்கண்மாலேற்றினான்காண் டென்னனைக்காவான்காண் டயில்விழ, மருவலர்தம்புரமூன்று மெரிசெய்தான்காண் வஞ்சகர்பாலணுகாத மை

ந்தன்காண், அருவரையை யெடுத்தவன்றன் சிரங்கள் பத்து மைந்நான்கிதோளுநெரிந்தலறவன்று, திருவிரலாலடந்வன்காண் திருவாரூரிற் றிருமூலத்தானத்தெஞ்செல்வன்றானே. 6

ஒருவனாயுலகேத்தநின்றநாளோ வோருருவேமூவுருமானநாளோ, கருவனாய்காலனைமுன் காய்ந்தநாளோ காமனையுங்கண்ணழலால்விழித்தநாளோ, மருவனாய் மண்ணும்விண்ணுந் தெரிந்தநாளோ மான்மழுக்கையேந்தியோர் மாதோர்பாகந், திருவினான்சேர்வதற்கு முன்னோபின்னோதிருவாரூர் கோயிலாக்கொண்டநாளே. 7

புகையெட்டும் போக்கெட்டும் புலன்களெட்டும் பூகலங்களவையெட்டும் பொழில்களெட்டும், கலையெட்டுங்காப்பெட்டுங்காட்சியெட்டுங் கழற்சேவடியடைந்தார்களைகளெட்டும, நகையெட்டுநாளெட்டுநன்மையெட்டுநலஞ்சிறந்தார மனத்தகத்து மலர்களெட்டும், திசையெட்டுந் தெரிப்பதற்கு முன்னோபின்னோ திருவாரூர்கோயிலாக்கொண்டநாளே. 8

ஈசனாயுலகேழுமலையுமாகியிராவணனையீடழித்திடிருந்தநாளோ, வாசமலர்மகிழ்தென்றலானநாளோ, மதயானையுரிபோர்த்துமகிழ்ந்துநாளோ, தாதுமலர்தண்டிக்குக்கொடுத்தநாளோ சாரர்களைமறித்திட்டாட்கொண்டநாளோ, தேசமுமையறிவதற்குமுன்னோபின்னோ திருவாரூர்கோயிலாக் கொண்டநாளே. 9

திருச்சிற்றம்பலம்.

## திருவாலவாய்-திருத்தாண்டகம்.

### திருச்சிற்றம்பலம்.

முளைத்தானை யெல்லார்க்கு முன்னேதோன்றி முதிருஞ்சடைமுடிமேன்முகிழ்வெண்டிங்கள் வளைத்தானை வல்லசுரர்புரங்கண்மூன்றும் வரைசிலையா வாசுகிமாநாணுக்கோத்துக், துளைத்தானைச்சுடுசரத்தாற்றுவளநீறாத் தூமுத்தவெண்முறுவ லுமையோடாடித், திளைத்தானைத் தென்கூடற்றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. 1

ஊரானை யுலகேழாய் நின்றான்றன்னை யொற்றைவெண்பிறையானையுமையோடென்றும், பேரானைப்பிறர்க்கென்று மரியான்றன்னைப் பிணக்காட்டில்நடமாடல்பேயோடென்றும், ஆரானையமரர்களுக்கமுதீந்தானை யருமறையானான்முகனு மாலும்போற்றுஞ், சீரானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. 2

தூர்த்தனைத்தோண் முடிபத்திறுத்தான் றன்னைத் தொன்னரம்பி னின்னிசைகேட் டருள்செய்தானைப், பார்த்தனைப்பணிகண்டு பரிந்தான்றன்னைப் பரிந்தவர்க்குப் பாசுபதமீன்றான்றன்னை, ஆர்த்தானை யடியேனுக் கன்பன்றன்னை யளவிலாப்பல்லூழிகண்டுநின்ற தீர்த்தனைத்தென்கூடற்றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. 3

### திருச்சிற்றம்பலம்.

## திருச்சிவபுரம்-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

வானவன்காண்வானவர்க்கு மேலானான்காண்வடமொழியுந்தென்றமிழுமறைகணான்கு, மானவன்காணானைந்துமாடினான்காணையன்காண் கையிலனலேந்தியாடுங்காணவன்காண் கானவனுக்கருள்செய்தான்காண் கருதுவாரிதயத்துக் கமலத்தூறுந், தேனவன்காண் சென்றடையாச்செல்வன்றான்காண் சிவனவன்காண் சிவபுரத்தென்செல்வன்றானே. 1

வெய்யவன்காண்வெய்யகனலேந்தினான்காண் வியன்கெடிலவீரட்ட மேவினான்காண், மெய்யவன்காண் பொய்யர்மனம்விரவாதான்காண் வீணைவாடிசைத்து மிகுபாடன்மிக்க, கையவன்காண்கையின்மழு வேந்தினான்காண் காமரங்கம்பொடிவீழ்த்த கண்ணினான்காண். செய்யவளைமாலுக்கீந்தசிவனவன்காண் சிவபுரத்தென்செல்வன்றானே. 2

திருச்சிற்றம்பலம்.

## திருவலம்பொழில்-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்

கருவாகிக்கண்ணுதலாய் நின்றான்றன்னைக் கமலத்தோன்றலையரிந்த காபாலியை, பருவார்ந்த மலைமகளோர்பாகத்தானைப்புணர்வெலா மானானைலோசையாகி, வருவானைவலஞ்சுழியெம்பெருமான்றன்னைமறைக்காடுமாவடுதண்டுறையுமேயதிருவானைத்தென்பரம்பைக்

குடியின்மேவ திருவாலம்பொழிலானைச்சிந்திநெஞ்சே.

உரித்தானைக்களிறதன்றோல்போர்வையாக வுடையானை யுடைபுலியினதளேயாகத் தரித்தானைச்சடையதன்மேற்கங்கையங்கைத் தழலுருவைவிடமமுதாவுண்டிதெல்லாம், பரித்தானைப் பவளமால் வரையன்னைப் பாம்பணையான்றனக்கன்றங் காழிநல்கிச், சிறுத்தானைத்தென்பரம்பைக் குடியின்மேய திருவாலம்பொழிலானைச் சிந்திநெஞ்சே. 2

திருச்சிற்றம்பலம்,

பலவகைத் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நேர்ந்தொருத்தியொருபாகத் தடங்கக்கண்டு நிலைதளரவாயிரமாமுகத்தினோடு, பாய்ந்தொருத்தி படர்சடைமேற்பயிலக்கண்டு படவரவும்பனிமதியும்வைத்தசெல்வர், தாந்திருத்தித் தம்மனத்தை யொருக்காத்தொண்டர் தனித்தொருதண்டூன்றிமெய்தளராமுன்னம், பூந்துருத்தி யென்பீராகிற் பொல்லாப்புலாற்றுருத்தி போக்கலாமே. 1

ஊற்றுத்துறை யொன்பதுண்ணின்றோரீ யொராக்கவடைக்குப்போதுணராமாட்டீர், மாற்றுத்துறைவருகொண்டோடாமுன்னமாயமனைவாழ்க்கை மகிழ்ந்துவாழ்வீர், வேற்றுத்தொழில்பூண்டார் புறங்கண்முன்னமே வெவ்வழல்வாய்வீழ்விக்கும்வேந்தன்மேய, சோ

ற்றுத்துறையென்பீராகிற் றுயர்நீங்கித் தூநெறிக்கட்
சேரலாமே. 2

தண்டிகுண்டோதரன் பிங்கிருடிசார்ந்தபுகழ்கண்டி
சங்குகன்னன், பண்டையுலகம்படைத்தான்றனும்பா
ரையளந்தான்பல்லாண்டிசைப்பத், திண்டிவயிற்றுச்சி
றுகட்பூதஞ்சிலபாடச்செங்கண்விடை யொன்றூர்வா
ன், கண்டியூ கண்டியூரென்பீராகிற் கடுகநம்வல்வினை
யைக் கழற்றலாமே. 3

தந்தையார் தாயாருடன்பிறந்தார் தாரமார்புத்தி
ரரார் தாந்தாமாரே, வந்தவாறெங்ஙனே போமாறே
தோ மாயமாமிதற்கேதுமகிழவேண்டா, சிந்தையீருமக்
கொன்றுசொல்லக்கேண்மின் றிகழ்மதியும்வாளரவு
ந்திளைக்குஞ்சென்னி, யெந்தையார்திருநாமநமச்சிவா
ய வென்றெழுவார்க்கிருவிசும்பிலிருக்கலாமே. 4

திருச்சிற்றம்பலம்.

தனித் திருத்தாண்டகம்,

திருச்சிற்றம்பலம்.

அப்பனீ யம்மைநீ யையனுநீ யன்புடைய மாம
னு மாமியுநீ, மொப்புடையமாதரு மொண்பொருளுநீ
யொருகுலமுஞ்சுற்றமுமோரூருநீ துய்ப்பனவுமுய்ப்
பனவுந் தோற்றுவாய் நீ துணையாயென்னெஞ்சந்துற
ப்பிப்பாய்நீ, இப்பொன்னீ யிம்மணிநீயிம்முத்துநீ யி
றைவனீ யேறூர்ந்தசெல்வநீயே. 1

திருக்கோயிலில்லாத திருவிலூருந்திருவெண்ணீ
றணியாத திருவிலூரும், பருக்கோடிப் பத்திமையாற்
பாடாவூரும் பாங்கினொடு பலதளிகளில்லாவூரும்,விரு
ப்போடு வெண்சங்கமூதாவூரும் விதானமும் வெண்
கொடியுமில்லாவூரும், அருப்போடு மலர்பறித்திட்டு
ண்ணாவூரு மவையெல்லா மூரல்ல வடவிகாடே. 2

திருநாம மஞ்செழுத்துஞ் செப்பாராகிற்றீவண்
ணர் திறமொருகாற் பேசாராகில், ஒருகாலுந்திருக்
கோயில் சூழாராகிலுண்பதன்முன் மலர்பறித்திட்டு
ண்ணாராகில், அருநோய்கள்கெடதெண்ணீ றணியா
ராகி லளியற்றார் பிறந்தவா றேதோவென்னிற் பெரு
நோய்கண்மிகநலியப் பெயர்த்துஞ்செத்துப் பிறப்பத
ற்கே தொழிலாகியிறக்கின்றாரே. 3

ஆட்டுவித்தா லாரொருவ ராடாதாரே யடக்குவி
த்தா லாரொருவரடங்காதாரே, ஓட்டுவித்தா லாரொ
ருவரோடாதாரேயுருகுவித்தா லாரொருவருருகாதா
ரே, பாட்டுவித்தா லாரொருவர்பாடாதாரே பணிவித்
தாலாரொருவர் பணியாதாரே, காட்டுவித்தாலாரொ
ருவர் காணாதாரே காண்பாரார் கண்ணுதலாய்க்காட்
டாக்காலே. 4

குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும்
பொல்லேன் குற்றமேபெரிதுடையேகோலமாய',நலம்
பொல்லேனுன்பொல்லேன் ஞானியல்லே னல்லா
ரோ டிசைந்திலே னடுவேநின்ற, விலங்கலேன்விலங்க
லா தொழிந்தேனல்லேன் வெறுப்பனவுமிகப்பெரிது

ம் பேசவல்லேன், இலம்பொல்லே னிறப்பதே மீமாட்டே னென்செய்வான் றோன்றினே னேழையேனே. 5

சங்கநிதி பதுமநிதியிரண்டுந்தந்து தரணியொடு வானாளத்தருவரேனும், மங்குவா ரவர்செல்வ மதிப்போமல்லோ மாதேவர்க்கேகாந்தரல்லாராகில், அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயரா யாவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங், கங்கைவார்சடைக்கரந்தார்க்கன்பராகி லவர்கண்டீர் நாம்வணங்குங் கடவுளாரே. 6

திருச்சிற்றம்பலம்.

## நின்ற திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

மண்ணாகி விண்ணாகி மலையுமாகி வயிரமுமாணிக்கந்தானேயாகிக், கண்ணாகிக்கண்ணுக்கோர்மணியுமாகிக் கலையாகிக்கலைஞானந்தானேயாகிப், பெண்ணாகிப் பெண்ணுக்கோராணுமாகிப் பிரளயத்துக்கப்பாலோ ரண்டமாகி, எண்ணாகி யெண்ணுக்கோ ரெழுத்துமாகி யெழுஞ்சுடராயெம்மடிகணின்றவாறே.

தீயாகி நீராகித்திண்மையாகித் திசையாகி யத்திசைக்கோர் தெய்வமாகித் தாயாகித்தந்தையாய்ச்சார்வுமாகித்தாரகையுநாயிருந்தண்மதியுமாகி, காயாகிப்பழமாகிப் பழத்தினின்றவிரதங்களுகர்வானுந் தானேயாகி, நீயாகிநானாகி நேர்மையாகி செஞ்சுடராய் நிமிர்ந்தடிகணின்றவாறே. 3

மாலாகிநான்முகனாய் மாபூதமாய் மருக்கமாயருக்கமாய்மகிழ்வு மாகிப், பாலாகியெண்டிசைக்குமெல்லையாகிப் பரப்பாகிப்பரலோகந் தானேயாகிப், பூலோகபுவலோகசுவலோகமாய்ப் பூதங்களாய்ப் புராணன்றானேயாகி, ஏலாதனவெலா மேல்விப்பானாயெழுஞ்சுடரா யெம்மடிகணின்றவாறே. 4

திருச்சிற்றம்பலம்.

## திருமருமாற்றத் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நாமார்க்குங்குடியல்லோ நமனையஞ்சோநகரத்திலிடர்ப்படோ நடலையில்லோம், ஏமாப்போம்பிணியறியோம் பணிவோமல்லோ மின்பமேயெந்நாளுந்துன்பமில்லை, நாமார்க்குங்குடியல்லாத்தன்மையான சங்கரநற் சங்கவெண் குழையோர்காதிற், கோமாற்கே நாமென்று மீளாவாளாய்க் கோயிலமார்ச்சேவடி யிணையேகுறுகினோமே. 1

ஈசனையெவ்வுலகினுக்குமிறைவன்றன்னை யிமையவர்தம்பெருமானையெரியாமிக்க, தேசனைச்செம்மேனி வெண்ணீற்றானைச்சிலம்பறையின் பொற்பாவைநலஞ் செய்கின்ற, நேசனைநித்தலுநினைபம்பெற்றோநின்றாண் பாரெம்மைநினைபச்சொன்ன, வாசகமெல்லா மறந்தோமன்றே வந்தீரா மன்னவனாவான்றாரே. 1

திருச்சிற்றம்பலம்.

## திருப்புகலூர் திருத்தாண்டகம்.

### திருச்சிற்றம்பலம்.

எண்ணுகேனென்சொல்லியெண்ணுகேனோவெ
ம்பெருமான்றிருவடியே யெண்ணினல்லாற், கண்ணி
லேன் மற்றோர்களைகணில்லேன் கழலடியே கைதொ
ழுது காணினல்லால், ஒண்ணுளேயொன்பது வாசல்
வைத்தா யொக்கவடைக்கும்போ துணரமாட்டேன்,
புண்ணியனே யுன்னடித்தேபோதுகின்றேன் பூம்புக
லூர்மேவியபுண்ணியனே. 1

அங்கமேபூண்டா யனலாடினா யாதிரையாயானி
லா யானேறூர்ந்தாய், பங்கமொன்றில்லாத படர்ச
டையினாய்பாம்பொடுதிங்கள்பகைதீர்த்தாண்டாய், சங்
கையொன்றின்றியே தேவர்வேண்டச்சமுத்திரத்தின
ஞ்சுண்டுசாவாமூவாச், சிங்கமே யுன்னடிக்கேபோது
கின்றேன் றிருபுகலூர்மேவிய தேவதேவே. 2

பையரவக்கச்சையாம்பால்வெண்ணீற்றுப்பளிக்
குக்குழையினாய்பண்ணாரின்சொல், மைவிரவுகண்ணா
ளைப் பாகங்கொண்டாய் மான்மறிக்கையேந்தினாய்வ
ஞ்சக்கள்வ, ரைவரையுமென்மேற் றரவறுத்தா யவர்
வேண்டுங்காரியமிங் காவதில்லைப், பொய்யுரையா து
ன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர்மேவியபுண்
ணியனே. 3

தெருளாதார்மூவெயிலுந் தீயில்வேவச்சிலைவளை
த்துச்செங்கணையாற்செற்றதேவே. மருளாதார்தம்மன

த்தில் வாட்டந்தீர்ப்பாய் மருந்தாய்ப் பிணிதீர்ப்பாய்
வானோர்க்கென்றும், அருளாகி யாகியாய் வேதமாகி
யலர்மேலா னீர்மேலா னைந்துங்காணாப், பொருளா
வா யுன்னடிக்கே போதுகின்றேன் பூமபுகலூர்மேவி
யபுண்ணியனே. 4

நீரேறுசெஞ்சடைமே னிலாவெண்டிங்கணீங்கா
மைத்துகந்தநீதியானே, பாரேறுபடுதலையிற்பலிகொ
ள்வானேபண்டனங்கைப்பார்த்தானேபாவநாசா, கா
ரேறுமுகிலனையகண்டத்தானே கருங்கைக்களிற்றுரி
வை கதறப்போர்த்த, போரேறேயுன்னடிக்கே போ
துகின்றேன்பூம்புகலூர்மேவிய புண்ணியனே. 5

விரிசடையாய் வேதியனே வேதகீதாவிரிபொழி
ல்சூழ் வெண்காட்டாய்மீயச்சூராய், திரிபுரங்களெரி
செய்ததேவதேவே திருவாரூர்த்திருமூலத்தானமேயா
ய்,மருவினியார் மனத்துளாய் மாகாளத்தாய்வளஞ்சு
ழியாய் மாமறைக்காட் டெந்தாயென்றும், புரிசடை
யாயுன்னடிக்கே போதுகின்றேன்பூம்புகலூர்மேவிய
புண்ணியனே. 6

தேவார்ந்ததேவனைத் தேவரெல்லாந்திருவடிமே
லலரிட்டுத்தேடிநின்று, நாவார்ந்தமறைபாடி நட்ட
மாடி நான்முகனுமிந்திரனு மாலும்போற்றக, காவா
ர்ந்தபொழிற்சோலைக்கானப்பெற்றாய்கழுக்குன்றத்து
ச்சியாய்கடவுளேநின், பூவார்ந்தபொன்னடிக்கேபோ
துகின்றேன்பூம்புகலூர்மேவிய புண்ணியனே. 7

நெய்யாடி நின்மலனே நீலகண்டா நிறைவுடை
யாங் மறைவல்லாய் நீதியானே, மையாடுகண்மடவா
ள்பாகத்தானேமான்றோலுடையாய் மகிழ்ந்துநின்றாய்,
கொய்யாடுகூவிளங்கொன்றைமாலைகொண்டடியேனு
னிட்டுக் கூறிநின்று, பொய்யாதசேவடிக்கேபோது
கின்றேன் பூம்புகலூர்மேவிய புண்ணியனே. 8

துன்னஞ்சேர்கோவணத்தாய் தூயநீற்றாய் துதை
ந்திலங்குவெண்மழுவாள்கையிலேந்தித், தன்னனையுங்
தண்மதியும்பாம்புநீருஞ் சடைமுடிமேல் வைத்துகந்
ததன்மையானே, அன்னநடைமடவாள் பாகத்தானே
யக்காரம்பூண்டானே யாதியானே, பொன்னங்கழல
டிக்கே போதுகின்றேன் பூம்புகலூர்மேவிய புண்ணி
யனே. 9

ஒருவனையுமல்லா துணராதுள்ளமுணர்ச்சித்தடு
மாற்றத்துள்ளேநின்ற, விருவரையுமூவரையுமென்மே
லேவியில்லாததரவறுத்தாய்க்கில்லேனேலக், கருவரை
சூழ் கானவிலங்கைவேந்தன் கடுந்தேர்மீ தோடாமை
க் காலாற்செற்ற, பொருலரையா யுன்னடிக்கேபோ
துகின்றேன் பூம்புகலூர்மேவியபுண்ணியனே 10

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுவாமிகள் திருவடிகேளசரணம்.



சிவமயம.

திருச்சிற்றம்பலம்.

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரம்.

கயிலாயபதியின் பிரதிவிம்பமாகக் கண்ணுமையினின்றுந் தோன்றி ஆலால சுந்தரரென்ற திருநாமத்தோடு கயிலாயத்திற் சிவபெருமானுக்குத் தொண்டுசெய்யுநாளி லொருநாள் மலர்கொய்ய நந்தவனஞ்சென்று அங்கு மலர்கொய்துகொண்டிருந்த அனிந்திதை கமலினியென்னும் பார்வதியார் தோழியாரைக்கண்டு காதல்கொண்டு மீண்டுமனதைச் செல்லவிடாது தடுத்துச் சுவாமிசந்நிதி சேர்ந்தனர். கயிலாயபதி இதனையறிந்து உமையாள தோழிகளின்மேல் உன்மனஞ்சென்றமையால் அவர்களுடன் பூலோகத்திற்பிறந் தின்பமனுபவித்துப் பின்புவந்து சேரக்கடவையென்று கட்டளையிட்டருளினார். ஆலாலசுந்தரர் மனங்கலங்கி அடியேனது பிழையைப் பொறுத்து நான் மானிடனாய் மயங்கும்போது தடுத்தாட்கொள்ளல் வேண்டுமென்றுவேண்டப் பரமசிவன்கிருபைகூர்ந்தருளினார்.

அக்காரணத்தால் திருநாவலூரில் சடையனென்னும் பிராமணருக்கு அவர்மனைவி இசைஞானியார் வயிற்றிற் குமாரனாகப்பிறந்து நம்பியாரூரரென்ற திருநாமத்தோடு கலைபயின்றுவளர்ந்து விவாகத்திற்கிணங்கித் திருமணக்கோலம்பூண்டு புத்தூருக்குச்சென்று விவாகச்சடங்கிலிருக்கையில் பரமசிவன் முன்னம் கயிலையிலருளியபடி தடுத்தாட்கொள்ளும்பொருட்டு ஒரு கிழப்பிராமண வடிவங்கொண்டு கலியாணப்பந்தலில் சபையாருக்கெதிரில்வந்து நம்பியாரூரரைநோக்கி உன்னிடத்தில்எனக்கொருவழக்கிருக்கின்றது அதனைத்தீர்க்காது விவாகஞ்செய்துகொள்ளக்கூடாதென்றார். அவ்வழக் கென்

கென்று நம்பியாரூரர் கேட்க, கிழவடிவர் சபையாரைநோக்கி
இவ்வாரூரனெனதடிமை, இதுதான் வழக்கென்றார். நம்பியா
ரூரர் இதைக்கேட்டு நகைக்க கிழவரவரைநோக்கி உனது பா
ட்டனெழுதிக்கொடுத்த முறியோலையிதோவிருக்க நீ நகைப்
பானேனென்றார். பிராமணர் பிறருக்கடிமையாகுத லிவ்வுல
கிலில்லை. நீர் பித்தரேயென்று நம்பியாரூரர் சொல்ல, கிழ
வர் நீ எதைச்சொன்னபோதிலும் நமக்கடிமைசெய்யவேண்டு
மென்றார். நம்பியாரூரர் கோபங்கொண்டு ஓலையைக் காட்டு
மென்று சுவாமியையத்துரத்தி ஓலையைப்பறித்துக் கிழித்தெறி
ந்துவிட்டார். உடனே கிழவடிவர் நம்பியாரூரரைப் பிடித்து
க்கொண்டலற, அங்கிருந்தவர்கள் விலக்கி நீரெங்கிருப்பவரெ
ன்றுகேட்க, வெண்ணெய்நல்லூரிலென்றார். அவ்விதமாயினு
மது தப்புவழக்கை யங்குள்ளோரிடஞ் சொல்லிக் கொள்வோ
மென்று நம்பியாரூரர்சொல்ல இருவரும் புறப்பட்டு வெண்
ணெய் நல்லூருக்குச்சென்று அங்கு கூடியிருந்த பிராமணர்க
ளைநோக்கி, ஓ! பிராமணர்களே? இந்த நம்பியாரூரனெனக்கடி
மையென்று நான்காட்டிய ஓலையைப்பிடுங்கிக் கிழித்தெறிந்து
விட்டானென்றார். அதனை அவர்கள்கேட்டுச சாட்சியுமுண்
டோவென கிழவர்முன் கிழித்தது படியோலை மூலவோலையை
யெடுத்துவந்து காட்டுகிறேனென்று சொல்லிப்போய் கொண்
டுவந்து காட்டினார். அதில் "திருநாவலூரிலிருக்கு மாதிசை
வப் பிராமணராகிய ஆரூரனென்னும் பெயருள்ள நான் திரு
வெண்ணெய் நல்லூரிலிருக்கும் பித்தனுக்கெழுதிக்கொடுத்த
முறியோலையாவது, இத்தேதிமுதல் நானுமெனது பரம்பரை
யார்வருமின்றனென்சந்ததியாரும் கொத்தடிமைசெய்யும்படி
மனவாக்கொத்து எழுதிக்கொடுத்தேன் இதற்கிதுவேயென்னு
டையகையெழுத்து" என்றெழுதியிருக்குஞ் சாட்சிகள் பெய
ரும் நம்பியாரூரரது பாட்டனார்கையெழுத்து மொத்திருக்கக்

கண்டு, நம்பியாரூரரைப்பார்த்து, நீரிந்தப்பிராமணருக் கடிமைசெய்யவேண்டியது முறைமையென்றார்கள்.

அதனை நம்பியாரூரரேற்றுக்கொள்ள சபையார் இழவடியாரைநோக்கி ஐயரே உமக்கிவ்வூரில் மாளிகை யெங்கென்னகாட்டுகிறேனென்று ஆலயத்துட்சென்று மறைந்து விட்டார். அதைக்கண்டெல்லோரும் திகைத்து நின்றார்கள். நம்பியாரூரர் தொடர்ந்தழைக்க சுவாமி தேவியாரோடு ரிடபத்திலெழுந்தருளி முன்னம் கயிலையில் நடந்ததைச் சொல்லித் தான் முன்னளித்தவாக்கின்படி தடுத்தாட்கொண்டோமென்றுசொல்லியருளினார். நம்பியாரூரருடனேதொழுது துதிக்கச் சிவபெருமான் அன்பனே நீ நம்மை வன்மைபேசி வன்றொண்டனென்னும் பெயர்பெற்றனை, நமக்குப் பாட்டே யருச்சனையாதலால் நம்மைப்பாடக்கடவையென்றருளினார். நம்பியாரூரர் பணிந்து கர்த்தனே தேவரீரது பெருமைகளை அறியாதவடியேன் என்னென்று பாடுவேனென்ன? நீ முன்பு நம்மை பித்தனென்றதால் அதனையேபெயராயமைத்துப் பாடக்கடவையென்றருளினார். அவ்விதமே "பித்தாபிறைசூடி" என்னுந்திருப்பதிகமோதியருளினார். சிவபெருமான் திருவுளமகிழ்ந்து தலமெங்குஞ்சென்று பாடக்கடவையென்றருளினார்.

அவ்வாறே திருநாவலூருக்கெழுந்தருளிச் சுவாமியைத்தரிசித்துத் திருத்துறையிற்சேர்ந்து தவநெறியருளப்பெற்றுத் திருவதிகை வீரட்டானத்திற் கெழுந்தருளித் திருநாவுக்கரசுநாயனருழவாரப்பணிசெய்த ஸ்தலமாதலாலதில் மிதிப்பதற்கஞ்சிப் புறத்திலிருக்குஞ் சித்தவடமடத்திலெழுந்தருளி வீரட்டானேஸ்வரரைத் தியானித்துச் சயனித்துக்கொண்டனர். சுவாமி யொருவிருத்தபிராமணராய்வந்து இவருடையதலைமேற்றமது திருவடியைநீட்டி நித்திரைசெய்வார்போலிருக்க, நம்

பியாரூரர் தன் சிரமேற் பாதம் நீட்டி யிருப்பவராரென்று வினவினார். எனவேயோத்திசத்தாலிடமறியாது நீட்டினேமென்று சுவாமிசொல்ல நாயனார் வேறோர்புறந்தலைவைத்துக்கொண்டனர். மீண்டும் சுவாமி அவ்வாறே செய்ய, நாயனார் பலகாலுமென் சிரமேற் பாதம்வைக்கிறவர் நீரார்தானென்று கேட்க; என்னையறியாயோவென்று மறைந்துவிட்டனர். உடனே சுவாமியென்றறிந்து "தம்மானையறியாத சாதியருளரோ" வென்னும்பதிகமோதி சிதம்பரஞ்சென்று பதிகமோதிப் பணிந்தபோது நீ திருவாரூருக்கு வாவென்று அசரீரிவாக்குண்டாகச் சீர்காழிக்குப்போய் சம்பந்தமூர்த்தியார் பிறந்தவிடமாகையால் உள்ளேமிதிப்பதற்கஞ்சி வெளியாகவந்து சிவபெருமான் தரிசனந்தந்தருளப் பதிகமோதித்துதித்து மற்றஸ்தலங்களையுந்தரிசித்துத் திருவாரூருக்கெழுந்தருளி நாடோறும் காலங்களிற் சுவாமியைத் தரிசித்துக்கொண்டிருந்தனர்.

பார்வதியார் தோழிகளிற் கமலினி யென்பவள் திருவாரூரிலுள்ள உருத்திரகணிகையாரி லொருவரிடத்திற்பிறந்து பரவையாரென்னும்பெயரோடு வளர்ந்து புற்றிடங்கொண்டாரை நாடோறுந் தரிசிப்பவரொருநாள் சந்நிதியிற் சுந்தரமூர்த்தியாரைக்கண்டு இச்சைகொண்டு விவாகஞ்செய்துகொள்ளவேண்டுமென்று இருவருஞ்சுவாமியைப்பிரார்த்திக்க, சுவாமி கிருபைகூர்ந்து அத்தலத்துள்ளோர்க்குந் திருத்தொண்டர்களுக்குஞ் சொர்ப்பனத்திற்சொல்ல அவர்களவ்விதமேயிருவர்க்கும் விவாகஞ்செய்துவைத்தார்கள். நாடோறுந் தரிசனத்திற்குச் செல்பவர் ஒருநாட்செல்லும்போது தேவாசிரியமண்டபத்திற் கூடியிருக்குந் திருத்தொண்டர்களைப்பார்த்து இவர்கட்கு நானடியவனாகும்படி தியாகராஜர் என்றைக்கருளுவாரோவென்றெண்ணிச்செல்ல சுவாமிதரிசனந்தந்து 'தில்லைவாழந்தணர்'

என்று முதலடியெடுத்துக்கொடுக்க அவ்வாறே அடியேன் அடியேன் என்று திருத்தொண்டத்தொகை யோதிப்பணிய மண்டபத்திலுள்ளோர் மகிழ்ந்தனர்.

பின்பு திருக்கோயிலுக் கெழுந்தருளிச் சுவாமியைத் தரிசித்துக் குண்டையூர்க்கிழார்கொடுத்த நெற்களெல்லாந் திருவாரூரில்வந்துசேரும்படி கிருபைசெய்யும்படி பதிகமோத, அவ்விதமே பூதங்கள்கொண்டுவந்துசேர்க்கப் பரவையார் திருமாளிகையில் வந்திருந்தனர். சிலநாட்சென்று கோட்புலிநாயனார் இவரையுபசரித்துச் சிங்கடி வனப்பகை யென்னுந் தமதுபுத்திரிகளைப் பணிசெய்ய வங்கீகரித்தாளும்படி வேண்ட, அவர்களைப் புத்திரிகளாகப் பாவித்துத் திருப்பதிகக் கடைகாப்பிலுஞ் சிங்கடியப்பனென்றோதி திருவாரூருக்குவந்து சேர்ந்தார். அங்குபங்குனிதிருவிழாசமீபிக்க அதற்குப்பொருள்வேண்டியிருந்ததால் திருப்புகலூருக்குச்சென்று பதிகமோதித் தரிசித்துச் செங்கல்லைத் தலைக்கணையாகவைத்துச் சயனித்து விடிந்தெழுந்துப்பார்த்தால் அந்தக்கல் பொன்னாயிருக்க வதனையெடுத்துக்கொண்டு திருப்பனையூருக்குப்புறத்தே போகும்பொழுது சிவபெருமான் திருக்கூத்தோடும் காட்சிதந்தருளப் பணிந்து பதிகமோதி விடைபெற்று திருவாரூரிற்சேர்ந்தனர்.

பின்பு சோழநாட்டிலும் கொங்குநாட்டிலுள்ள ஸ்தலங்களைத்தரிசித்துமீண்டும் விருத்தாசலத்திற்கெழுந்தருளிப் பொன்வேண்டிப் பதிகமோத, சுவாமி பன்னீராயிரம்பொன் தந்தருளினார். நாயனார் சுவாமி தேவரீரிப்பொன்னையெல்லாமிந்த மணிமுத்தாநதியிலிட்டுத் திருவாரூர் குளத்தில்வரக் கிருபைசெய்தல்வேண்டுமென்று பிரார்த்திக்கச் சுவாமி அவ்விதமே கிருபைசெய்தார். நாயனார் திருவாரூருக்கெழுந்தருளிப் பரவையாருடன் கமலாலயதீர்த்தத்தையடைந்து, பொன்னெல்

லாமெடுத்துக்கொண்டு பரவையார் மாளிகையிற் சிலகாலிருந்தார். பின்பு திருக்குருகாவூருக்குச் சமீபத்திலெழுந்தருளும்போது வன்றொண்டர்பசித்துவருகின்றனரென்று சுவாமிதிருவுளமிரங்கி மார்க்கத்திலொருசோலையுந் தடாகமுந்தண்ணீர்ப்பந்தலுமுண்டாக்கிக் கட்டமுதம்வைத்துக்கொண்டொருபிராமணர்போலிருந்து அங்குசேர்ந்த தொண்டரைநோக்கி நீர்மிகவும் பசித்திருக்கின்றதால் நம்மிடத்துள்ள கட்டமுதைச்சாப்பிடுமென்றுகொடுக்கப் பரிசனத்தாருடனுண்டு நீரருந்திசற்றுசயனித்துக்கொண்டிருந்தனர். உடனே சுவாமி சோலைமுதலியதுடன் மறைந்துவிட்டார். நாயனார் நித்திரை நீங்கியெழுந்து முன்னிருந்தவற்றைக்காணாது பரமசிவன் செயலென்றறிந்து திருக்கச்சூருக்குவர தம்முடையதொண்டர் பசியுடனிருக்கக்கண்ட சுவாமி வேதியரைப்போலவந்து, நீர்பசித்திருப்பதாலிங்குள்ள பிராமணர்கள்வீட்டிலாகாரம் வாங்கிவருகிறேனென்றுசொல்லிப்போய் யாசித்துவாங்கிவந்தளிக்க, தொண்டர்களோடு நாயனார்புசித்துப்பசியாறினார். உடனே சுவாமி மறைந்துவிட்டார். சிவபெருமான் திருவடிகளுக்கு வருத்தங்கொடுத்தோமென்று கலங்கித்துதிசெய்து திருக்காளத்திற்கெழுந்தருளி சுவாமியைத்தரிசித்துப் பதிகமோதி. அவ்வாலயத்திற் றொண்டுசெய்துவந்த சங்கிலியாரைக்கண்டு இச்சைகொண்டு பரவையாரிடம் போவதில்லையென்று சுவாமிமுன் மகிழமரத்தடியிற் பரவசஞ்செய்துகொடுத்து விவாகஞ்செய்துக்கொண்டுசிலகாலமிருந்து, தியாகரைத்தரிசிக்கமனங்கொண்டு புறப்பட்டவர் சிவபெருமான் திருவிளையாட்டாலிருகண்களுந் தெரியாமற்போயின. திருவெண்பாக்கத்தையடைந்து ஊன்றுகோல்பெற்று, காஞ்சிபுரஞ்சென்று இடக்கண்பெற்று, திருவாரூரையடைந்து வலக்கண்ணும்பெற்று, பரவையார் பிணக்கைநீக்கும்பொருட்டு சுவாமியைத்தூதுவிடுத்து, ஊடல்

தீர்த்துபின் மாளிகைக்கெழுந்தருளி மகிழ்வடைந்து சுவாமியைக் காலங்கடோறுந் துதித்து வந்தனர்.

இவர் தன் நாயகியிடஞ் சுவாமியைத் தூதுவிடுத்ததை திருப்பெருமங்கலத்திலிருந்த கலிக்காமநாயனார் கேள்விப்பட்டு மிகச்சீற்றங்கொண்டிருந்தனர். இதை சுந்தரமூர்த்திநாயனாறிந்து தான்செய்தது குற்றமேயென்றுடன்பட்டு சுவாமியிடம் விண்ணப்பஞ்செய்ய சிவபெருமானிருவரையு நட்புபடுத்தக்கருதி கலிக்காமநாயனார் வயிற்றிற் சூலைநோய்விடுத்து வருத்தி, அவரிடமெழுந்தருளி, அன்பனே நமது வன்றொண்டனாலன்றியிச்சூலைநோய் தீராதென்றருள, அவன் வந்து தீர்ப்பதினு மிவ்வாறு துன்பப்படுவதே நலமென்றார். சுவாமி சுந்தரரிடம்போய் நீயுடனேசென்று கலிக்காமன்நோயைத் தீர்க்கக்கடவையென்றருள நாயனாருஞ்சென்றார். இவர்வருவதைக் கேள்வியுற்ற கலிக்காமநாயனார் மிகத்துயரெய்தி உடைவாளால் வயிற்றைக்கிழித்துக்கொண்டிறந்தனர். வன்றொண்டர்போய்க்கண்டு இதுவென்னால் விளைந்தால் நானுமாய்வேனென்று கலிக்காமர் கையிற்பற்றியவாளை வாங்கும்போது சிவபெருமான்றிருவருளாற் கலிக்காமநாயனார் உயிர்பெற்றெழுந்து ஒருவரையொருவர்தழுவி பிறகு இருவருந் திருவாரூருக்கெழுந்தருளி சுவாமியைத் தரிசித்துக் கலிக்காமநாயனாரவரூரேக இவர் திருவாரூரிலிருந்தனர்.

பின்பு திருநாகைக்காரோணஞ்சென்று திருப்பதிகமோதிப் பொன்னும், நவரத்தினங்களும், ஆபரணங்களும், வஸ்திரங்களும், குதிரைகளும், உடைவாள் முதலியனவும் பெற்றுத்திருவாரூருக்கெழுந்தருளினார். சேரமான் பெருமாணாயனார்வர, சிலநாளவருடன் பரவையார்வீட்டிலிருந்து, பின்பவருடன்

சென்று சோழநாட்டிலும், பாண்டியநாட்டிலுமுள்ள ஸ்தலங்களைத்தரிசித்து மீண்டுந் திருவாரூருக்கு வந்தார்கள்.

சிலகாலஞ்சென்று நாயனாரை சேரமான்பணிந்து தமதூருக்கெழுந்தருளும்படிப் பிரார்த்திக்க, நாயனாரிசைந்து திருக்கண்டியூரையடைந்து சுவாமியைத்தரிசித்துத் திருவையாற்றிற்குச் செல்லக்கூடாமல் காவேரிநதி பெருகிவரக்கண்டு பதிகமோத, வெள்ளமணைபோட்டதுபோல் நிற்க, மத்தியமணல்வழியேபோய் பஞ்சநதீஸ்வரரைத்தரிசித்து சேரமான் பெருமாநாயனார் நகரமாகிய கொடுங்கோளூருக்குச்சென்றவர்மாளிகையிற் சிலகாலமிருந்தார். பின்பு திருவாரூருக்குப் புறப்பட, சேரமான்றமது பொக்கிஷநிதிகளைப்பொதிகட்டி ஆட்கள்வசமனுப்பினார். அவ்வாட்கள் திருமுருகன்பூண்டிச்சருகில்வரும்போது சிவபெருமானேவலாற் பூதகணங்கள் வேடராய்வந்து வழிமறித்துக் கவர்ந்துகொண்டார்கள். இதனை நாயனார்கேட்டு சந்நிதியிற்சென்று பதிகமோதி அப்பொருளெல்லாங்கோபுரவாயிலில்வந்திருக்க அவற்றையெடுப்பித்துக்கொண்டு திருவாரூரிற்சேர்ந்தனர்.

சிலகாலஞ்சென்று சேரமானைக்காணவிரும்பி திருப்புக்கொளியூரிற் செல்லும்போது ஒருவீட்டில் மங்கலவோசையுமற்றொருவீட்டிலழுகையோசையுமாயிருக்கக்கண்டு நடந்ததை விசாரித்தறிந்து அப்பிள்ளையிறந்த ஏரிக்குச்சென்று பதிகமோத அப்பிள்ளையை விழுங்கின முதலைவந்து கக்கிவிட்டது. உடனே அடுத்தவீட்டுப்பிள்ளைபோல் அப்பிள்ளைக்குமுபநயனசடங்கு நிறைவேற்றிப்பின்பு சேரமான் நகரஞ்சேர்ந்து அவர்வீட்டிலிருந்தனர். பின்பு அம்மலைநாட்டிலுள்ள ஸ்தலங்களையெல்லாந் தரிசித்துக்கொண்டு மகோதைக்குத் திரும்பினார். அங்கு சிலநாளிருக்கையில் ஒருநாள் சேரமான் ஸ்நானஞ்செ

ய்துக்கொண்டிருக்கின்றபோது திருவாஞ்சைக்களத்துக்குப் போய் சுவாமியைத் தரிசித்துத் தேவரீரது திருவடியிலடியேனைச்சேர்த்தருளல்வேண்டுமென்று பதிகமோதினார். உடனே சிவபெருமான் தேவர்களை நோக்கி வெள்ளையானையுடன்சென்று வன்றொண்டனை அழைத்துவாருங்களென்று கட்டளையிட அவர்கள் அவ்வாறே சென்று சுந்தரமூர்த்திநாயனாரைக்கண்டு தொழுது ஸ்ரீகயிலாயபதியின் கட்டளையை சொல்ல நாயனார் சுவாமியை நினைந்து மகிழ்ந்து வணங்கி வெள்ளையானைமீதில் ஆரோகணித்து செல்லும்போது தமது நண்பராகிய சேரமானை நினைந்து சென்றார். சேரமானதையறிந்து குதிரைமேலேறி திருவாஞ்சைக்களத்துக்குவந்து நாயனார் செல்வதைக் கண்டு குதிரையின்காதிற் பஞ்சாட்சரமோதி அந்தரத்திற்சென்று நாயனாரைப் பிரதட்சணஞ்செய்து வெள்ளையானைக்குமுன்னாகப்போயினர். நாயனார் "தானெனைமுன்படைத்தா"னென்னும் திருப்பதிகமோதிக் கயிலாயத்துக்கெழுந்தருளி சிவபெருமானுடையதிருவடிகளை வணங்கித்துதித்து முன்னிருந்தபடி ஆலாலசுந்தரராகித் திருத்தொண்டு செய்துக்கொண்டிருந்தனர். அத்திருப்பதிகம் வருணதேவனால் திருவாஞ்சைக்களத்துக்குவந்து எங்கும் விளக்கமுற்றது.

சேரமான்பெருமானாயனார் கயிலாயஞ்சென்றபோது தடைப்பட்டுப் பின்பு தானருளிச்செய்த ஞானவுலாவை சிவபெருமான் முன்னிலையிலரங்கேற்ற சிவபெருமானருள்பெற்று சிவகணநாதராகி சுவாமியை சேவிப்பாராயினார்.

பரவையாரும் சங்கிலியாரும் முறையே கமலினியும் அநிந்திதையுமாகிப் பார்வதியாருக்குத்தொண்டுசெய்து வந்தார்கள்.

சுந்தரமூர்த்திசுவாமிகள் சரித்திரம்

முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

### திருவெண்ணெய்நல்லூர்ப்பதிகம்-பண்-இந்தளம்.

பித்தாபிறைசூடிபெருமானேயருளாளா
வெத்தான்மறவாதேநினைக்கின்றேன்மனத்துன்னை [றையு
வைத்தாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டு
ளத்தாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (1)

நாயேன்பலநாளுநினைப்பின்றிமனத்துன்னைப்
பேயாய்த்திரிந்தெய்த்தேன்பெறலாகாவருள்பெற்றேன் [யு
வேயார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறை
ளாயாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (2)

மன்னேமறவாதேநினைக்கின்றேன்மனத்துன்னைப்
பொன்னேமணிதானேவயிரமேபொருதுந்தி [யு
மின்னார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறை
ளன்னேயுனக்காளாயினியல்லேனெனலாமே. (3)

முடியேனினிப்பிறவேன்பெறின்மூவேன்பெற்றமூர்த்தி
கொடியேன்பலபொய்யேயுரைப்பேனைக்குறிக்கொண்ணீ
செடியார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டு
ளடியேனுனக்காளாயினியல்லேனெனலாமே. [றையு

பாதம்பணிவார்கள்பெறும்பண்டமதுபணியா
யாதன்பொருளானேனறிவில்லேனருளாளா
தாதார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாதீயுனக்காளாயினியல்லேனெனலாமே. (5)

தண்ணார்மதிசூடிதழல்போலுந்திருமேனி
யெண்ணார்புரமூன்றுமெரியுண்ணநகைசெய்தாய் [றைய
மண்ணார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டு
ளண்ணாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (6)

ஊனாயுயிரானாயுடலானாயுலகானாய்
வானாய்நிலனானாய்கடலானாய்மலையானாய் [யு
தேனார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறை
ளானாயுனக்காளாயினியல்லேனெனலாமே. (7)

ஏற்றார்புரமூன்றுமெரியுண்ணச்சிலைதொட்டாய்
தேற்றாதனசொல்லித்திரிவேனோசெக்கர்வானீ [றையு
ரேற்றாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டு
ளாத்தாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (8)

மழுவாள்வலனேந்தீமறையோதீமங்கைபங்கா
தொழுவாரவர்துயராயினதீர்த்தலுனதொழிலே [யு
செழுவார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டு
ளழகாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (9)

காரூர்புனலெய்திக்கரைகல்லித்திரைக்கையாற்
பாரூர்புகழெய்தித்திகழ்பன்மாமணியுந்தி
சீரூர்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாரூரனெம்பெருமாற்களல்லேனெனலாமே. (10)

திருச்சிற்றம்பலம்.

திருப்புகலூர்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

தம்மையேபுகழ்ந்திச்சைபேசினுஞ்சார்விலுந்தொண்டர்தருகிலாப், பொய்ம்மையாளரைப்பாடாதேயெந்தைபுகலூர்பாடுமின்புலவீர்காள், இம்மையேதருஞ்சோறுங்கூறையு மேத்தலாமிடர்கெடலுமாம், அம்மையேசிவலோகமாள்வதற்கியாதுமையுறவில்லையே. (1)

மிடுக்கிலாதானைவீமனேவிறல் விசயனேவில்லுக்கிவனென்று, கொடுக்கிலாதானைப்பாரியேயென்று கூறினுங்கொடுப்பா

கிலைப், பொடிக்குள்மேனி யெம்புண்ணியன் புகலூரைப்பாடு
மின் புலவீர்காள், அடுக்குமே லமருலகமாள்வதற் கியாதுமை
யுறவில்லையே. (2)

காணியேற்பெரி துடையனேகற்று நல்லனேசுற்ற நன்கி
னை, பேணியேவிருந் தோம்புமேயென்று பேசினுங் கொடுப்
பாரிலைப், பூணிபூண்டுழல் புட்சிலம்புந்தன் புகலூர்பாடுமின்
புலவீர்காள், ஆணியாயம ருலகமாள்வதற் கியாதுமை யுறவில்
லையே. (3)

நரைகள்போந்துமெய் தளர்ந்துமூத்துடல் நடுங்கிநிற்குமிக்
கிழவனை, வரைகள்போல்திர டோளனேயென்று வாழ்த்தினு
ங்கொடுப்பாரிலைப், பரைவெள்ளேறுடைப் புண்ணியன்புகலூ
ரைப்பாடுமின் புலவீர்காள், அரையனாயம ருலகமாள்வதற் கி
யாதுமையுறவில்லையே. (4)

வஞ்சசெஞ்சனை மாசழக்கனைப் பாவியைவழக் கில்லியைப்,
பஞ்சதுட்டனைச்சாதுவேயென்று பாடினுங்கொடுப்பாரிலைப்,
பொன்செய்செஞ்சடைப் புண்ணியன்புக லூரைப்பாடுமின் பு
லவீர்காள், நெஞ்சில்நோயறுத் துஞ்சுபோவதாற் கியாதுமை
யுறவில்லையே. (5)

நலமிலாதானை நல்லனேயென்று நரைத்தமாந்தரை யிளைய
னேயென்று, குலமிலாதானைக் குலவனேயென்று கூறினுங்
கொடுப்பாரிலைப், புலமெலாம்வெறி கமழும்பூம்புகலூரைப்பா
டுமின் புலவீர்காள், அலமராதமருலக மாள்வதற்கியாதுமையு
றவில்லையே. (6)

நோயனைத்தடந் தோளனேயென்று நொய்யமாந்தரை வி
ழுமியதாயன்றே, புலவோர்க் கெலாமென்று சாற்றினுங்கொ
டுப்பாரிலைப். போயுழன்றுகண் குழியாதேயெந்தை புகலூர்பா
டுமின் புலவீர்காள், ஆயமின்றிப்போ யண்டமாள்வதற் கியாது
மையுறவில்லையே. (7)

எள்விழுந்திடம் பார்க்குமாகிலு மீக்குமீகிலனாகிலும், வள்ளலேயெங்கள் மைந்தனேயென்று வாழ்த்தினுங் கொடுப்பாரிலைப், புள்ளெலாஞ்சென்று சேரும்பூம்புக லூரைப்பாடுமின் புலவீர்காள், அள்ளற்பட்டழுந் தாதுபோவதற் கியாதுமையுற விலையே. (8)

கற்றிலாதானைக் கற்றநல்லனே காமதேவனை யொக்குமே, முற்றிலாதானை முற்றனேயென்று மொழியினுங் கொடுப்பாரிலைப், பொத்திலாந்தைகள் பாட்டறாப்புக லூரைப்பாடுமின் புலவீர்காள், அத்தனாயம ருலகமாள்வதற் கியாதுமை யுறவில்லையே. (9)

தையலாருக்கோர் காமனேசால நல்வழகுடைய யையனே, கையுலாவிய வேலனேயென்று கழறினுங் கொடுப்பாரிலைப், பொய்கைவாவியின் மேதிபாய்புக லூரைப்பாடுமின் புலவீர்காள், ஐயனாமருலக மாள்வதற் கியாதுமை யுறவில்லையே. ()

செறிவினிறசெழுங்கமல மோங்குதென் புகலூர்மேவியசெல்வனை, நறவம்பூம்பொழில் நாவலூரன்வனப் பகையப்பன் சடையன்றன், சிறுவன்வன்றொண்ட னூரன்பாடிய பாடல்பத்திவைவல்லவர், அறவனாரடி சென்றுசேர்வதற் கியாதுமையுற விலையே. (11)

திருச்சிற்றம்பலம்.

திருக்கூடலையாற்றூர்-பண்-புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

வடிவுடைமழுவேந்தி மதகரியுரிபோர்த்துப்
பொடியணிதிருமேனிப் புரிகுழலுமையோடுங்
கொடியணிநெடுமாடக் கூடலையாற்றூரி
லடிகளிவ்வழிபோந்த வதிசயமறியேனே. (1)

வையகமுழுதுண்ட மாலொடுநான்முகனும்
பையினவரவல்குற் பாவையொடும்முடனே
கொய்யணிமலர்ச்சோலைக் கூடலையாற்றூரி
லையனிவ்வழிபோந்த வதிசயமறியேனே. (2)
ஊர்தொறும்வெண்டலைகொண் டுண்பலியிடுமென்று
வார்தருமென்முலையாள் மங்கையொடும்முடனே
கூர்நுனைமழுவேந்திக் கூடலையாற்றூரி
லார்வனிவ்வழிபோந்த வதிசயமறியேனே. (3)
சந்தணவும்புனலுந் தாங்கியதாழ்சடையன
பந்தணவும்விரலாள் பாவையொடும்முடனே
கொந்தணவும்பொழில்சூழ் கூடலையாற்றூரி
லந்தணன்வழிபோந்த வதிசயமறியேனே. (4)
வேதியர்விண்ணவரு மண்ணவருந்தொழநற்
சோதியதுருவாகிச் சுரிகுழலுமையோடுங்
கோதியவண்டறையுங் கூடலையாற்றூரி
லாதியிவ்வழிபோந்த வதிசயமறியேனே. (5)
வித்தகவீணையொடும் வெண்புரிநூல்பூண்டு
முத்தனவெண்முறுவன் மங்கையொடும்முடனே
கொத்தலரும்பொழில்சூழ் கூடலையாற்றூரி
லத்தனிவ்வழிபோந்த வதிசயமறியேனே. (6)
மழைநுழைமதியமொடு வாளரவஞ்சடைமே
லிழைநுழைதுகிலல்கு லேந்திழையாளோடுங்
குழையணிதிகழ்சோலைக் கூடலையாற்றூரி
லழகனிவ்வழிபோந்த வதிசயமறியேனே. (7)
மறைமுதல்வானவரு மாலயனிந்திரனும்
பிறைநுதன்மங்கையொடும் பேய்க்கணமுஞ்சூழக்
குறள்படையதனோடுங் கூடகூடலையாற்றூரி
லரவனிவ்வழிபோந்த வதிசயமறியேனே. (8)

வேலையிநஞ்சுண்டு விடையதுதானேறிப்
பாலனமென்மொழியாள் பாவையொடும்முடனே
கோலமதுருவாகிக் கூடலையாற்றூரி
லாலனிவ்வழிபோந்த வதிசயமறியேனே. (9)
கூடலையாற்றூரிற் கொடியிடையவளோடும்
ஆடலுகந்தானை யதிசயமிதுவென்று
நாடியவின்றமிழால் நாவலவூரன்சொற்
பாடல்கள்பத்தும்வல்லாய் தம்வினைபற்றறுமே. (10)

திருச்சிற்றம்பலம்.

## திருப்பாண்டிக்கொடுமுடி-பண்-பழங்குஞ்சரம்.

திருச்சிற்றம்பலம்.

மற்றுப்பற்றெனக் கின்றிநின்றிருப் பாதமேமனம்பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேனினிப்பிற வாததன்மைவந்தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை யூரிற்பாண்டிக்கொடுமுடி
நற்றவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமசிவாயவே.( )
இட்டனும்மடி யேத்துவார்கழ்த் திட்டநாள் மறந்திட்டநாள்
கெட்டநாளிவை யென்றலால்கரு தேன்கினற் தனற்காவிரி
வட்டவாசிகைகொண்டடிதொழு தேத்துபாண்டிக்கொடுமுடி
நட்டவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே.
ஓவுநாளுணர் வழியுநாளுயிர் போகுநாளுயர் பாடைமேற்
காவுநாளிவை யென்றலாற்கரு தேன்கிளர்புனற் காவிரிப்
பாவுதன்புனல் வந்திழிபரஞ் சோதிபாண்டிக் கொடுமுடி
நாவலாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே.(3)
எல்லையில்புகழெம்பிரானெந்தைதம்பிரானென்பொன்மாமணி
கல்லையுந்தி வளம்பொழிந்திழி காவிரியதன் வாய்க்கரை
நல்லவர்தொழுதேத்துஞ்சீர்க்கறை யூரிற்பாண்டிக்கொடுமுடி
நல்லவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே.(4)

அஞ்சினார்க்கர ணாதியென்றடி யேனுநான்மிக வஞ்சினேன்
அஞ்சலென்றடித்தொண்டனேற்கரு ணல்கினாய்கழிக்கின்றதெ
ன், பஞ்சின்மெல்லடிப் பாவைமார்க்குடைந் தாடுபாண்டிக்
கொடுமுடி, நஞ்சணிகண்ட நான்மறக்கினுஞ் சொல்லுநாநம
ச்சிவாயவே. (5)

ஏடுவானிளந்திங்கள்சூடினை என்பின்கொல்புலித்தோலின்மே
லாடுபாம்ப தரைக்கசைத்த வழகனேயெந்தன் காவிரிப்
பாடுதண்புனல் வந்திழிபரஞ் சோதிபாண்டிக் கொடுமுடிச்
சேடனேயுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே.

விரும்பிநின்மலர்ப் பாதமேநினைந் தேன்வினைகளும் விண்டன
நெருங்குவண்பொழில்சூழ்ந் தெழில்பெறநின்றகாவிரிக்கோட்
டிடை, குரும்பைமென்முலைக் கோதைமார்குடைந்தாடுபாண்
டிக்கொடுமுடி, விருப்பனேயுனைநான்மறக்கினுஞ் சொல்லுநா
நமச்சிவாயவே. (7)

செம்பொனேர்சடை யாய்திரிபுரந் தீயெழச்சிலை கோலினாய்
வம்புலாங்குழ லாளைப்பாக மமர்ந்துகாவிரிக் கோட்டிடைக்
கொம்பின்மேற்குயில் கூவமாமயி லாடுபாண்டிக் கொடுமுடி
நம்பனேயுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே. ( )

சாரணன்றந்தை யெம்பிரானெந்தைதம்பிரானென் பொன்மா
மணியென்று, பேரெணாயிரகோடி தேவர்பிதற்றிநின்றுபிரிகி
லார், நாரணன்பிரமன் றொழுங்கறையூரிற்பாண்டிக் கொடுமு
டிக், காரணாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே.

கோணிப்பிறை சூடியைக்கறை யூரிற்பாண்டிக் கொடுமுடி
பேணியபெரு மானைப்பிஞ்ஞகப் பித்தனைப்பிறப் பில்லியைப்
பாணுலாவரி வண்டறைகொன்றைத்தாரனைப்படம்பாம்பரை
நாணனைத்தொண்ட னூரன்சொல்லிவைசொல்லுவார்க்கில்லை

திருச்சிற்றம்பலம்.

[துன்பமே.

## திருக்கடவூர் மயானம் பண்-பழம்-பஞ்சரம்.

### திருச்சிற்றம்பலம்.

மருவார்கொன்றைமதிசூடி மாணிக்கத்தின்மலைபோல
வருவார்விடைமேல்மாதோடு மகிழ்ந்துபூதப்படைசூழத்
திருமால்பிரமனிந்திரனுந் தேவர்நாகர்தானவர்க்கும்
பெருமான்கடவூர்மயானத்துப் பெரியபெருமானடிகளே. 1

விண்ணோர்தலைவர்வெண்புரிநூல் மார்பர்வேதகீதத்தர்
கண்ணார்நுதலர்நகுதலையர் காலகாலர்கடவூரர்
எண்ணார்புரமூன்றெரிசெய்த விறைவருமையோரொருபாகம்
பெண்ணாணவர்மயானத்துப் பெரியபெருமானடிகளே. 2

காயும்புலியினதலுடைய ரகண்டரெண்டோட்கடவூரர்
தாயுந்தந்தைபல்லுயிர்க்குந் தாமேயாயதலைவனார் [டி
பாயும்விடையொன்றதுவேறிப் மலிதேர்ந்துண்ணும்பரமேட்
பேய்கள்வாழுமயானத்துப் பெரியபெருமானடிகளே. 3

நறைசேர்மலரைங்கணையானை நயனத்தீயாற்பொடிசெய்த
இறையாராவரெல்லார்க்கு மில்லையென்றுதருள்செய்வார் [ப்
பறையார்முழவம்பாட்டோடு பயிலுந்தொண்டர்பயில்கடவூர்
பிறையார்சடையார்மயானத்துப் பெரியபெருமானடிகளே 4

கொத்தார்கொன்றைமதிசூடிக்கோள்நாகங்கள்பூணாக
மத்தயானையுரிபோர்த்து மருப்புமாமைத்தாலியாயசர்
பத்திசெய்துபாரிடங்கள் பாடியாடப்பலிகொள்ளும்
பித்தர்கடவூர்மயானத்துப் பெரியபெருமானடிகளே. 5

துணிவார்கீளுங்கோவணமுந் துதைந்துசுடலைப்பொடியணிந்
பணிமேலிட்டபாசுபதர் பஞ்சவடிமார்பினர்கடவூர்த் [து
திணிவார்குழையார்புரமூன்றுந் தீவாய்ப்படுத்தசேவகனார்
பிணிவார்சடையார்மயானத்துப் பெரியபெருமானடிகளே. 6

காரார்கடலினஞ்சுண்ட கண்டர்கடவூருறைவாணர்
தேராரரக்கன்போய்வீழ்ந்து சிதையவிரலா லூன்றினார்
ஊர்தானாவ துலகேழுமுடையார்க்கொற்றியூராரூர்
பேராயிரவர்மயானத்துப் பெரியபெருமானடிகளே 7

வாடாமுலையாள்தன்னோடு மகிழ்ந்துகானில்வேடுவனாய்க்
கோடார்கேழற்பின்சென்று குறுகிவிசயன்றவமழித்து
நாடாவண்ணஞ்செருச்செய்து யாவநாழிநிலையருள்செய்
பீடார்சடையார்மயானத்துப் பெரியபெருமானடிகளே. 8

வேழமுரிப்பர்மழுவாளர் வேள்வியழிப்பர்சிரமறுப்பர்
ஆழியளிப்பரரிதனக்கன் றானைத்துகப்பாரமுரைப்பர்
ஏழைத்தலைவர்கடவூரி லிறைவர்சிறுமான்மறிக்கையர்
பேழைச்சடையர்மயானத்துப் பெரியபெருமானடிகளே

மாடமல்குகடவூரில் மறையோரேத்துமயானத்து
பீடைதீரவடியாருக் கருளும்பெருமானடிகள்சீர் [ப்
நாடிநாவலாரூர னம்பிசொன்னநற்றமிழ்கள்
பாடுமடியார்கேட்பார்மேற் பாவமானபறையுமே. 10

திருச்சிற்றம்பலம்

திருக்கடவூர்-பண்-கட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பொடியார்மேனியனே புரி நூலொருபாற்பொருந்த
வடியார்மூவிலைமேல் வளர் கங்கையின் மங்கையொடும்
கடியார்கொன்றையனே கடவூர்தனுள் வீரட்டத்தெம்
அடிகேளென்னமுதே யெனக் கார்துணைநீயலதே 1

பிறையாருஞ்சடையாய் பிரமன்றலையிற்பலிகொண்
மறையார்வானவனே மறையின் பொருளானவனே
கறையாரும்மிடற்றாய் கடவூர்தனுள்வீரட்டத்தெம்
இறைவாவென்னமுதே யெனக் கார்துணைநீயலதே 2

அன்றாலின்னிழற்கீழ் அற நால்வர்க்கருள்புரிந்து
கொன்றாய்காலனுயிர் கொடுத் தாய்மறையோனுக்குமான்
கன்றாருங்கரவா கடவூர்த்திருவீரட்டத்துள்
என்றாதைபெருமா னெனக் கார்துணைநீயலதே 3

போராருங்கரியின் னுரிபோர்த்துப்பொன் மேனியின்மேல்
வாராரும்முலையா ளொரு பாகமகிழ்ந்தவனே
காராரும்மிடற்றாய் கடவூர்தனுள்வீரட்டானத்
தாராவென்னமுதே யெனக்கார் துணைநீயலதே 4

மையார்கண்டத்தினாய் மதமாவுரிபோர்த்தவனே
பொய்யாதென்னுயிருட்புகுந் தாயின்னம்போக்கரியாய்
கையாராடரவா கடவூர்தனுள்வீரட்டத்தெம்
ஐயாவென்னமுதேயெனக் கார்துணைநீயலதே 5

மண்ணீர்தீவெளிகால் வரு பூதங்களாகிமற்றும்
பெண்ணோடாணலியாப்பிற வாவுருவானவனே
கண்ணாருண்மணியே கடவூர்தனுள் வீரட்டத்தெம்
அண்ணாவென்னமுதே யெனக்கார் துணைநீயலதே. 6

எரியார்புன்சடைமே விள நாகமணிந்தவனே
நரியாருஞ்சுடலை நகு வெண்டலைகொண்டவனே
கரியாரீருரியாய் கடவூர்தனுள்வீரட்டத்துள்
அரியாயென்னமுதே யெனக்கார் துணைநீயலதே 7

வேறாவுன்னடியேன் விளங்குக்குழைக்காதுடையாய்
தேறேனுன்னையல்லாற் சிவனே யென்செழுஞ்சுடரே
காரூர்வெண்மருப்பா கடவூர்த்திரு வீரட்டத்தெம்
ஆரூர்செஞ்சடையா யெனக்கார் துணைநீயலதே 8

அயனோடன் றரியு மடி யும்முடிகாண்பரிய
பயனேயெம்பரனே பர மாயபரஞ்சுடரே
சயமாருஞ்சடையாய் கடவூர்த்திரு வீரட்டத்துள்
அயனேயென்னமுதே யெனக்கார் துணை நீயலதே 9

காராரும்பொழில்சூழ் கடவூர்த்திரு வீரட்டத்துள்
ஏராரும்மிறையைத் துணையாவெழில் நாவலர்கோன்
ஆரூரனடியா னடித் தொண்டனுரைத்ததமிழ்
பாரோரேத்தவல்லார் பா லோகத்திருப்பாரே. 10

திருச்சிற்றம்பலம்.

PAGE NO - 117, 118 MISSING IN ORIGINAL

னெல்வேலிவென்ற நின்றசீர்நெடுமாற னடியார்க்குமடியேன்
துறைக்கொண்டசெம்பவள மிருளகற்றுஞ்சோதித் தொன்ம
யிலைவாயிலா னடியார்க்குமடியே னறைகொண்டவேல்நம்பி
முனையடுவார்க்கடியேன் ஆரூரன் ஆரூரி லம்மானுக்காளே 8

கடல்சூழ்ந்தவுலகெலாங்காக்கின்ற பெருமான் காடவர்
கோன்கழற்சிங்க னடியார்க்குமடியேன் மடல்சூழ்ந்ததார்நம்பி
யிடங்கழிக்குந் தஞ்சை மன்னவனாஞ்செருத்துணைத னடியார்
க்குமடியேன் புடைசூழ்ந்த புலியதன்மே லரவாடவாடி பொ
ன்னடிக்கேமனம்வைத்த புகழ்த்துணைக்குமடியேன் அடல்சூழ்
ந்தவேல் நம்பிகோட் புலிக்குமடியேன் ஆரூரன் ஆரூரி லம்மா
னுக்காளே.

பத்தராய்ப்பணிவார்களெல்லார்க்குமடியேன் பரமனையே
பாடுவா ரடியார்க்குமடியேன் சித்தத்தைச்சிவன்பாலே வைத்
தார்க்குமடியேன் திருவாரூர்ப் பிறந்தார்களெல்லார்க்குமடி
யேன் முப்போதுந்திருமேனி தீண்டுவார்க்கடியேன் முழு
நீறுபூசிய முனிவர்க்குமடியேன் அப்பாலுமடிச்சார்ந்தா ரடி
யார்க்குமடியேன் ஆரூரன் ஆரூரி லம்மானுக்காளே. 10

மன்னியசீர்மறைநாவ னின்றவூர்ப்பூசல் வரிவளையாள்மா
னிக்கும் நேசனுக்குமடியேன் தென்னவனாயுலகாண்ட செங்
கணார்க்கடியேன் திருநீலகண்டத்துப் பாணனார்க்கடியே னென்
னவனாமரனடியே யடைந்திட்டசடைய னிசைஞானிகாத
லன் திருநாவலூர்க்கோ னன்னவனாமாரூ ரனடிமைகேட்கப்
பாராரூரிலம்மானுக் கன்பராவாரே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருவாரூர்-பண்-பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்.

பத்திமையுமடிமையையுங் கைவிடுவான்பாவியேன் (வேண்
பொத்தினநோயதுவிதனைப்பொருளறிந்தேன்போய்த்தொழு
முத்தினைமாமணிதன்னை வயிரத்தைமூர்க்கனேன்
எத்தனைநாள்பிரிந்திருக்கே னென்னாரூரிறைவனையே 1

ஐவணமாம்பகழியுடையடல்மதனன் பொடியாகச்
செவ்வண்ணமாந்திரிநயனம் விழிசெய்தசிவமூர்த்தி
மையணவுகண்டத்து வளர்சடையெம்மாரமுதை
யெவ்வணநான்பிரிந்திருக்கே னென்னாரூரிறைவனையே 2

சங்கலக்குந் தடங்கடல்வாய் விடஞ்சுடவந்தமரர்தொழ
அங்கலக்கண்டீர்த்தவ்விட முண்டுகந்தவம்மானை
யிங்கலக்கு மூடற்பிறந்த வறிவிலியேன்செறிவின்றி
யெங்குலக்கப்பிரிந்திருக்கே னென்னாரூரிறைவனையே. 3

இங்ஙனம்வந்திடர்ப்பிறவிப் பிறந்தயர்வேனயராமே
யங்ஙனவந்தென்னையாண்ட வருமருந்தென்னாரமுதை
வெங்கனன்மாமேனியனை மான் மருவுங்கையானை
யெங்ஙனநான்பிரிந்திருக்கே னென்னாரூரிறைவனையே 4

செப்பரியவயனொடுமால் சிந்தித்துந்தெரிவரிய
அப்பெரியதிருவினையே யறியாதேயருவினையேன்
ஒப்பரியகுணத்தானை யிணையிலியையணைவின்றி
யெப்பரிசுபிரிந்திருக்கே னென்னாரூரிறைவனையே 5

வன்னாகநாண்வரை விலங்கிகணையரிபகழி
தன்னாகமுறவாங்கிப் புரமெரித்ததன்மையனை
முன்னாகநினையாத மூர்க்கனேனாக்கைசுமந்
தென்னாகப்பிரிந் திருக்கே னென்னாரூரிறைவனையே 6

வஞ்சயமாயடியேன்மேல் வருங்கூற்றனுரங்கிழிய
முன்சயமார்பாதத்தால் முனிந்துகந்தமூர்த்திதனை
மின்செயும்வார்சடையானை விடையானையடைவின்றி
யென்செயநான்பிரிந் திருக்கே னென்னாரூரிறைவனையே 7

முன்னவனைவானவர்கூடித் தொழுதேத்துமுழுமுதலை
யந்நெறியையமரர்தொழு நாயகனையடியார்கள்
செந்நெறியைத்தேவர்குலக் கொழுந்தைமறந்திங்ஙனநான்
என்னறிவான்பிரிந் திருக்கே னென்னாரூரிறைவனையே 8

கற்றுளவான்கனியாய் கண்ணுதலைக்கருத்தார
உற்றுளனாமொருவனைமுன் னிருவர்நினைந்தினிதேத்தப்
பெற்றுளனாம்பெருமையனைப் பெரிதடியேன்கையகன்றிட்
டெற்றுளனாய்ப்பிரிந் திருக்கே னென்னாரூரிறைவனையே 9

ஏழிசையாயிசைப்பயனா யின்னமுதாயென்னுடைய
தோழனுமாயான்செய்யுந் துரிக்களுக்குடனாகி
மாழையொண்கண்பரவையைத் தந்தாண்டானைமதியிலா
ஏழையேன்பிரிந் திருக்கே னென்னாரூரிறைவனையே 10

வங்கமலிகடனஞ்சை வானவர்கடாமுய்ய
நுங்கியமுதவர்க்கருளி நொய்யேனைப்பொருட்படுத்துச்

சங்கிலியோடெனைப்புணர்த்த தத்துவனைச்சழக்கனேன்
எங்குலக்கப்பிரிந்திருக்கே னென்னாரூரிறைவனையே 11

பேருருமதகரியி னுரியானைப்பெரியவர்தஞ்
சீருருந்திருவாரூச் சிவனடியே திறம்விரும்பி
யாரூரனடித்தொண்ட னடியன்சொலகவிடத்தில்
ஆரூரனிவைவல்லா ருலகவர்க்குமேலாரே. 12

திருச்சிற்றம்பலம்.

## திருமழபாடி-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பொன்னார்மேனியனே புலித் தோலையரைக்கசைத்து
மின்னார்செஞ்சடைமேல் மிளிர் கொன்றையணிந்தவனே
மன்னேமாமணியே மழபாடியுண்மாணிக்கமே
யன்னேயுன்னையல்லா லினி யாரைநினைக்கேனே 1

கீளார்கோவணமுந் திரு நீறுமெய்ப்பூசியுன் றன்
றாளேவந்தடைந்தேன் றலை வாவெனையேன் றுகோணீ
வாளாரகண்ணிபங்கா மழ பாடியுண்மாணிக்கமே
கேளாநின்னையல்லா லினி யாரைநினைக்கேனே 2

எம்மானெம்மனையென் றனக் கெட்டனைச்சார்வாகா
ரிம்மாயப்பிறவிப் பிறந் தேயிறந்தெய்த்தொழிந்தே
மைம்மார்பூம்பொழில்சூழ் மழ பாடியுண்மாணிக்கமே
யெம்மானின்னையல்லா லினி யாரைநினைக்கேனே 3

பண்டேநின்னடியே னடி யாரடியார்கட்கெல்லாக்.
தொண்டேபூண்டொழிந்தேன் றொட ராமைத்துரிசறுத்தேன்
வண்டார்பூம்பொழில்சூழ் மழ பாடியுண்மாணிக்கமே
யண்டாநின்னையல்லா லினி யாரைநினைக்கேனே. 4

கண்ணாயேழுலகுக் கருத்தாய் அருத்தமுமாய்ப்
பண்ணாகன்தமிழாய்ப் பர மாயபரஞ்சுடரே
மண்ணார்பூம்பொழில்சூழ் மழபாடியுண்மாணிக்கமே
யண்ணாநின்னையல்லா லினி யாரைநினைக்கேனே 5

ாளார்வந்தணுகி நலியாமுன நின்றனக்கே
யாளாவந்தடைந்தே னடி யேனையுமேன்றுகொணீ
மாளாநாளருளு மழபாடியுண்மாணிக்கமே
யாளாநின்னையல்லா லினி யாரைநினைக்கேனே 6

சந்தாருங்குழையாய் சடைமேற்பிறை தாங்கிநல்ல
வெந்தார்வெண்பொடியாய் விடை யேறியவித்தகனே
மைந்தார்சோலைகள்சூழ் மழ பாடியுண்மாணிக்கமே
யெந்தாய் நின்னையல்லா லினி யாரைநினைக்கேனே 7

வெய்யவிரிசுடரோன் மிகு தேவர்கணங்களெல்லாஞ்
செய்யமலர்களிட மிகு செம்மையுள்நின்றவனே
மையார்பூம்பொழில்சூழ் மழ பாடியுண்மாணிக்கமே
யையாநின்னையல்லா லினி யாரைநினைக்கேனே 8

நெறியேநின்மலனே நெடுமாலயன் போற்றிசெய்யுங்
குறியேநீர்மையனே கொடி யேரிடையாள்தலைவா

மறிசேரங்கையனே மழ பாடியுண்மாணிக்கமே
யறிவேநின்னையல்லா லினி யாரைநினைக்கேனே 9

ஏரார்முப்புரமு மெரியச்சிலை தொட்டவனை
வாரார்கொங்கையுடன் மழ பாடியுன்மேயவனைச்
சீரார்நாவலர்கோ னாரூ ரனுரைத்ததமிழ்
பாரோரேத்தவல்லார் பர லோகத்திருப்பாரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்கேதாரம்-பண்-நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

வாழ்வாவதுமாயமிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவதுபிறவிக் கடல் பசிநோய்செய்தபறிதான்
றாழாதறஞ்செய்ம்மின் றடங் கண்ணான்மலரோனுங்
கீழ்மேலுறநின்றான் றிருக் கேதாரமெனீரே 1

பறியேசுமந்துழல்வீர் பறி நரிகீறுவதறியீர்
குறிகூவியகூற்றங்கொளு நாளா லறமுளவே
யறிவானிலுமறிவானல நறுநீரொடுசோறு
கிறிபேசிநின்றிடுவார் தொழு கேதாரமெனீரே 2

கொம்பைப்பிடித் தொருக்காலர்க ளிருக்கான்மலர்தூவி
நம்மையாள்வானென்று நடுநாளையும்பகலும்
கம்பக்களிற்றினமாய்நின்று சுனைநீர்களைத்தூவிச்,
செம்பொற்பொடிச்சிந்துந்திருக் கேதாரமெனீரே 3

உழக்கேயுண்டுபடைதீட்டிவைத்திழப்பார்களுஞ் சிலர்கள்
வழக்கேயெனிற்பிழைக்கேமென்பர் மதிமாந்திய மாந்தர்
சழக்கேபறிநிறைப்பாரொடு தவமாவதிசெய்மின்
கிழக்கேசலமிடுவார் தொழுகேதாரமெனீரே 4

வாளோடியதடங்கண்ணியர் வலையிலழுந்தாதே
நாளோடியநமனார்தமர் நணுகாமுன நணுகி
யாளாயுய்ம்மினடிகட்கிடமதுவேயெனி லிதுவே
கீளோடர வசைத்தானிடங் கேதாரமெனீரே 5

தளிசாலைகள் தவமாவது தம்மைப் பெறிலன்றே
குளியீருளங் குருக்கேத்திரங் கோதாவிரிகுமரி
தெளியீருளஞ் சீர்ப்பதந் தெற்குவடக்காகக்
கிளிவாழையொண் கனிகீறியுண் கேதாரமெனீரே 6

பண்ணின்றமி ழிசைபாடலின் பழவேயமுழவதிரக்
கன்னின்னொளி கனகச்சுனை வயிரம்மவைசொரிய
மண்ணின்றன மதவேழங்கண் மணிவாரிக்கொண்டெறியக்
கிண்ணென்றிசை முரலுந்திருக் கேதாரமெனீரே. 7

முளைக்கைப்பிடி முகமன்சொலி முதுவேய்களையிறுத்துத்
துளைக்கைக்களிற் றினமாய்நின்று சுனைநீர்களைத்தூவி
வளைக்கைப்பொழி மழைகூர்தர மயின்மான்பிணை நிலத்தைக்
கிளைக்கம்மணி சிந்துந்திருக் கேதாரமெனீரே. 8

பொதியேசுமந்துழல்வீர்பொதி யவமாவதுமறியீர்
மதிமாந்திய வழியேசென்று குழிவீழ்வதுவினையாற்
கதிர்சூழ்கடலிலங்கைக்கிறை மலங்கவ்வரையடர்த்துக்
கெதிபேறுசெய் திருந்தானிடங் கேதாரமெனீரே 9

நாவின்மிசை யரையன்னொடு தமிழ்ஞானசம்பந்தன்
யாவர்சிவ னடியார்களுக் கடியானடித்தொண்டன்
தேவன்றிருக் கேதாரத்தை யூரன்னுரைசெய்த
பாவின்றமிழ் வல்லார்பரலோகத்திருப்பாரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## திருப்புக்கொளியூர் அவிநாசி-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்

எத்தான்மறக்கேனெழு மைக்குமெம் பெருமானையே
யுற்றாயென்றுன்னையே யுள்குகின்றேனுணர்ந்துள்ளத்தாம்
புற்றாடரவாபுக் கொளியூரவிநாசியே
பற்றாகவாழ்வேன் பசுபதியேபரமேட்டியே 1

வழிபோவார்தம்மொடும் வந்துடன் கூடிய மாமணிநீ
யொழிவதழகோசொல்லா யருளோங்குசடையானே
பொழிலாருஞ்சோலைப்புக் கொளியூரிற்குளத்திடை
யிழியாக்குளித்தமாணி யென்னைக்கிறிசெய்ததே 2

எங்கேனும்போகினுமெம் பெருமானைநினைந்தக்காற்
கொங்கேபுகினுங்கூறை கொண்டாறலைப்பாரிலையா
பொங்காடரவா புக்கொளியூரவிநாசியே
யெங்கோனேயுனைவேண்டிக் கொள்வேன்பிறவாமையே 3

உரைப்பாருரையுகந் துள்கவல்லார்தங்களுச்சியா
யரைக்காடரவா வாதியுமந்தமுமாயினாய்
புரைக்காடுசோலைப்புக் கொளியூரவிநாசியே
கரைக்கான்முதலையைப் பிள்ளை தரச்சொல்லுகாலனையே 4

அரங்காவதெல்லாமா யிடுகாடதுவன்றியுஞ்
சரங்கோலைவாங்கிவரி சிலைநாணியிற்சந்தித்து
புரங்கெடச்செய்தார் புக்கொளியூரவிநாசியே
குரங்காடுசோலைக் கோயில்கொண்டகுழகனே 5

நாத்தானுமுனைப்பாட லின்றிநவிலாதென்னச்
சோத்தென்றுதேவர்தொழ நின்றசுந்தரச்சோதியாய்
பூத்தாழசடையாய் பக்கொளியூரவிநாசியே
கூத்தாவுனக்குநா னாட்பட்டகுற்றமுங்குற்றமே 6

மந்திகடுவனுக் குணப்பழகாடிமலைப்புறஞ்
சந்திகடோறுஞ் சலபுட்பமிட்டுவழிபடப்
புந்தியுறைவாய் புக்கொளியூரவிநாசியே
நந்தியுனைவேண்டிக் கொள்வேனரகம்புகாமையே

பேணாதொழிந்தேனுன்னை யலாற்பிறதேவரைக்
காணாதொழிந்தேன் காட்டுதியேலின்னங்காணபனான்
பூணாணாரவா புக்கொளியூரவிநாசியே
காணாதகண்கள் காட்டவல்லகறைக்கண்டனே 8

நள்ளாறுதெள்ளா றரத்துறைவாயெங்கணம்பனே
வெள்ளாடைவேண்டாய் வேங்கையிறோலைவிரும்பினாய்
புள்ளேறுசோலைப்புக்கொளியூரிற்குளத்திடை
யுள்ளாடப்புக்க யாணியென்னைக்கிறிசெய்ததே 9

நீரேறவேறு நிமிர்புன்சடைநின் மலமூர்த்தியைப்
போரேறதேறியைப் புக்கொளியூரவிநாசியைக்
காரேறுகண்டனைத் தொண்டனாரூரன்கருதிய
சீரேறுபாடல்கள் செப்பவல்லார்க்கில்லைதுன்பமே 10

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

# மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம்.

மாணிக்கவாசகர் சைவசமயாச்சாரியார் நால்வரிலொருவர் இவருக்கு சிவஸ்தலங்களிலெல்லாம் மார்கழிமாதத்திற் திருவிழாநடத்தப்படுகின்றது இவர், பாண்டியநாட்டில், திருவாதவூரில் அமாத்திய ரென்கின்ற அந்தணர் குலத்திற்பிறந்து, வாதவூரரென்று தந்தையாரிட்ட திருநாமத்தோடு வளர்ந்து கலைகளில் வல்லவராயிருந்தார் இவரது குணாதிசயங்களை மதுரை அரிமர்த்தனபாண்டியராஜன் கேள்வியுற்று வரவழைத்தாராய்ச்சிசெய்து, பிரமராயனென்னும் பெயருங்கொடுத்து முதன் மந்திரியாக்கினான்

இவர் சிவபக்தியிற்சிறந்த மனனாலிவ்வுலக வின்பங்களைவெறுத்து மோட்சத்திற் கேதுவாகியதத்துவஞானத்தைப்போதிக்கும் ஞானாசாரியரைக்காணப் பிரியங்கொண்டிருந்தனர் அவ்விதமிருக்கையில், கீழ்கடற்றுறைக்குப் போய் குதிரைகள் வாங்கிவரும்படி அரசனேவ நால்வகைச்சேனையோடும் ஏராளமான திரவியத்தோடுஞ்சென்று திருப்பெருந்துறைக்குச் சமீபித்தார். இவரது பரிபக்குவத்தை பரமசிவனறிந்து அருள்செய்வதற்காகத் திருப்பெருந்துறையிலே குருந்தமரத்தடியிற் கணங்கள் மாணாக்கர்களாயும், தாம்ஞானாசாரியராகவும் திருவுருக்கொண்டு வீற்றிருந்தருளினார். மந்திரியாரவரைக்கண்டு உள்ளங்களிந்துருகி குருமூர்த்தியின் திருவடிக் கழலிலேவீழ்ந்து தேவரீரடியேற்கருள்செயல்வேண்டுமென்று

துதித்தார் உடனே சுவாமி திருவருள்கூர்ந்து ஞானதீட்சை செய்து உபதேசஞ்செய்தருளினார். அவ்வுபதேசத்தைப்பெற்ற வாதவூரார் அன்புமேலிட்டு அற்புதசின்மய வாசகங்கள் சேர்ந்த பாடல்களைப் பாடத்தொடங்கினார்.

அப்பாடல்கள் மாணிக்கங்கள்போல் விலையேறப்பெற்றவையாயிருந்ததால் அவற்றைக்கேட்ட சிவபெருமான் திருவுளம் களிகூர்ந்து மாணிக்கவாசகரென்னும் திருப்பெயரைக் கொடுத்து அங்கே யிருக்கும்படி கட்டளையிட்டு மறைந்தருளினார். பின்பு மாணிக்கவாசகர் குதிரைகளுக்காகக் கொணர்ந்த பொன்னையெல்லாஞ் சிவாலயத்திருப்பணி முதலிய தர்மார்த்தங்களிற் செலவிட்டு நிரதிசயமானந்த நிட்டானுபூதியில் களித்திருக்கையில், இதுவரையில் மந்திரியார் குதிரைகள்வாங்கி வராத காரணமென்னென்று அரசனிடமிருந்து திருமுகம்வந்தது மாணிக்கவாசகருடனே சந்நிதியிற்போய்த்தொழுது ஆண்டவனே அடியேனென்ன செய்வேனென்று பிரார்த்திக்க அப்போதுண்டான அசரீரிவாக்கின்படி மதுரைக்கெழுந்தருளி அரசனைக்கண்டு பரித்திரள் பின்னால் வருவதாகச்சொல்லிச் சிறந்த வரிசைகள் பெற்று அரசனிடத்தில் விடைபெற்று பொற்றாமரையில் ஸ்நானஞ்செய்து மீனாட்சிசமேத சொக்கலிங்கப் பெருமானைத் தொழுது பாண்டியனது கோபத்திற் காளாக்காமற தன்னைக் காத்தருளவேண்டுமென்று புலம்ப சுவாமி கிருபை கூர்ந்து அன்பனே அஞ்சவேண்டாம் பரித்திரள்கொண்டுவருகின்றோமென்று அசரீரியாய்ச் சொல்லக்கேட்டு களிகூர்ந்து தம்மில்லஞ்சேர்ந்தார்.

மறுநாள் அரசன் மந்திரியாரை வரவழைத்து குதிரைக
ளேன் வரவில்லையென்று வினவ இன்றையமுன்றுநாள்வரு
மென்று சொல்லினர் அவ்விதமும்வாராமையால் அரசன் வெ
குண்டு தண்டமாக்களிட மொப்பிவித்து இக்கள்வனைத் தண்
டித்துப் பொருளைவாங்குமென்று கட்டளையிட்டான். அவர்க
ளுமவ்வாறே இவரையழைத்துப்போய்ப்பெருங்கற்களைமுது
கிலிட்டும் கிட்டிகட்டியும் அணைஞர்தாளிட்டும் வருத்திக்கால்
களுக்கு விலங்கிட்டு அன்றிரவு ஓரிருண்டவறையி லடைத்து
வைத்திருந்தனர். மாணிக்கவாசகர் சிவபெருமானுடைய பாத
ங்களையே சிந்தித்துக்கொண்டிருந்தார்

இவரது துயரைச்சுவாமியறிந்து சிறையினின்றுமீட்கத்
திருவுளங்கொண்டு மறுநாள் காட்டிலுள்ள நரிகளையெல்லாம்
பரிகளாக்கிச் சிவகணங்களையெல்லாமவற்றை நடத்தும் சேவ
கர்களாக்கித்தாமும் வேதக்குதிரையின் மீதாரோகணித்து அர
சனிடம் வந்து வேதக்குதிரைநீங்களாக மற்றக்குதிரைகளை
யெல்லாமொப்புவித்து மாணிக்கவாசகசுவாமிகளை சிறைமீட்
பித்து அரசன்பரிசாகத் தந்தவஸ்திரத்தையு மடியார்பொருட்
வாங்கிச் சிரசிற்றரித்து மறைந்தருளினர். லாயத்திற்கட்டப்ப
ட்டிருந்த புதியபரிகளெல்லா மன்றிரவுநரிகளாகிப் பக்கத்தி
லிருந்த பரிகளையுங் கடித் திம்சித்து ஊரெங்குங்கூக்குரலிட்டு
ஓடிப்போயின மறுநாளரசனறிந்து மிகசீற்றங்கொண்டு மா
ணிக்கவாசகரை முன்னிலுமதிகமாகத் தண்டித்துப்பொருளை
வாங்கும்படி கட்டளையிட்டான். அவ்விதமே வருத்தினர்கள்,

மாணிக்கவாசக ரிவ்வருத்தத்தைச் சகிக்காதுமுறையிட சுவாமி கங்கையை நோக்கினர் உடனே மதுராநகரின்மீது வெள்ளம் புரண்டுவந்தது. அரசனுத்திரவுபடி மந்திரிகளாற்றங்கரைக்குச்சென்று ஊரிலுள்ள ஒவ்வொருவருக்கும் பங்கிட்டுக்கொடுத்து அணைபோடும்படி செய்தார்கள் தம்மிடத்தன்புள்ளவளும் ஆளற்றவளுமாகிய வந்தியென்னும் பிட்டுவாணிச்சியாருக்குத் தாம் கூலியாளாகப் பரமசிவன்சென்று அணைபோடாது பல திருவிளையாட்டுகளைச் செய்துக்கொண்டிருந்தார் அணையைக்கோலிப் பார்த்துவந்த அரசன் வந்தியின்பங்கைக்கண்டு கையிலிருந்த பிரம்பால் கூலியாளின் முதுகிலடித்தான் உடனே சுவாமி ஒருகூடைமண்ணை யுடைப்பிற்போட்டு மறைந்தருளினர் அவ்வொரு கூடைமண் மற்றவர்களாலடைப்பிலும் பெரிதாகி உடைப்பையடைத்துவிட்டது

அரசனடித்த பிரம்படியோ தேவர்முதற்சகல ஜீவகோடிகளின்முதுகிலும் பட்டதுமல்லாமல் பாண்டியனது முதுகிலும் பட்டிருந்தது. இவற்றை யரசன்கண்டு பிரமித்திருக்க சுவாமி அசரீரியாய்நின்று மாணிக்கவாசகரது பெருமையையுமவர்பொருட்டுத் தாஞ்செய்ததையுஞ் சொல்லியருளக்கேட்டு அஞ்சி மாணிக்கவாசகரிடஞ்சென்று வணங்கித் தன்குற்றத்தைக்ஷமித்து முன்போலுலகத்தை யிரட்சித்தருளவேண்டுமென்று துதிக்க மண்ணாசையற்றவராகிய மாணிக்கவாசகசுவாமிகள் பாண்டியனைநோக்கி எம்பெருமானென்னைச்சிதம்பரத்திற்குப் போகப்பணித்திருக்கின்றமையால் நீருமதற்கிசைந்து விடைதரல்வேண்டுமென்று சொல்லி விடைபெற்றுச் சிதம்பரஞ்சென்று சுவாமியைத்தரிசித்துப் பலதிருப்பாடல்கள்செ

ய்து இலங்கையினின்று வாதுக்குவந்தபுத்தரைவாதில்வென்று பௌத்தசமயத்தனாகிய சோழனது ஊமைப்பெண்ணையும் பேசும்படிசெய்து சிலநாளங்கிருந்தருளினார்.

அப்போது சிவபெருமானே ரந்தணராக அவரிடஞ்சென்று இவர்செய்த திருப்பாடல்களையெல்லாந் தொகுத்துத் திருவாசகமாகக்கூறவும் திருக்கோவையார் பாடவும் கேட்டு அவர்பாடியவண்ணம் தமதருமைத் திருக்கரத்தாலெழுதி அப்புத்தக முடிவில் திருச்சிற்றம்பல முடையாரெனக் கைச்சாப்பமும்வைத்து மறைந்தருளினார் அத்திருமுறை சிற்சபையிலே வைக்கப்பட்டிருத்தலைக்கண்ட தில்லைவாழந்தணர் முதலியோர் அதனையெடுத்து அதன்பொருளை யுணர்த்தும்படி மாணிக்கவாசகசுவாமிகளைவேண்ட அவர் திருவாசகம் திருக்கோவையாரென்னு மிரண்டினது உண்மைப்பொருள் ஸ்ரீநடராஜபெருமானேயென்று சுட்டிக்காட்டிச்சிற்சபையிலேபோய் அருட்பெருஞ்சோதிமயமாக விளங்கிய சிதாகாசத்தில் கலந்தருளினார்.

திருச்சிற்றம்பலம்.

மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச்செய்த

# திருவெம்பாவை.

திருச்சிற்றம்பலம்

ஆதியுமந்தமுமில்லாவரும்பெருஞ் சோதியையாம் பாடக்
கேட்டேயும் வாட்டடங்கண், மாதேவளருதியோவன்செவியோ
நின்செவிதான் மாதேவன் வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த்
தொலிபோய், வீதிவாய்க்கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மற
ந்து போதாரமளியின்மேனின்றும் புரண்டிங்ங, னேதேனுமா
காள் கிடந்தாளென்னேயென்னே யீதேயெந்தோழி பரிசே
லோரெம்பாவாய் 1

முன்னைப்பழம்பொருட்கு முன்னைப்பழம்பொருளே பி
ன்னைப்புதுமைக்கும்பேர்த்துமப்பெற்றியனே, யுன்னைப்பிரா
னாகப்பெற்றவுன்சீரடியோ முன்னடியார்தாள்பணிவோ மாங்
கவர்க்கே பாங்காவோ, மன்னவரேயெங்கணவ ராவாரவருகந்
து சொன்னபரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோ மின்ன
வகையே யெமக்கெங்கோனல்குதியே லென்னகுறையுமி
லோமேலோரெம்பாவாய் 2

அண்ணாமலையா னடிக்கமலஞ்சென்றிறைஞ்சும் விண்
ணோர்முடியின் மணித்தொகைவீறற்றாற்போற்,கண்ணாரிரவி
கதிர்வந்துகார்கரப்பத் தண்ணாரொளிமழுங்கித் தாரகைகடா
மகலப் பெண்ணாகியாணா யலியாய்ப்பிறங்கொளிசேர் விண்
ணாகி மண்ணாகி யித்தனையும்வேறாகிக், கண்ணாரமுதமுமாய்
நின்றான் கழல்பாடிப் பெண்ணேயிப்பூம்புனல்பாய்ந் தாடே
லோரெம்பாவாய் 3

போற்றியருளுக நின்னாதியாம்பாதமலர் போற்றியருளுக நின்னந்தமாஞ் செந்தளிர்கள் போற்றியெல்லாவுயிர்க்குந் தோற்றமாம்பொற்பாதம் போற்றியெல்லா வுயிர்க்கும் போகமாம்பூங்கழல்கள், போற்றியெல்லாவுயிர்க்கு மீறாமிணையடிகள் போற்றிமாலுநான்முகனுங்காணாதபுண்டரிகம், போற்றியாமுய்ய வாட்கொண்டருளும் பொன்மலர்கள் போற்றியாமார்கழிநீ ராடேலோரெம்பாவாய்

திருச்சிற்றம்பலம்

## திருவம்மானை

திருச்சிற்றம்பலம்

செங்கணெடுமாலுஞ் சென்றிடந்துங்காண்பரிய பொங்குமலர்ப்பாதம் பூதலத்தேபோந்தருளி யெங்கள்பிறப்பறுத்திட்டெந்தரமுமாட்கொண்டு தெங்குதிரள்சோலைத் தென்னன்பெருந்துறையா னங்கணனந்தணனா யறைகூவிவீடருளு மங்கருணைவார்கழலே பாடுதுங்காணம்மானாய். 1

சந்திரனைத்தேய்த்தருளித் தக்கன்றன் வேள்வியினிலிந்திரனைத்தோணெரித்திட் டெச்சன்றலையரிந் தந்திரமே செல்லுமலர்கதிரோனைப்பற்றகர்த்துச் சிந்தித்திசைதிசையே தேவர்களை யோட்டுகந்த செந்தார்ப்பொழில்புடைசூழ் தென்னன்பெருந்துறையா மந்தாரமாலையே பாடுதுங்காணம்மானாய் 2

ஊனாயுயிரா யுணர்வாயென்னுட்கலந்து தேனாயமுதமுமாய்த்தீங்கரும்பின் கட்டியுமாய்வானோரறியா வழியெமக்குத்

தந்தருளுந் தேனார்மலர்க்கொன்றைச் சேவகனார் சீரொளிசே
ரானாவறிவாயளவிறந்த பல்லுயிர்க்குங் கோனாகிநின்றவா
கூறுதுங்காணம்மானாய். 3

பெற்றிபிறர்க்கரிய பெம்மான்பெருந்துறையான் கொற்
றக் குதிரையின்மேல் வந்தருளித்தன்னடியார் குற்றங்கணீக்
கிக் குணங்கொண்டுகோதாட்டிச் சுற்றியசுற்றத் தொடர்வறு
ப்பான்றொல்புகழே பற்றியிப்பாசத்தைப் பற்றறநாம்பற்று
வான் பற்றியபேரானந்தம் பாடுதுங்காணம்மானாய் 4

திருச்சிற்றம்பலம்

---

## வாழாப்பத்து.

திருச்சிற்றம்பலம்

பாரொடுவிண்ணாய்ப்பரந்தவெம்பரனே பற்றுநான்மற்றி
லேன்கண்டாய் சீரொடுபொலிவாய் சிவபுரத்தரசே திருப்பெ
ருந்துறையுறைசிவனே யாரொடுநோகே னார்க்கெடுத்துரைக்
கேனாண்ட நீயருளிலையானால் வார்கடலுலகில் வாழ்கிலேன்
கண்டாய் வருகவென் றருள்புரியாயே 1

வம்பனேன்றன்னையாண்ட மாமணியே மற்றுநான்பற்றி
லேன்கண்டா யும்பருமறியா வொருவனேயிருவர்க் குணர்
விறந்துலகமூடுருவுஞ் செம்பெருமானே சிவபுரத்தரசே திரு
ப்பெருந்துறையுறைசிவனே யெம்பெருமானே யென்னையாள்
வானே யென்னைநீகூவிக்கொண்டருளே 2

பண்ணினேர்மொழியாள் பங்கநீயல்லாற் பற்றுநான்மற்
றிலேன்கண்டாய் திண்ணமேயாண்டாய் சிவபுரத்தரசே திரு
ப்பெருந்துறையுறைசிவனே யெண்ணமே யுடல்வாய் மூக்
கொடுசெவிகண்ணென்றிவை நின்கணேவைத்து மண்ணின்
மேலடியேன் வாழ்கிலேன் கண்டாய் வருகவென் றருள்
புரியாயே. 8

பந்தணைவிரலாள் பங்கநீயல்லாற்பற்றுநான்மற்றிலேன்
கண்டாய் செந்தழல்போல்வாய்சிவபுரத்தரசேதிருப்பெருந்து
றையுறைசிவனே யந்தமிலமுதே யரும்பெரும்பொருளேயார
முதேயடியேனை வந்துயவாண்டாய் வாழ்கிலேன்கண்டாய்
வருகவென் றருள்புரியாயே

திருச்சிற்றம்பலம்.

## திருச்சாழல்.

பூசுவதும்வெண்ணீறு பூண்பதுவும்பொங்கரவம்
பேசுவதுந்திருவாயான் மறைபோலுங்காணேடீ
பூசுவதும்பேசுவதும்பூண்பதுவுங்கொண்டென்னை
யீசனவனெவ்வுயிர்க்கு மியல்பானான் சாழலோ 1

என்னப்பனெம்பிரா னெல்லார்க்குந் தானீசன்
றுன்னம்பெய்கோவணமாக்கொள்ளுமது வென்னேடீ
மன்னுகலைதுன்னுபொருண் மறைநான்கேவான்சரடாத்
தன்னையேகோவணமாச் சாத்தினன்காண்சாழலோ 2

கோயில்சுடுகாடு கொல்புலித்தோ னல்லாடை
தாயுமிலிதந்தையிலி தான்றனியன்காணேடீ
தாயுமிலிதந்தையிலி தான்றனியனாயிடினுங்
காயிலுலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ 3

அயனையனங்கனை யந்தகனைச் சந்திரனை
வயனங்கண்மாயா வடுச்செய்தான் காணேடீ
நயனங்கண்மூன்றுடைய நாயகனே தண்டித்தாற்
சயமன்றோ வானவர்க்குத் தாழ்குழலாய்சாழலோ 4

அருந்தவருக்காலின்கீழ் அறமுதலா நான்கினையு
மிருந்தவருக்கருளுமது வெனக்கறிய வியம்பேடீ
யருந்தவருக்கறமுதனான் கன்றருளிச்செய்திலனேற்
றிருந்தவருக்குலகியற்கை தெரியாகாண் சாழலோ 5

திருச்சிற்றம்பலம்

## அருட்பத்து

திருச்சிற்றம்பலம்

சோதியேசுடரே சூழொளிவிளக்கே சுரிகுழற்பணைமுலை மடந்தை,பாதியேபரனே பால்கொள்வெண்ணீற்றாய்பங்கயத் தயனுமாலறியா,நீதியேசெல்வத்திருப் பெருந்துறையினிறை மலக்குருந்தமேவியசீ ராதியேயடியே னாதரித்தழைத்தாலதெந் துவேயென் றருளாயே. 1

நிருத்தனேநிமலா நீற்றனேநெற்றிக்கண்ணனேவிண்ணு ளோர்பிரானேயொருத்தனேயுன்னை யோலமிட்டலறி யுலகெ லாந்தேடியுங்காணேன் றிருத்தமாம்பொய்கைத் திருப்பெருந் துறையிற்செழுமலர்க்குருந்தமேவியசீ ரருத்தனேயடியேனாத ரித்தழைத்தல தெழுந்துவேயென் றருளாயே 2

எங்கணாயகனே யென்னுயிர்த்தலைவா வேலவார்குழலிமா ரிருவர் தங்கணாயகனே தக்கநற்காமன் றனதுடறழலெழ விழித் தசெங்கணாயகனே திருப்பெருந்துறையிற்செழுமலர்க்குருந்த மேவியசீரங்கணாவடியே னாதரித்தழைத்தாலதெந்துவேயென் றருளாயே. 3

முத்தனேமுதல்வா முக்கணாமுனிவா மொட்டறா மலர்ப
றித்திறைஞ்சிப் பத்தியாய்நினைந்து பரவுவார்தமக்குப் பரகதி
கொடுத்தருள்செய்யுஞ் சித்தனேசெல்வத் திருப்பெருந்துறை
யிற்செழுமலர்க்குருந் தமேவியசீ ரத்தனேயடியேனுனைத்தரித்தழை
த்தாலதெந்துவேயென் றருளாயே. 4

திருச்சிற்றம்பலம்.

## பிடித்தபத்து.

உம்பர்கட்கரசே யொழிவறநிறைந்த யோகமேயூற்றை
யேன்றனக்கு வம்பெனப்பழுத்தென் குடிமுழுதாண்டு வாழ்
வரவாழ்வித்தமருந்தே செம்பொருட்டென்னைச் சிக்கெனப்பிடி
த்தே னெங்கெழுந்தருளுவதினியே 1

அம்மையேயப்பா வொப்பிலாமணியேயன்பினில்விளைந்
தவாரமுதேபொய்ம்மையேபெருக்கிப்பொழுதினைச்சுருக்கும்
புழுத்தலைப்புலையனேன் றனக்குச் செம்மையேயாய சிவபதம
ளித்தசெல்வனே சிவபெருமானே யிம்மையேயுன்னைசிக்கெ
னப்பிடித்தே னெங்கெழுந்தருளுவதினியே 2

திருச்சிற்றம்பலம்.

## திருப்புலம்பல்.

பூங்கமலத்தயனொடுமா லறியாதநெறியானே
கோங்கலர்சேர் குவிமுலையாள் கூறாவெண்ணீறாடி
யோங்கெயில்சூழ்திருவாரூ ருடையானேயடியேனின்
பூங்கழல்களவையல்லா தெவையாதும்புகழேனே 1

சடையானே தழலாடீ தயங்குமூவிலைச்சூலப்
படையானேபரஞ்சோதீ பசுபதீமழவெள்ளை
விடையானே விரிபொழில்சூழ் பெருந்துறையாயடியேனு
னுடையானேயுனையல்லா துறுதுணைமற்றறியேனே 2

உற்றாரையான்வேண்டே னூர்வேண்டேன்பேர்வேண்டேன்
கற்றாரையான்வேண்டேன் கற்பனவுமினியமையுங்
குற்றாலத்தமர்ந்துறையுங் கூத்தாவுன்குரைகழற்கே
கற்றாவின்மனம்போலக் கசிந்துருகவேண்டுவனே 3

திருச்சிற்றம்பலம்.

## அச்சோதிப்பதிகம்.

முத்திநெறியறியாத மூர்க்கரொடுமுயல்வேனைப்
பத்திநெறியறிவித்துப்பழவினைகள்பாறும்வண்ணஞ்
சித்தமலமறுவித்துச் சிவமாக்கியெனையாண்ட
அத்தனெனக்கருளியவா றார்பெறுவாரச்சோவே 1
நெறியல்லாநெறிதன்னை நெறியாகநினைவேனைச்
சிறுநெறிகள்சேராமே திருவருளேசேரும்வண்ணங்
குறியொன்றுமில்லாத கூத்தன்றன் கூத்தையெனக்
கறியும்வண்ணமருளியவா றார்பெறுவாரச்சோவே 2
பொய்யெல்லாமெய்யென்று புணர்முலையார்போகத்தே
மையலுறக்கடவேனை மாளாமேகாத்தருளித்
தையலிடங்கொண்டபிரான் றன்கழலேசேரும்வண்ண
மையனெனக்கருளியவா றார்பெறுவாரச்சோவே 3
மண்ணதனிற்பிறந்தெய்த்து மாண்டுவிழக்கடவேனை
யெண்ணமிலாவன்பருளி யெனையாண்டிட்டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீறணிவித்துத் தூய்நெறியேசேரும்வண்ண
மண்ணலெனக்கருளியவா றார்பெறுவாரச்சோவே 4
பஞ்சாயவடிமடவார் கடைக்கண்ணாலிடர்ப்பட்டு
நெஞ்சாயதுயர்கூர நிற்பேனுன்னருள்பெற்றே
னுய்ஞ்சேனானுடையானே யடியேனைவருகவென்
றஞ்சேலென்றருளியவா றார்பெறுவாரச்சோவே 5

திருச்சிற்றம்பலம்.

மாணிக்கவாசகசுவாமிகள் திருவடிகளேசரணம்.

உ

சிவமயம்.

# தாயுமான சுவாமிகள் அருளிச்செய்த
# திருப்பாடல்கள்.

அங்கிங்கெனாதபடியெங்கும்பிரகாசமாயானந்தபூர்த்தியாகி
யருளொடுநிறைந்ததெது தன்னருள்வெளிக்குளேயகிலாண்ட
கோடியெல்லாந்தங்கும்படிக்கிச்சைவைத்துயிர்க்குயிராய்த்தழை
த்ததெது மனவாக்கினிற் றட்டாமனின்றதெது சமயகோடிக
ளெல்லாந்தந்தெய்வமெந்தெய்வமென் றெங்குந்தொடர்ந் தெ
திர்வழக்கிடவுநின்றதெது வெங்கணும்பெருவழக்காயாதினும்
வல்லவொரு சித்தாகியின்பமா யென்றைக்குமுள்ளதெதுமே
ற்கங்குல்பகலறநின்றவெல்லையுளதெது கருத்திற்கிசைந்தது
வேகண்டனவெலாமோன வுருவெளியதாகவுங்கருதியஞ்சலி
செய்குவாம். 1

வாசாகயிங்கரிய மன்றியொருசாதன மனோவாயு நிற்கும்
வண்ணம்வாலாயமாகவும்பழகியறியேன்றுறவுமார்க்கத்தினிச்
சைபோல நேசானுசாரியாய் விவகரிப்பேனந்தநினைவையுமறந்
தபோதுநித்திரைகொள்வேன்றேக நீங்குமெனவெண்ணிலோ
நெஞ்சந்துடித்தருள்வேன் பேசாதவானந்த நிட்டைக்குமறிவி
லாப் பேதைக்கும்வெகுதூரமேபேய்க்குணமறிந்திந்தநாய்க்கு
மொருவழிதெரியபேரின்ப நிட்டையருள்வாய், பாசாடவிக்கு
ளேசெல்லாவர்க்கருள் பழுத்தொழுகுதேவதருவே, பார்க்கு
மிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற பரிபூரணானந்தமே. 2

ஆழாழிகரையின்றி நிற்கவிலையோகொடியவாலமமுதாக
விலையோ, வக்கடலின்மீதுவடவன்னிற்கவில்லையோ வந்தரத்
தகிலகோடி, தாழாமனிலைநிற்கவில்லையோ மேருவுந்தனுவாக
வளையவிலையோ, சப்தமேகங்களும்வச்ரதரனாணையிற்சஞ்சரித்
திடவிலையோ, வாழாதுவாழவே யிராமனடியாற்சிலையு மட
மங்கையாகவிலையோ, மணிமந்த்ரமாதியால்வேண்டுஞ் சித்திக
ளுலக மார்க்கத்தில் வைக்கவிலையோ, பாழானவென்மனங்
குவியவொருதந்திரம் பண்ணுவதுனக்கருமையோ, பார்க்கு
மிடமெங்குமொருநீக்கமறநிறைகின்ற பரிபூரணானந்தமே. 3

ஆசைக்கோரளவில்லை யகிலமெல்லாங்கட்டி யாளினுங்க
டன்மீதிலே, யாணைசெலவேநினைவரளகேசனிகராகவம் பொ
ன்மிகவைத்தபேரு, நேசித்துரசவாத வித்தைக்கலைந்திடுவர்
நெடுநாளிருந்தபேரு, நிலையாகவேயினுங்காயகற்பந்தேடிநெஞ்
சுபுண்ணாவரெல்லாம், யோசிக்கும்வேளையிற் பசிதீரவுண்பது
முறங்குவதுமாகமுடியு, முள்ளதேபோதுநானானெனக்குளறி
யேயொன்றைவிட்டொன்றுபற்றிப், பாசக்கடற்குளே வீழா
மன்மனதற்றபரிசுத்தநிலையையருள்வாய், பார்க்குமிடமெங்கு
மொருநீக்கமறநிறைகின்ற பரிபூரணானந்தமே. 4

மின்னனைய பொய்யுடலை நிலையென்றுமையிலகு விழி
கொண்டுமையல்பூண்டு, மின்னார்சிற்றின்பமே மெய்யென்றும்
வளர்மாட மேல்வீடுசொர்க்கமென்றும், பொன்னையறியாதவ
ளர்பொருளென்றபோற்றிப்பொய்வேஷமிகுதிகாட்டி, பொ
றையறிவுதுறவீகலாதிநற்குணமெலாம் போக்கிலேபோகவிட்

டுத், தன்னிகரிலேபாதி பாழ்ப்பேய்பிடித்திடத் தரணியிலை
லோகாதயன், சமயநடைகாராமல்வேதாந்தசமரசசிவானுபூதி,
மன்னவொருசொற்கொண் டென்னைத்ததேத்தாண்டபின்வாழ்வி
த்தஞானகுருவே, மந்த்ரகுருவேயோக தந்த்ரகுருவே மூலமா
யில்வருமௌனகுருவே. 5

பண்ணேனுனக்கான பூசையொருவடிவிலே பாவித்தி
றைஞ்சவாங்கே, பார்க்கின்றமலருமே நீயேயிருத்தியப் பணிம
லரெடுக்கமனமு, நண்ணேனலாமலிருகைதான் குவிக்கவெனி
னானுமென்னுளநீற்றி, நான்கும்பிடும்போதனைக்கும் பிடாத
லாநான் பூசைசெய்யின்முறையோ, விண்ணேவிணுதியாம்பூத
மோதமே வேதமேவேதாந்தமே, மேதக்கேள்விமேய கேள்வி
யாம் பூமிக்குள் வித்தேயவித்தின்முளையே, கண்ணேகருத்தே
யென்னை யெழுத்தே கதிக்கானமோனவடிவே, கருதரிய
சிற்சபையி லானந்தநிர்த்தமிடு கருணாகரக்கடவுளே. 6

எண்ணரியபிறவிதனின் மானிடப்பிறவிதா னியாதினு
ம்மரிதரிதுகா, ணிப்பிறவிதப்பினெ லெப்பிறவிவாய்க்குமோவே
திவருமோவறிகிலேன், கண்ணகநிலத்துநாசனுள்ளபொழுதே
யருட் கனவட்டத்தினின்று, காலூன்றிநின்றுபொழி யான
ந்தமுகிலொடு கலந்துமதியவசமுறவே, பண்ணுவது நன்மை
யிந்நிலைபதியுமட்டுமேபதியாயிருந்ததேதப், பரிவுநிலையாமலே
கொளரிகுண்டலியாயிபண்ணவிதனருளிறவே, விண்ணிலவு
மதியமுதமொழியாது மொழியவே வேண்டுவேனுமதருமை
நான் வேதாந்தசித்தாந்த சமரசநன்னிலைபெற்ற வித்தகசித்
தர்கணமே. 7

ஆணிலேபெண்ணிலே யென்போலவொருபேதை யகி
லத்தினிசையுள்ளதோ, வாடியகறங்குபோ லோடியுழல்சிந்
தையடக்கியொருகணமேனும்யான், காணிலேன்றருவரு

ளையல்லாது மௌனியாய்க் கண்மூடியோ மூச்சைக், கட்டிக்க
லாமதியை மூட்டவேமூலவெங்கனலினை யெழுப்பவினிவும்,
பூணிலே னிற்றைநாட்கற்றதுங்கேட்டதும் போக்கிலேபோக
விட்டேப், பொய்யுலகு தாயிலே யாயினுங்கடையான புன்மையே
னின்னமின்னம், வீணிலே யவாமன் மயலிலக்காக நீவெளி
ப்படத்தோற்றல்வேண்டும், வேதாந்தசித்தாந்த சமரசநன்னி
லைபெற்றவித்தகச்சித்தர்கணமே. 8

கல்லாதபேர்களே நல்லவர்க ணல்லவர்கள் கற்றுமறிவில்
லாதவென், கர்மத்தையென்சொல்வேன் மதியை யென்சொல்
லுவேன் கைவல்யஞானநீதி, நல்லோருரைக்கிலோ கர்மமுக்
கியமென்று, நாட்டுவேன் கர்மமொருவனுட்டிலோ பழைய
ஞானமுக்கியமென்று நவிலுவேன் வடமொழியிலே, வல்லா
னொருத்தன் வரவுந்திராவிடத்திலே வந்ததா விவகரிப்பேன்,
வல்லதமிழறிஞர் வரின் அங்ஙனே வடமொழியின் வசனங்கள்
சிறிதுபுகல்வேன், வெல்லாமலெவரையு மருட்டிவிடவகைவந்த
வித்தையென முத்திதருமோ, வேதாந்தசித்தாந்த சமரசநன்
னிலைபெற்ற வித்தகச்சித்தர்கணமே 9

---

கொல்லாமையெத்தனை குணக்கேட்டைநீக்குமக் குண
மொன்றுமொன்றிலேன்பாத-கோபமெத்தனைபக்ஷபாதமெத்த
னைவன்குணங்களெத்தனை கொடியபாழ்ங் - கல்லாமையெத்த
னையகந்தையெத்தனை மனக்கள்ளமெத்தனையுள்ள.சக்காரியஞ்
சொல்லிடவு மரியமையெத்தனைகதிக்கென் றமைத்ததவருளிற்
செல்லாமையெத்தனை வீர்த கோஷ்டியென்னிலோ செல்லு
மெத்தனைமுயற்சி சிந்தையெத்தனைசலனமிந்த்ரசாலப்போன்
றதேகத்தில்வாஞ்சைமுதலா - பல்லாமையெத்தனைய மைத்த
னையுனக்கடிமையானே னினைக்குமானோ வண்டபகிரண்ட
மூடங்கவொருநிறைவாகி யானந்தமானபரமே. 10

கல்லேனுமையவொரு காலத்திலுருகுமென் கல்னெஞ்ச
முருகவிலையோ, கருணைக்கிரங்காத வன்மையைநான்முகன்
கற்பிக்கவொருகடவுளோ, வல்லான்வகுத்ததே வாய்க்காலெ
னும்பெருவழக்கிற்கிழுக்குமுண்டோ, வானமாய்நின்றின்ப மழை
யாயிரங்கியென்னை வாழ்விப்பதுன்பாரங்காண், பொல்லாதசே
யெனிற்றாய்த்தள்ளனீதமோ புகலிடம்பிறிதுமுண்டோ, பொ
ய்வார்த்தைசொல்லிலோ திருவருட்கயலுமாய்ப் பன்மையே
னாவனந்தோ, சொல்லான்முழக்கிலோ சுகமில்லையெளிய
ய்ச் சும்மாவிருக்கவருளாய், சுத்தநிர்க்குணமான பரதெய்வமே
பரஞ்சோதியேசுகவாரியே 11

அரும்பொனேமணியே யென்னன்பேயென்னன்பான வறி
வேயெனறிவிலூறு மானந்தவெள்ளமே யென்றென்றுபாடி
னேனாடினேனாடிநாடி, விரும்பியேகூவினே னுளறினேனல
றினேன் மெய்சிலிர்த் திருகைகூப்பி, விண்மாரியெனவெனிரு
கண்மாரிபெய்யவே வேசற்றயர்ந்தேனியா, னிரும்புநேர் நெ
ஞ்சகக்கள்வனாகிலுமெனை யிடைவிட்டுநின்றதுண்டோ, வெ
ன்றுநீயன்றுநானுன்னடிமை யல்லவோ யாதேனுமறியாவெ
றுந், துரும்பனேனென்னினுங் கைவிடுதனீதியோ தொண்
டரொடுகூட்டிகொண்டாய், சுத்தநிர்க்குணமான பரதெய்வமேப
ரஞ்சோதியேசுகவாரியே. 12

அவனன்றி யோரணுவு மசையாதெனும்பெரியர்வாய்த்த
மொழியொன்றுகண்டா லறிவாவதேது சிலவறியாமையேதி
வைதீர்க்க வறிவார்களார், மௌனமோடிருந்ததா மென்

போலுடம்பெலாம்வாயால் பிதற்றுமவரார் மனதெனவுமொரு மாயையெங்கேயிருந்துவரும்வன்மையோடிரக்கமெங்கே. புவனம்படைப்ப தென்கர்த்தவியமெவ்விடம் பூதபேதங்களெவ்விடம் பொய்மெய்தமகிதமேல் வருநன்மை தீமையொடுபொறைபொறுமையுமெவ்விட, மெவர்சிறிய ரெவர்பெரியரெவருறவ ரெவர்பகைஞர் யாதுமுனையன்றியுண்டோ விகற்பமிரண்டினிலுமுயிரினுக்குயிராகி யெங்குநிறைகின்றபொருளே. 13

காகமானது கோடி கூடுகின்றாலுமொரு கல்லின்முன்னெதிர்நிற்குமோ கர்மமானதுகோடிமுன்னேசெய்தாலுநின்கருணைப்ரவாகவருளைத், தாகமாய்நாடினரை வாதிக்கவல்லதோ தமியனேற் கருட்டாகமோ சற்றுமிலையென்பதுவும் வெளியாச்சவினையெலாஞ் சங்கேத மாய்க்கூடியே, தேகமானதைமிகவும்வாட்டுதே துன்பங்கள் சேராமல்யோகமார்க்க சித்தியோவரவில்லை சகசநிட்டைக்குமென் சிந்தைக்கும்வெகுதூரநா, னேகமாய் நின்னொடிருக்குநாளெந்நாளிந்நாளின் முற்றுறாதோ விகற்பமிரண்டினிலு முயிரினுக்குயிராகி யெங்குநிறைகின்றபொருளே. 14

பாசத்தினாற்கவிதை பாடிப்படிக்கவோ பத்திநெறியில்லை வேத பாராயணப்பனுவன் மூவர்செப்பனுவலதுபகரவோவிசையுமில்லை, யோகத்திலேசிறிது முயலவென்றாற் றேகமோவ்வாதிலுண்வெறுத்தாலுயிர் வெறுத்திடலோச்சு மல்லாதுகிரியைசரூபாபத்தினாற்செய்யவோ, மோகத்திலேசிறிது மொழியவில்லைபெருஞ்ஞான மோனத்திலிருக்கவென்றான் முற்றுதுபரிபாகசத்திசவனேனின் மூதறிவிலேபெருந்த, தாசசதிலேவ

ய்க்குமமிர்தப்ரவாகமே தன்னந்தனிப்பெருமையே சர்வபரிபூரணவகண்டதத்துவமான சச்சிதானந்தசிவமே. 15

இனியேதெனக்குனருள் வருமோவெனக் கருதியேங்குதே நெஞ்சமையோ வின்றைக்கிருந்தாரை நாளைக்கிருப்பரென்றெண்ணவோ திடமில்லையே, யனியாயமாயிந்த வுடலைநானென்றுவரு மந்தகற்காகவோ வாடிததிருந்துநான் கற்றதுங் கேட்டது மவலமாய்ப்போதன்றோ, கனியேனும் வறியசெங்காயேனு முதிர்சருகுகந்த மூலங்களேனுங் கனல்வாதைவந்தெய்தி னள்ளிப்புசித்துநான் கண்மூடிமௌனியாகித், தனியேயிருப்பதற்கெண்ணினே னெண்ணமிது சாமிநீயறியாததோ சர்வபரிபூரணவகண்டதத்துவமான சச்சிதானந்தசிவமே.

வேதாவையிவ்வண்ணம் விதித்ததே தென்னினுன்வினைப்பதிடென்பனந்த, வினைபேசுவறியாதுசிற்கவிவைமனதால் விளைத்ததான் மனலதநாடிற், போதமேசிற்குமப் போதத்தைநாடிலோ போதமுநிறுல்விளக்கம் பொய்யன்றுதெய்வமறைபாவுமே நீயென்று போக்குவரவறநிறுத்து மாதாரவாதேயமுழுதுமோ துலாவகிலமீதென்னையாட்டி யாடல்கண்டவனுநீ யாடுகின்றவனுநீ யருளுநீமௌனஞான, தாதாவுநீ பெற்றதாய் தந்தைதாரமுநீ தமருநீயாவுநீகாண சர்வபரிபூரண வகண்டதத்துவமான சச்சிதானந்தசிவமே. 18

தந்தைதாய்தமர்தார மகவென்னு மிவையெலாஞ் சந்தியிற் கூட்டமிதிலோ. சந்தேகமில்லைமணி மாடமாளிகைமேடை சதுரங்கசேனையுடனே, வந்ததோர்வாழ்வுமோ ரிந்த்ரசாலக்கோலம் வஞ்சனைபொருளைமலோபம் வைத்தமனமாங்கிரும் சே

ந்தமலபாண்டமோ வஞ்சனையிலாதகனவே, யெந்தநாளுஞ்சரி யெனத் தேர்ந்துதேர்ந்துமே யிரவுபகலில்லாவிடத் தேகமாய் நின்றநின்னருள்வெள்ளமீதிலே யானென்பதறவுமூழ்கிச், சிந்தைதான்றெளியாது சுழலும்வகையென்கொலோ தேடறிய சத்தாகியென் சித்தமிசைகுடிகொண்டவறிவான தெய்வமே தேசோமயானந்தமே.

ஆராரெனச்சொன்ன போதித்துமென்னவென் னறிவினை மயக்கவசமோ வண்டகோடியையெலாங் கருப்பவரை போலவ மடக்காவைத்துப் பேரபநின்றபர வெளியிலேமன வெளி பிறங்குவத லாதோன்றிலும் பின்னமுறமருவாது நன்னயத்தாளினிபேரின்ப முத்திநிலையுந்தாராதுதள்ளவும் பேர் காதுஞலத தள்ளினும் போசேனியான் றடையேதுமில்லை யாண்டவனடிமை யென்னுமொரு தன்மையிலு மென்வழக்குத், தீராதுவிடுவதில்லை கடுவானகடவுளே தேடரிய சித்தாகியென் சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே தேசோமயானந்தமே.

கந்துகமதகரியை வசமாய் நடத்தலாங் கரடிவெம்புலிவயையுங் கட்டலாமொருசிங்க முதுகின்மேறகொள்ளலாங் கயசெவிபெடுத்தாட்டலாம் வெஞ்சழனிறசம்மைத் தைந்துலோகத்தையும்வேதித்துவித்துண்ணலாம் வேறொருவர்காணுமலுலத்துலாவலாம விண்ணவரையேவல்கொளலாஞ், சந்ததமுமிளமையோ டிருக்கலா மற்றொருசரீரத்திலும் புகுதலாஞ் சலமேனடக்கலாங் கனல்மேலிருக்கலாந் தன்னிகரில்சித்தி பெறலாஞ், சிந்தையையடக்கியே சும்மாவிருக்கின்ற திறமரிது சத்தாகியென் சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே தேசோமயானந்தமே.

தாயுமான சுவாமிகள் திருவடிகளே சரணம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## இராமலிங்கசுவாமிகள் அருளிச்செய்த

# திருவருட்பா.

## நாமாவலி.

இராகம்-இந்துஸ்தான் பியாக்-தாளம்.

திருச்சிற்றம்பலம்

அம்பலத்தரசேயருமருந்தே யானந்தத்தேனேயருள்விருந்தே
பொதுநடத்தரசேபுண்ணியனே புலவரெலாம்புகழ்கண்ணிய
மலைதருமகளேமடமயிலே மதிமுகவமுதேயிளங்குயிலே னே
ஆனந்தக்கொடியேயிளம்பிடியே யற்புதத்தேனேமலைமானே 4
சிவசிவசிவசிவசின்மயதேஜா சிவசுந்திரகுஞ்சிதநடராஜா 5
படனவிவேகபரம்பரவேதா நடனசபேசசிதம்பரநாதா 6
அரிபிரமாதியர்தேடியநாதா அரகரசிவசிவவாடியபாதா 7
அந்தணவங்கணவம்பரபோகா அம்பலநம்பரவம்பிகைபாகா 8
அம்பரவிம்பசிதம்பரநாதா அஞ்சிதாந்சிதகுஞ்சிதபாதா 9
தந்திரமந்திரயந்திரபாதா சங்கரசங்கரசங்கரநாதா 10
இக்கரைகடந்திடிலக்கரைமேய இருப்பதுசிதம்பரஞ்சர்க்கரைமேய
என்னுயிருடம்பொடுசித்தமுதே இனிப்பதுநடராஜபுத்தமுதே
ஐவர்திருச்சபையாடகமே ஆடுதலானந்தநாடகமே 13
உத்திரஞானசிதம்பரமே சித்தியெலாந்தருமம்பரமே 14

பரசிவதோத்திரம்.

விண்ணுடையாய்வெள்ளி வெற்புடையாய்மதியேவுசடைக்
கண்ணுடையாய்நெற்றிக் கண்ணுடையாயருட்கண்ணுடையா
டண்ணுடையாய்இனைசட்டுடையா யிடப்பாலருட் (மே
டெண்ணுடையாய்வந்தெப் பிட்டுடையாயென்பெருஞ்செல்வ

விடையுடையாய்மறை போதுடையாய்மதியேவிடசெஞ்
சடையுடையாய்சொன்மறைத் தாருடையாய்கரந்தாங்குமழுப்
படையுடையாயருட்டண்புடையாய் தென்பாகையின்பா
னடையுடையாயருளுடையாய்தால்குவே

கீளுடையாபியக்கீறுடையோ யெக்கிளைத்தலைமேற்
றூளுடையாய்செஞ்சடையுடையாயென்றனையுடையாய்
வாளுடையாய்மலையாளுடையாய் கலைமானுடையா
யாளுடையாய்மன்றுளாட்டுடையாய் யெனையாண்டருளே.

* ண்படும்பாடுசிவனேயுலகர் நவிலும்பஞ்சு
தான்படுமோசொல்லத்தான்படுமோ வெண்ணத்தான்படுமோ
சான்படுகண்ணியின் மாபுமாறுகலங்கிகின்றே
னேன்படுகின்றனையென்றிரங்கா யென்னிலென்செய்வேனே

விண்ணே விண்ணுருவே விண்முதலே விண்ணு வெ
ளியேயவ்வெளிவிளங்கு வெளியேயென்றன் கண் ணேகண்
மணியே கண்ணொளியேகண்ணுட்கலந்துநின்றகதிரே யக்கதி
ரின்வித்தே, தண்ணேதண்மதியேயம்மதியிற்பூத்த தண்ணமு
தே சாரமேசொற் கண்ணேபண்ணிசையே பண்பயமே பண்
ணின்பயனே மெய்த்தவர்வாழ்த்திப்பரவுந்தேவே. 5

சுழியாத வருட்கருணைப் பெருக்கேயென்றுந் தூண்டா தமணிவிளக்கின் சோதியேவா, னொழியாதுகதிர்பரப்புஞ் சுடரேயன்பர்க் கோவாதவன்பருளு மொன்றேவிண்ணோர், விழியாலுமொழியாலு மனத்தினாலும் விழைதருமெய்த் தவத்தாலும் விளம்புமெத்தவழியாலுங்கண்டுகொளற்கரிதாய்ச்சுத்த மௌனவெளியூடிருந்து வயங்குந்தேவே. 6

குலத்திடையுங்கொடியனொருதடித்தனத்துங்கொடியேன், குடிகளிலுங்கொடியனன்றிக் குணங்களிலுங் கொடியேன் மலத்திடையேபுழுத்தசிறு புழுக்களிலுங் கடையேன், வன்மனத்துப் பெரும்பாவி வஞ்சநெஞ்சப்புலையேன், நலத்திடையோரணுவளவும் நண்ணுகிறேன் பொல்லநாயக்குநகை தோன்றநின்றேன் பேய்க்குமிக விழித்தேன், நிலத்திடைநானென்பிறந்தேனின்கருத்தையறியே, னிர்க்குணனே நடராஜநிபுணமணிவிளக்கே.

விளக்கறியாவிருட்டறையிற்கவிழ்ந்துகிடந்தழுது விம்முகின்ற குழவியினு மிகப்பெரிதுஞ் சிறியேன், அளக்கறியாத் துயர்க்கடலி லழுந்திநெடுங்கால மலைந்தலைந்து மெலிந்ததுரும்பதனின் மிகத்திருப்பேன், கிளக்கறியாக் கொடுமையெலாங் கிளைத்தபழுமரத்தேன்கெடுமதியேன்கடுமையினேன் கிறிபேசும்வெறியேன், களக்கறியாப்புவியிடைநானென்பிறந்தேனந்தோ கருணைநடத்தரசேநின் கருத்தையறியேனே. 8

அரசரெலாமதித்திடப் பேராசையிலேயரசே டாலெனவே மிகக்கிளைத்தே னருளறியாக்கடையேன், பாசமரம்போற்

பருத்தே னெட்டியெனத்தழைத்தேன், புக்கெனவும்புளியெ
னவுமங்கியுயிர்கின்றேன் பரசுவலகைத்தெரிந்துகொளேன்தெரி
ந்தாரைப்பணியேன், பசையறியாக்கருங்கன்மனப் பாரைசுமந்
துழல்வேன், விரகிலத்தேன்பிறந்தேனின்கருத்தையறியேன்
வியக்குமணிமன்றோங்கி விளங்குபரம்பொருளே. 9

பொருளறியேன் பொருளறிந்தார் போன்றுநடித்திங்கே
பொங்கிவழிந்துடைகின்றேன்பொய்யகத்தேன்புலையேன்மரு
ளறியாத்திருவாய ருளங்கயக்கத்திரிவேன் வையுண்மெழுவு
தசமாடென வேதடித்தேன், வெருளறியக்கொம்மனத்தேன்வி
ழற்கிறைத்துக் களிப்பேன் வீணர்களிற்றலைநின்றேன் விளக்
கீனத்தும்புரிவேன், தெருளறியே னுலகிடைநானேன்பிறந்
தேனினது திருவுளத்தையறிந்திலேன்தெய்வநடத்தவனே

மருந்தறியேன்மதியறியேன் மந்திரமொன்றறியேன் மதி
யறியேன்விதியறியேன் வாழ்க்கைநிலையறியேன், இருந்தறி
யேன் றிருவருளின் செயலறியேனறந்தான் செய்தறியேன்
மனமடங்குந்திறத்தினிலோரிடத்தே, யிருந்தறியேனிந்நோ
ரை யேத்திடவுமறியே னெந்தைபிரான்மணிமன்றமெய்தவறி
வேனோ, விருந்ததிசைசொல்லறியே னெங்ஙனநான்புகுவே
ன் யார்க்குரைப்பேனென்னசெய்வே னேதுமறிந்திலனே.

வெறுத்துரைத்தேன்பிழைகளெல்லாம்பொறுத்தருள்வே
ண்டும் விளங்கறிவுக்கறிவாகு மெய்ப்பொதுவினடிப்போய்'
கறுத்துரைத்தார்தமக்குமருள்கனிந்துரைக்கும்பெரியகருணை

153 , 154 pages missing in book

ழையுலகுயிர்த்துயர மினிப்பொறுக்கமாட்டேன் கொடுத்தரு
ளின் னருளொளியைக் கொடுத்தருளிப்பொழு
தே. 18

உன்னைமறந்திடுவேனோ மறப்பறியேன் மறந்தாலுயிர்
விடுவேன்கணந்தரியே னுன்னாணையிதுநீ, யென்னைமறந்திடு
வாயோமறந்திடுவாயெனிலியா னென்னசெய்வே னெங்குறு
வேனெவர்க்குரைப்பே னெந்தா, யன்னையினுந்தயவுடையாய்
நீதந்தாயென்னினு மகிலமெலாமளித்திடினி னருண்மறவா
தென்றே யின்னுயிர்க்களித்திங்கே யிருக்கின்றேனமறவே
விதுதருணமருட்சோதி யெனக்குவிளைந்தருளே. 19

அருள்விளக்கே யருட்சுடரே யருட்சோதிச்சிவமேயருளா
ரமுதேயருணிறைவேயருள்வடிவப்பொருளே, யிருள்கடிந்தென்
னுளமுழுது மிடங்கொண்டபதியே யென்னறிவேயென்னுயி
ரே யெனக்கினியவுறவே, மருள்கடிந்தமாமணியே மாற்றறியா
ப்பொன்னே மன்றில்நடம்புரிகின்ற மணவாளாவெனக்கே,
தெருளளித்ததிருவாளா ஞானவுருவாளா தெய்வநடத்தரசே
நான்செய்மொழியேற்றருளே 20

கோடையிலே யிளைப்பாற்றிக் கொள்ளும்வகைகிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்தகனியே, ஓடையிலே
யூறுகின்ற தீஞ்சுவைத்தண்ணீரே யுகந்தண்ணீ ரிடைமலர்ந்
தசுகந்தமணமலரே, மேடையிலேவீசுகின்ற மெல்லியபூங்காற்
றேமென்காற்றில்விளைசுகமே சுகத்திலுறும்பயனே, யாடைவி

லேயெனைமணந்தமணவாளாபொதுவிலாடுகின்றவரசேயென்னலங்கலணிந்தருளே. 21

ஐக்கிசைந்தபொருளேயென் கருத்திசைந்த கனிவே கண்ணேயென்கண்களுக்கு கலந்திசைந்தகணவா, மெய்க்கிசைந்தமணிபயபொன் மேடையிலென்னுடனேமெய்கலந்ததருணத்தே விளைந்தபெருஞ்சுகமே, செய்க்கிசைந்தவுணவேயென்னெறிக்கிசைந்தநிலையே நித்தியமேயெல்லாமஞ் சத்தியமேயுலகில்பொய்க்கிசைந்தார்காணாதேபொதுநடஞ்செய்யரசேபுன்மொழியென்றிகழ்ந்தே புனைந்துமகிழ்ந்தருளே. 22

தனித்தனிமுக்கனிபிழிந்து வடித்தொன்றாக்கூட்டிச்சர்க்கரையுங்கற்கண்டின் பொடியுமிக்கலந்தே, தனித்தாறுந்தேன்பெய்து பசும்பாலின்தெங்கின் தனிப்பாலுஞ் சேர்த்தொரு தீம்பருப்பிடியும்விரவி யினித்தநறுநெய்யளைந்தே யிளஞ்சூட்டிணிறக்கி யெடுத்தசுவைக்கட்டியினு மினித்திடுந்தெள்ளமுதேயனித்தமறத் திருப்பொதுவில் விளங்குநடத்தரசே யடிமலர்க்கென்சொல்லணியா மலங்கலணிந்தருளே. 23

கண்களிக்கப்புகைசிறிதுங் காட்டாதேயருவக்காலநடுவே விளங்குகின்ற கற்பூரவிளக்கே, பண்களிக்கப்பாடுகின்றபாட்டில்விளைசுகமே மத்தருளே தித்திக்கப் பழுத்ததனிப்பழமே, மண்களிக்கவான்களிக்க மணந்தசிவகாமவல்லியெனமறைகளெலாம்வாழ்த்துகின்றவாமப் பெண்களிக்கப்பொதுநடஞ்செய் நடத்தரசேநினதுபெருப்புகழ்சேவடிக்கென்சொல்லுமணி தரு தருளே.

உருவெளியேயருவெளிக்கு ளூற்றவெளியுருவே யுருவா
கும்வெளிநடுவ மொன்றானவொன்றே, தெருவெளியேபெரு
வெளியில் பெருஞ்சோதிமயமேபெருஞ்சோதிமயநடுவேபிறக்
குந்தனிப்பொருளே மருமொழியாமலரகத்தே வயங்குமொளி
மணியே மந்திரமேதந்திரமேமதிபரியமருந்தே திருவொழியா
தோங்கிமணி யன்றிநடத்தரசே சிறுமொழியென்றிகழாதே
சேர்த்துமகிழ்ந்தருளே. 25

பார்த்தாலும்நினைத்தாலும் படித்தாலும்படிக்கப்பக்கனின்
றுகேட்டாலும் பரிந்துளுணர்ந்தாலும்சேர்த்தாலும்பிடித்தாலுங்
கட்டியணைத்தாலு மித்தனைக்குந்தித்திக்குமினித்தசுவைகரும்
பே, வேர்த்தாவிமயங்காது கனிந்தநறுங்கனியேமெய்ம்மையறி
வானந்தம் விளக்குமருளமுதே, தீர்த்தாவென்றன்பரெல்லார்
தொழப்பொதுவில்நடக்குந் தெய்வநடத்தரசேயென் சிறுமொ
ழிபேற்றருளே. 26

கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுங் களிப்பே, கா
ணார்க்குங்கண்டவர்க்குங் கண்ணளிக்குங்கண்ணே,வல்லார்க்கு
மாட்டார்க்கும் வரமளிக்கும்வரமே மதிபார்க்குமதிப்பவர்க்கு
மதிகொடுக்குமதியே, நல்லார்க்கும்பொல்லார்க்கும் நடுநின்ற
நடுவே நரர்களுக்குஞ்சுரர்களுக் குநலங்கொடுக்குநலமே, எல்
லார்க்கும்பொதுவினடமிடுகின்றசிவமே யென்னரசேயான்புக
லு மிசையுமணிந்தருளே.

அறிந்தானையறிவறிவுக்கறிவானானை யருட்பெருஞ்சோ
தியினானையடியேனன்பிற, செறிந்தானை யெல்லாஞ்செய்வல்
லசித்தனைச் செறிந்தானைச்சிறுநெறியிற் சென்றார்தம்மைப்,
பிரிந்தானை யென்னுளத்திற் கலந்துகொண்ட பிரியமுள்ளனை

ருமானைப் பிறவிதன்னைப் பெரியானைப் பெரியர் தேடு
நாண்டானைப் பெம்மானைக் கண்டுகளித் திருக்கின்றேனே. 28

பாலானைத் தேனானைப் பழத்தினானைப் பலனுருசெங்கருப்
பானைப்பயந்த வேகாக், காலானைக் கலைசாகாத் தலையினானைக்
காலென்றுந் தனையென்றுங் கருத்திற் செய்தார் மேலானை மேனிலை
மேலமுதானானை மெய்ம்மையுமெய் யானந் தளத்தே விளங்கலன்றி,
யேலானையெனப்பாட லேற்றுக்கொண்ட எம்மானைக் கண்டுகளி
த் திருக்கின்றேனே. 29

அருளாளனை அருட்குருவை யருட்பெருஞ் சோதியை
[illegible] னப்பனையென் னுண்டவனையமுதை
த், தெருணுருவாம் என்னுயிரையென்ற னுயிர்க்குயிரை யெல்லாஞ்
செய்யவல்ல தனித்தலைமைச் சித்தசிகாமணியை, மருவுபெருவா
ழ்வையெல்லா வாழ்வுமெனக் களித்தவாழ் முதலை, மருந்தினை
மாமணியையென் கண்மணியைக் கருணைநடம் புரிகின்ற கனக
சபாபதியைக் கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்
துகொண்டேன் களித்தே. 30

பாட்டுவந்து பரிசளித்த பதியையருட் பதியைப் பசுபதியை
க் கனகசபா பதியையுமா பதியை, தேட்டமிகும் பெரும்பதியை
ச் சிவபதியையெல்லாஞ் செய்யவல்ல தனிப்பதியைத் திகழ்தெ
ய்வப்பதியை, யாட்டியல்செய் தருள்பரம பதியை நவபதியை
யானந்த நாட்டிறைக்கோ ரதிபதியை யரசைக், காட்டியெனை
மணம்புரிந்தே தன்கைப் பிடித்தபதியைக் கண்டுகொண்டேன் கனி
ந்துகொண்டேன் களித்தே 31

மதித்திடுதலறிய வொரு மாணிக்கமணியை வாங்கியபே
ரொளியுடைய வச்சிரமா மணியைத் துதித்திடுவே தாகமத்தின்
முடிமுடித்த மணியைச் சுயஞ்சோதித் திருமணியைச் சித்திவம

ணியை, விதித்தன்முதலொழிவிற்று விர்த்தகுருமணியைவெவி ண்மணியை யம்மணிக்குள்விளங்கியமெய்ம்மணியைக், கதித்த சுகமயமணியைச் சித்தசிகாமணியைக் கொண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்துகொண்டேன் களித்தே. 32

அருட்சோதிதெய்வமெனை யாண்டுகொண்டதெய்வமம் பலத்தேபாடுகின்ற வானந்தத்தெய்வம், பொருட்சாருமறைக ளெல்லாம் போற்றுகின்றதெய்வம் போதாந்தத்தெய்வமுயர் நா தாந்ததெய்வ, மிருட்பாடுநீக்கியொளி யீந்தருளுந்தெய்வமெண் ணியநானெண்ணியவா றெனக்கருளுந்தெய்வம், தெருட்பாடலு வந்தெனையுஞ் சிவமாக்குந்தெய்வஞ் சிற்றம்பலத்தில் நடிக்கின்ற தெய்வமதேதெய்வம். 33

எல்லாஞ்செய்வல்லதெய்வ மெங்குநிறைதெய்வமென்று மிரிற்கலந்தெனைக் கேயின்பநல்குந்தெய்வம், நல்லார்க்குநல்ல தெய்வம் நடுவானதெய்வம், கல்லார்க்குங்கற்றவர்க்கு மளிப்ப ருளுந் தெய்வங்காரணமாந்தெய்வமருட்பூரணமாந்தெய்வஞ்சிற் சபையில்விளங்குகின்ற தெய்வமதேதெய்வம். 34

பதியேயெம்பரனே யெம்பராம்பரனே யெமதுபராபரனே யானந்தப்பதந்தருமெய்ஞ்ஞான நிதியேமெய்ச்சிறைவே மெய் ந்நிலையேமெய்யின்ப நிருத்தமிடுந்தனித்தலைமை மிபணையணிவி ளக்கே, கதியேயென் கண்ணேயென் கண்மணியேயெனது கருத்தேயென் கருத்திலுற்றகனியேசெங்கனியே, துதியே யென்றரையேமென்றேழா வென்னுளத்தே சத்தநடம்புரி கின்றசித்தசிகாமணியே. 35

ஆணைமேயாகமமே யாரணவாகமத்தின் அரும்பொருளே ய ரும்பொருளிருநுபவமேயறிவே, ஆரணமேகோரியமேகாரணரிய

காரியங்கள் கடந்தபெரும்பதியேயென் கருத்தமர்ந்தநிதியே பூ
ரணமேபுண்ணியமே பொதுவிளக்கு மரசேபுத்தமுதேசத்திய
மே பொன்னேசெம்பொருளே தோரணமேவிளங்குசித்தி புத்
திரனுமென்னுளத்துஞ் சுத்தநடம்புரிகின்றசித்தசிகாமணியே

கருணைத்தும்பிப்போதுநோக்குங்கண்ணிற்கிடைத்தகண்
ணேயோர்சனியிற்கனிந்தன் புருவான கருத்தினிற்,கிடைத்த
கெத்தேமெய்யருணன் னிலையிலதுவா யறிவிற்கிடைத்தவறி
ருயன் னகத்துப்புறத்து மொளிநிறைவித் தமர்ந்தகுருவேயைம்
பூதவருணமுதலா யவைகடந்தவரைப்பாய் விளங்கு மணிமன்
றில்வயங்குநடமே யெல்லாஞ்செயவல்ல குருவேயென்னுளத்
தே| தருணநடஞ்செய்யரசேபொன்றுயேயென்னைத், தந்தாயே
தனித்தலைமைப்பதியே யித்தருளவாய்த்ததருணமதே 37

கருவிற்கலந்ததுணையேயென் கனிவிற்கலந்தவமுதே
யென் கண்ணிற்கலந்த வொளியேயென் கருத்திற்கலந்தகளிப்
பேயென்னுருவிற்கலந்தவுறவேயென்னுணர்விற்கலந்தசுகமே
என்னுடையவொருமைப்பெருமானே, தெருவிற்கலந்துவிளை
யாடுஞ் சிறியேன்றனக்கே மெய்ஞ்ஞான சித்தியளித்த பெரு
ங்கருணைத்தேவே யுலகத்திருள்ளவா மருவிக் கலந்துவாழ்வ
தற்கு வாய்த்ததருணமிதுவெனவே வாயே பறையா யறை
கின்றேனெந்தாய் கருணைவலத்தானே.

இராமலிங்கசுவாமிகள் திருவடிகளேசரணம்.

## தேவாரத்திரட்டு முற்றிற்று.